விலை: 30.00
பக்கங்கள்: 16 + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை (15.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 87

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## இத்தாலியிலிருந்து வருகை தந்த இருவர் தமது நோய்த்தொற்றை மறைத்துள்ளனர்

# கொரோனா பரவல் மேலும் அதிகரிக்கும்

### சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

இத்தாலியிலிருந்து வருகை தந்தை இருவர் தமது நோய்த் தொற்றை மறைத்துக் கொண்டே இலங் கைக்கு வந்துள்ளதாகவும், கொரோனா தொற்றுக் குள்ளானவர்களின் தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன என்றும் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க எச்சரிக்கை விடுத் துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வல்லை பற்றைப் பகுதியிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

வல்லை பகுதியில் உள்ள பற்றையிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக நெல்லியடி பொலி ஸார் தெரிவித்தனர். 15

## கொரோனா வைரஸ் மையமாக ஐரோப்பா

### உலக சுகாதார மையம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸின் மைய மாக இன்று ஐரோப்பா உள்ள தாக உலக சுகாதார மையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஐரோப்பிய நாடுகள் முழுமையான 15

## கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டோர் 10 ஆக உயர்வு

(கொழும்பு)

கெரரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஐவர் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கை யில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது.

இத்தாலியிலிருந்து நாடு திரும் பிய 56 வயதுடைய பெண் ஒரு வரும் முன்னைய நோயாளியின் உறவினரான 17 வயதுடைய சிறுமி ஒருவருமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள் ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவை 15

## தடையை மீறி வகுப்பு நடத்திய ஆசிரியர் கைது

(மட்டக்களப்பு)

கொரோனா அச்சம் காரண மாக தனியார் வகுப்புகள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த உத்தரவை மீறி பிரத்தியேக வகுப்பு களை நடத்திய ஆசிரியர் ஒருவர் நேற்றுக் காலை காரைதீவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை வகுப்பு நடத் தப்பட்டதையறிந்து பொதுமக்கள் பிரதேச சபைத் தவிசாளரிடம் முறையிட்டுள்ளனர். அவர் சம்மாந் துறை பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததையடுத்தே குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள் ளார். (ம-3)

## இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட இருவருக்கு கொரோனா அறிகுறி

### யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறி காரணமாக இராணுவச் சிப்பாய் ஒருவர் உள்ளிட்ட இரண்டு பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ முகா மில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் காணப் பட்டதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். 15

## பொது நிகழ்வுகள், கூட்டங்கள் நடத்த இருவாரங்களுக்கு தடை

### சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி



(கொழும்பு)

பொது நிகழ்வுகள், கூட்டங் களை நடத்துதல் மற்றும் பொது இடங்களில் மக்கள் அதிகமாகக் கூடுவதை இரண்டு வாரங்களுக்கு பொலிஸார் தடை விதிப்பர் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன் னியாராட்சி தெரிவித்தார். 15

## கிளிநொச்சியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு குள பகுதி யில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் கண்டெ டுக்கப்பட்டுள்ளது.

கல்மடு பகுதியைச்சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் 15

### பனடோல் மற்றும் நோயெதிர்ப்பு

## மாத்திரைகளை உட்கொண்டு காய்ச்சலை கட்டுப்படுத்தினோம்

### கொரோனா நோயாளர்களின் வாக்கு மூலத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

பனடோல் மற்றும் நோயெ திர்ப்பு மாத்திரைகளை உட் கொண்டு காய்ச்சலை கட்டுப் படுத்தி நாட்டுக்குள் நுழைய முயன் றோம் என நேற்று 15

### நாடு முழுவதும் கொரோனா பரவும் அபாயம்

# நாளை திங்கட்கிழமை அரச பொது விடுமுறை

(15ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் கெற்பேலியில் படையினர் சுற்றிவளைப்பு

### சந்தேகத்தில் 8 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் நேற்றையதினம் அதிகாலை தொடக்கம் கொடிகாமப் பொலிஸாரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து பாரிய தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். கடந்த வருடம் இறுதியில் பாலாவிப் பகுதியில் இடம்பெற்ற 15

### வடக்கு கடற்பகுதியில்

## 485 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

(கரணவாய்)

கடற்படையினரால் நேற்றுக் காலை மேற் கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் வடக்கு கடற்பகுதியில் சுமார் 485 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

### கொரோனா தொற்றை தடுப்பதற்கு

# மத வழிபாட்டு தலங்களில் ஒன்றுகூடுவதை தவிருங்கள்

(கொழும்பு)

கொரோனா தொற்றை தடுப்பதற்காக சுகாதார அமைச்சு வழங்கியுள்ள ஆலோசனைக்கு அமைய சகல வழிபாட்டு நிகழ்வின் போது பக்தர்கள் பெருமளவில் கூடுவதை தவிர்த்துக் கொள்வதற்கு முடிந்த வரையில் முயற்சிக்குமாறு அனைத்து மத தலைவர்களிடமும் நாம் கேட்டுக் கொண்டுள்ளோம் என்று புத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் உள்ளிட்ட அனைத்து மத தலைவர்களுக்கும் நாம் அறிவித்துள்ளோம். இதுகுறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் சுகாதார நலனை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் முன்னெடுக்கும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்து வதற்கான வேலைத்திட்டத்துக்கு உதவும் வகையில் இந்த நடவடிக்கையை அமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் கூறினார். (ம-3)

# கொரோனா அச்சம் கைதிகளை பார்வையிட ஒருவருக்கே அனுமதி

நாட்டில் அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகளை பார்வையிட இன்று (நேற்று) முதல் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் என சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## அடகு சேவை

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியாத நிலையில் நாங்கள் அதனைத் திருப்பி அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலே தரப்படும். (C-866)

தொடர்பு:- 077 206 9096

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

- கணணி ரைப்செற்றிங் தெரிந்தவர்கள்
- புத்தகம் கட்டுநர்
- KORD மெசின் மைண்டர்

அனுபவம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (C-9495)

070 186 8264, 077 250 6234

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 1957 - 04 - 04

ஆண்டவன் அடியில் 2018 - 03 - 15

அமரர்

அருந்திராதேவி (சித்திரா) சிவசுப்பிரமணியம்

ஈராண்டுகள் என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் எங்கள்
உயிருள்ளவரை உங்களது
நினைவுகள் எங்களை விட்டகலாது
தாயே! பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
தியாகத்தின் திருவுருவாய் இருந்து
எங்களை வழிநடத்திய உங்களை
இனி எங்கே காண்போம்
*உங்களுடைய ஆத்மா சாந்தியடைய*
*வேண்டி நிற்கின்றோம்.*

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்: (2609)

பிரிவுத் துயருடன்
குடும்பத்தினர்


### அத்தியாவசிய உணவுப்பொருட்களை

# அதிக விலைக்கு விற்றால் கடும் சட்டநடவடிக்கை

## 7 வர்த்தகர்கள் கைது

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலினால், அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி விடுமோ என்ற அச்சத்தில், பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

அவ்வாறு கொள்வனவு செய்யும்போது, பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 7 வர்த்தகர்கள் இவ்வாறு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இவர்கள் மீது கொரோனாவின் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்தமை இவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப்பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அதிகார சபை நாடு முழுவதிலும் முற்றுகை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

# கலைக்கப்பட்ட பாராளுமன்றை மீண்டும் கூட்ட முடியாது

## அரசாங்கம் அறிவிப்பு

அவசர நிலைக்கு மத்தியில் பாராளுமன்றத்தை கூட்டும் தேவை தற்பொழுது இல்லை என்று உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவசர நிலையின்போது கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை கூட்டும் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உண்டு. இருப்பினும தற்பொழுதுகொரோனா வைரஸ தொற்றை தடுப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் திட்டமிட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனால் இந்த நோயை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் தற்போதைய அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற கொவிட்-19 செய்தியாளர் மாநாட்டில அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் திருமதி பவித்திரா வன்னியாராச்சி, புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிச்சந்திர, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க, அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நாலக்க கலுவேவ, புறக்கோட்டை இறக்குமதி மற்றும் விநியோக சங்கத்தின் தலைவர் ஜி.இராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-3)


## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (2610)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## இறுவெட்டு வெளியீட்டு விழா ஒத்திவைப்பு

இன்பர்சிட்டி 'இறை இசை மாலை' என்னும் இறுவெட்டு இன்று வெளியிடப்படவிருந்தது. நெருக்கடியான சூழ்நிலை காரணமாக வெளியீட்டு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விழாத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இன்பர்சிட்டி கிராம
முன்னேற்றச் சங்கம்
(C-9497)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சிவகுமார் பராசக்தி

(ஓய்வுநிலை அதிபர் - நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)

திதி: ஸப்தமி (15.03.2020)

மண்ணக வாழ்வில்:- 02.06.1958
விண்ணக வாழ்வில்:- 07.04.2018

அம்மா உங்கள் நினைவுகளால்
ரணமாகிறது எம் இரவுகள்
ஈடு செய்ய முடியாத தங்கள் இழப்பு
ஈராண்டு கடந்தாலும் ஆறாத
துயராய் எம் நெஞ்சில்...

என்றும் உங்கள் நினைவுகளுடன்... குடும்பத்தினர்
வடிவேல் சிவகுமார்
124, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே: 0212216790, 0773298114 (C-9496)

# கொரோனா கோரத்தாண்டவம்!

## உலகளவில் உயிரிழப்பு 5200 ஆக உயர்வு






| நாடு | பலி | பாதிப்பு |
|---|---|---|
| சீனா | 3,169 | 80,793 |
| இத்தாலி | 1,266 | 17,660 |
| ஈரான் | 514 | 10,100 |
| ஸ்பெயின் | 120 | 2,968 |
| பிரான்ஸ் | 79 | 800 |
| தென்கொரியா | 72 | 8,086 |
| இந்தியா | 2 | 83 |
| உலகளாவிய ரீதியில் | 5,220(அதிகம்) | 134,300(அதிகம்) |

## அகற்று! அகற்று!

# கொரோனா முகாமை அகற்று! வைரஸ் வவுனியாவிற்கு வேண்டாம்

## நேற்றுக் கண்டனப் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா பம்பைமடு பெண்கள் இராணுவ முகாமில் அமைந்துள்ள கொரோனா பரிசோதனை முகாமுக்கு விமானப் பயணிகள் கொண்டுவரப்பட்டதைக் கண்டித்து நெளுக்குளத்தில் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நெளுக்குளம் சந்தியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தக் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது. (இ-7-299)

## கொரோனாவால் சிறைக்கைதிகள் அனைவருக்கும் முகக்கவசம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் நாட்டிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய சிறைக்கைதிகள் அனைவரும் முகக்கவசம் அணிவது கட்டாயப்படுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அனைத்து சிறைக் கண்காணிப்பாளர்களுடனான விசேட கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் சிறைச்சாலைத் துறையினரின் சீருடைக்குப் பயன்படுத்தும் துணி வகைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த முகமூடிகளைத் தயாரிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்காக ஒவ்வொரு சிறைக்கும் தலா நூறு மீற்றர் துணி வழங்கப்பட்டது.

மேலும் சிறையறைகளுக்குள் நுழைவதற்கு முன்னதாக கைதிகள் கைகளை கழுவவும் வசதிகள் செய்யுமாறு அனைத்துச் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கும் சிறைத்துறை அறிவுறுத்தல் விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொரோனா அச்சுறுத்தல் தேசிய பேரிடராக அறிவிப்பு



(டில்லி)

இந்தியாவில் பரவிவரும் கொரோனா வைரஸ் தாக்கத்தைத் தேசியப் பேரிடராக மத்திய அரசு நேற்று அறிவித்தது. (இ-7)

## மறு அறிவித்தல் வரும் வரை திரையரங்குகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ்தொற்று அச்சம் காரணமாக மறு அறிவித்தல் வரும் வரை, நேற்றுச் சனிக்கிழமை முதல் நாட்டிலுள்ள அனைத்துத் திரையரங்குகளையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பொதுமக்கள் ஒரு இடத்தில் அதிகமாகக் கூடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இதேவேளை, இலங்கையில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஐவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், 64 பேர் 17 வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நான்கு சுற்றுலாப் பயணிகளிலும் கொரோனா தொற்று சந்தேகம்

(கொழும்பு)

கொவிட் -19 (கொரோனா) வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தில் நால்வர் நேற்று கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். போலந்தில் இருந்து இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளே சந்தேகத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நான்கு சுற்றுலாப் பயணிகளின் ஆரம்ப காய்ச்சல் பரிசோதனையில் வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகம் எழுந்ததையடுத்து அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## கொரோனா அச்சுறுத்தலால்-இந்திய கால்பந்து லீக் போட்டிகள் ஒத்திவைப்பு

இந்தியாவில் நடைபெறவுள்ள இந்திய கால்பந்து லீக் போட்டிகள் மார்ச் 31ம் தேதி வரை ஒத்திவைக்கப்படுகிறது என அனைத்து இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதால் பொது நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்தியாவில் நடைபெற உள்ள கால்பந்து லீக் போட்டிகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக, அனைத்திந்திய கால் பந்து சம்மேளனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், பல்வேறு மாநில அரசுகளின் பரிந்துரையை ஏற்று இந்தியாவில் நடைபெறவுள்ள இந்திய கால்பந்து லீக் போட்டிகள் இன்று முதல் மார்ச் 31ம் தேதி வரை ஒத்திவைக்கப்படுகிறது என அனைத்து இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

## இந்தியா ஓபன் பட்மின்ரன் ஏப்ரல் 12ம் திகதி வரை தள்ளிவைப்பு

கொரோனா அச்சம் காரணமாக மார்ச் 16-ம் தேதி முதல் ஏப்ரல் 12-ம் தேதி வரை உள்ள போட்டிகளை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதால, இந்தியா ஓபன் பேட்மிண்டன் போட்டி தற்போதைக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதால் பொது நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படுகின்றன. அவ்வகையில் இந்தியாவில் வரும் 24-ம் தேதி தொடங்கவிருந்த இந்தியா ஓபன் பேட்மிண்டன் தொடரும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சம் காரணமாக மார்ச் 16-ம் தேதி முதல் ஏப்ரல் 12-ம் தேதி வரை உள்ள போட்டிகள் ரத்து செய்யப்படும் அல்லது தள்ளி வைக்கப்படும் என உலக பேட்மிண்டன் கூட்டமைப்பு அறி வித்துள்ளது. இதனையடுத்து இந்தியா ஓபன் பேட்மிண்டன் போட்டி ஏப்ரல் 12ம் தேதி வரை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த போட்டி மார்ச் 24ம் தேதி முதல் 29-ம் தேதி வரை நடைபெறுவதாக இருந்தது.

இதேபோல் சுவிஸ் ஓபன், ஆர்லியன் மாஸ்டர்ஸ், மலேசிய ஓபன், சிங்கப்பூர் ஓபன் ஆகிய போட்டிகள் மற்றும் மூன்று சர்வதேச போட்டிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது நடைபெற்று வரும் ஆல் இங்கிலாந்து சாம்பியன்ஷிப் போட்டி இன்றுயுடன் (மார்ச் 15) முடிவடைகிறது. அதற்கு அடுத்த நாளில் இருந்து இந்த புதிய உத்தரவு நடைமுறைக்கு வருகிறது.

## வடக்கின் பெரும் போர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியிலும் யாழ் மத்தியை வீழ்த்தியது சென்ஜோன்ஸ்




வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ் மத்திய கல்லூரிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி 34 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி அணி 61 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியிடம் மண்டியிட்டது.

அதேவேளை கடந்த வாரம் நடைபெற்ற 3 நாட்களைக் கொண்ட போட்டியிலும் சென் ஜோனஸ் கல்லூரி வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. (படங்கள் சிவசாந்தன்)

## இந்தியா-தென்னாபிரிக்காஅணிகளுக்கிடையிளான தொடர் நிறுத்தம்

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, இந்தியா மற்றும் தென் னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் நிறுத்தப்பட்டுள்ளது.

இத்தொடர் நிறுத்தப்பட்டமை குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், "தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக பிற்காலத்தில் இந்தியாவுக்கு வரும்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் கிரிக்கெட் தென்னாபிரிக்கா கூட்டாக இணைந்து திருத்தப்பட்ட அட்டவணையை உருவாக்கும்.

கிரிக்கெட் தென்னாபிரிக்கா தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ஜாக்ஸ் ஃபால் மற்றும் கிரிக்கெட் இடைக்கால இயக்குநர் கிரேம் ஸ்மித் ஆகியோர் இந்த முடிவுக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு நன்றி தெரிவித்தனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்கா அணி இந்தியா வந்துள்ளது. முதல் போட்டி நேற்று (வெள்ளிக்கிழமை) இமாச்சல பிரதேசத்தில் நடைபெற இருந்தது. எனினும் இப்போட்டி மழையால் போட்டி கைவிடப்பட்டது.

2ஆவது போட்டி லக் னோ வில் 15ஆம் திகதியும், 3ஆவது மற்றும் கடைசி பேோட்டி கொல் கத்தாவில் 18ஆம் திகதியும் நடைபெற இருந்தது.

எனினும், கொரோனா வை ரஸ் தொற்று மிக வேகமாக பரவிவருவதால் எஞ்சிய இரண்டு போட்டிகளையும் நிறுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

ஏற்கனவே இந்தியாவில் நடைபெறவுள்ள ரி-20 கிரிக் கெட் திரு விழாவான ஐ.பி.எல். ரி-20 தொடர் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்களின் பயிற்சி ரத்து




கொரோனா வைரஸ் மற்றும் ஐ.பி.எல். போட்டி தள்ளி வைக்கப்பட்டதால் சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்களின் பயிற்சி தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

சீனாவின் வுகான் நகரில் உருவான கொரோனா வைரஸ் இன்று உலகம் முழுவதும் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

117 நாடுகளில் உயிர்க்கொல்லியான இந்த வைரஸ் பரவி 5,400 பேர் வரை பலியாகி உள்ளனர். 1 அரை லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கொரோனா வைரசால் உலகம் முழுவதும் விளையாட்டு போட்டிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இந்த வைரஸ் அதிவேகமாக பரவுவதால் போட்டிகளை ரத்து செய்ய வேண்டும் அல்லது தள்ளி வைக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாட்டு அரசும் கேட்டுக்கொண்டுள்ளன. ஏற்கனவே சர்வதேச அளவில் பல போட்டிகள் ரத்து செய்யப்பட்டிருந்தது.

இதற்கிடையே பணம் கொழிக்கும் விளையாட்டான ஐ.பி.எல். போட்டி கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் ஏப்ரல் 15-ந் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதை கிரிக்கெட் வாரியம் அறிவித்தது. இந்த போட்டி வருகிற 29-ந் தேதி தொடங்க இருந்தது.

இதற்கிடையே கொரோனா வைரஸ் மற்றும் ஐ.பி.எல். போட்டி தள்ளி வைக்கப்பட்டதால் சென்னை சூப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே.) வீரர்களின் பயிற்சி தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். போட்டிக்காக டோனி தலைமையில் சி.எஸ்.கே. வீரர்கள் கடந்த 2-ந்தேதி முதல் சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். வீரர்களின் பயிற்சி 19-ந்தேதி முடிய இருந்தது. தற்போது கொரோனா வைரஸ் காரணமாக நேற்று முதல் இந்த பயிற்சி ரத்து செய்யப்பட்டுள்ளது. வீரர்கள் அனைவரும் தங்களது சொந்த ஊருக்கு புறப்பட்டு செல்கிறார்கள்.

இதற்கிடையே ஜப்பானில் ஜுலை-ஆகஸ்டு மாதங்களில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியை ரத்து செய்வது குறித்து சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் (ஐ.ஓ.சி.) ஆலோசனை செய்கிறது.

உலக சுகாதார அமைப்பின் அறிவுரையின்படி ஒலிம்பிக் போட்டியை ரத்து செய்வது அல்லது தள்ளி வைப்பது குறித்து முடிவு செய்யப்படும் என்றே சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் (ஐ.ஓ.சி.) தலைவர் தாமஸ் பேஜ் தெரிவித்தார்.

இந்தியா-தென் ஆப்பிரிக்கா இடையேயான 3 ஒருநாள் தொடரில் முதல் ஆட்டம் மழையால் ஒரு பந்து கூட வீசப்படாமல் ரத்து செய்யப்பட்டது. மற்ற 2 ஆட்டங்களை ரசிகர்கள் இல்லாமல் நடத்த கிரிக்கெட் வாரியம் முடிவு செய்து இருந்தது.

இதற்கிடையே கொரோனா வைரஸ் காரணமாக எஞ்சிய 2 ஆட்டங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் கால்பந்து, இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்து ஆகியவையும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய கிராண்ட் பிரீ பார்முலா-1 கார்பந்தயம், இந்தியன் ஓபன் பேட்மிண்டன் ஆகியவையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. மே 31-ந்தேதி வரை எந்த ஒரு செஸ் போட்டியும் நடைபெறாது என்று அகில இந்திய செஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை சென்றுள்ளது. வருகிற 19-ந்தேதி இந்த தொடர் தொடங்க இருந்தது. கொரோனா வைரஸ் காரணமாக இந்த டெஸ்ட் தொடர் ரத்து செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து அணி உடனடியாக நாடு திரும்புகிறது.

# வஞ்சித்தல், நிந்தனை மனிதத் தன்மையை கேள்விக்குறியாக்கும் கொரோனா அச்சுறுத்தலிலிருந்து விடுபட ஒன்றுபடுவோம்

## பிரதமர் மகிந்த பகிரங்க அழைப்பு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுவதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வேலைத் திட்டம் ஒன்று அரசாங்கத்திடம் உள்ளதென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறித்த வைரஸ் அச்சுறுத்தலிருந்து விடுபடுவதற்காக சகலரும் ஒன்றுபட வேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

விசேட காணொலி ஒன்றை வெளியிட்ட பிரதமர் இவ்வாறு பகிரங்க அழைப்பிபை விடுத்தார். சகலரும் ஒன்றுபட்டு மருத்துவ ஆலோசனைகளைப் பின பற்று வதால் இந்நிலைக்கு அச்சமின்றி முகம்கொடுக்க முடியும் எனவும் பிரதமர் அறிவுறுத்தினார்.

அதேபோன்று வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களை வஞ்சித்தல், அவர்களை நிந்தனை செய்தல் போன்றவை மனிதத் தன்மையை கேள்விக்குள்ளாக்கும் விடயங்கள் எனவும் பிரதமர் மகிந்த சுட்டிக்காட்டினார். (இ-7)

## கொரோனா அச்சுறுத்தல்

# உடன் அமுலுக்கு வரும் வகையில் தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு பூட்டு

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையில் அரசாங்க தொழில் பயிற்சி நிறுவனங்கள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாகவே திறன் அபிவிருத்தி வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சுக்கு உட்பட்ட அனைத்து தொழில் பயிற்சி நிறுவனங்களும் உடனடியாக அமுலுக்கு வரும் வரையில் மூடப்பட்டன.

இது தொடர்பாக அந்த அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கை வெளிநாட்டு சேவை அலுவலகம், இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபை, இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம், தேசிய பயிற்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபை, மற்றும் கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்துக்கு உட்பட்ட, அனைத்து தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் நேற்று சனிக்கிழமை முதல் இருவாரத்திற்கு மூடப்படுகின்றன.

விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் ஆலோசனையின் அடிப்படையில் அமைச்சின் செயலாளர் டி.எம்.சரத் அபேகுணவர்த்தன அறிவித்துள்ளார்' எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு எதிராக கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்



(ஏறாவூர்)

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பிரகடனப்படுத்தப்பட்ட நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளைத் தடுத்து வைத்து அவதானிக்கும் வகையிலும் ஆரம்ப சிகிச்சைக்காகவும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் அழைத்து வரப்படுவதைத் தடை செய்யக் கோரும் ஓர் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 31 ஆவது சபை அமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல்வர் சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-7)

# மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு; மேல் நீதிமன்றம் இடைக்காலத்தடை

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி தொடர்பாக விதிக்கப்பட்ட தீர்ப்புக்கு வடமாகாண மேல் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மனித புதை குழி தொடர்பான வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் புதைகுழி வழக்கு தொடர பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது என மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி கணேசராஜா உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த தீர்ப்பினை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பிக்குமாறு நேற்று முன்தினம் வடமாகாண மேல் நீதிமன்றத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக வாதிடும் சட்டத்தரணிகள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் மூலம் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனுவை விசாரித்த வவுனியா வட மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட குறித்த தீர்ப்பினை வருகின்ற 27 ஆம் திகதி வரை தற்காலிகமாக தடை செய்து உத்தரவிட்டார்.

இதன் காரணமாக எதிர் வரும் 27 ஆம் திகதி வரை மன்னார் மனித புதைகுழி தொடர்எந்த ஒரு விசாரணைகளையும் நடத்த முடியாது என குறித்த தீர்ப்பில் அறிவிக்கப்பட்டு குறித்து தடை யுத்தரவானது மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2-285)

## இராசி பலன்

**மீனம்:** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மேடம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, வீண் விரயங்கள் ஏற்படலாம்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கடன் தொல்லைகள் குறையும், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், கனவு பலிதமுண்டு, வியாபார விருத்தி ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகும்.

**கும்பம்:** என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கனிவாகச் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | சுக் | | ராகு |
| புத | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி | | |
| சனி, கேது, குரு, செவ் | சந் | | |

**15.03.2020**

பங்குனி 02, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
சஷ்டி முற்பகல் 11.09 மணிவரை
அனுசம் மாலை 5.35 மணிவரை
சுபநேரம் 9.20-10.50 மணிவரை
இராகுகாலம் 4.50-6.20 மணிவரை
உழைப்பைப் போல் ஓர் ஆசான் இல்லை

வளவன்

**கடகம்:** உறவினர் பகை மாறும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், திடீர் பணவரவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** பெண்கள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், மனதில் இனம்புரிாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** ஆன்மீகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**துலாம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பொருளாதார நிலை உயரும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

# அலங்காரத் திருவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாக லிங்கேஸ்வரர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை 16 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (இ)

# ஒன்பது வர்த்தகர்களுக்கு ரூ.33 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்ட திட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தால் 33 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மல்லாகம் நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஒன்பது வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. (இ-10)

# காலநிலையில் மாற்றம் இடியுடன் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நாளை 16 ஆம் திகதியும் நாளை மறுதினம் 17 ஆம் திகதியும் காலநிலை மாற்றம் ஏற்படக் கூடிய சாதகமான நிலை காணப்படுவதாக இலங்கை வளிமண்டலவியல்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இலங்கை வளிமண்டலப் பரப்பில் நிகழும் குறித்த கால நிலை மாற்றத்தால் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புக்கள் உள்ளதாக குறித்த திணைக்களம் மேலும் தெரிவித்தது. (இ-10)

# சமய அறிவுப் பரீட்சை இன்று

(யாழ்ப்பாணம்)

நவாலி ஸ்ரீ நாகராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இன்று சமய அறிவுப் பரீட்சை இடம்பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசுக்கு ஆதரவு கொடுத்த ஒரே எதிர்க்கட்சி கூட்டமைப்பு

## ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு, மாற்றுத்தலைமை அவசியம் கிடையாது என காரைதீவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் முடிந்த கடந்த 10 வருடங்களில் தமிழரசுக் கட்சித் தலைமை தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுத்தந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கூட இந்தத் தலைமையால் முடியவில்லை. பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்து கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததைத்தவிர வேறேதுவும் செய்யவில்லை.

வருடாவருடம் உலகிலேயே வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆளும் அரசுக்கு ஆதரவு கொடுத்த ஒரே எதிர்க்கட்சியாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருந்துள்ளது. இதன் மூலம் பேசப்பட்ட பேரங்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகவே பயன்படுத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளின் நண்பர்களாக நடித்து, விடுதலைப் புலிகள் வீழ்ந்தபின் பாராளுமன்றத்தில் பயங்கரவாதத்தை அழித்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றியும் தெரிவித்திருந்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் புலிகளை அழித்தமைக்காக அன்றைய இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிற்கு ஆதரவும் தெரிவித்து பட்ட நன்றிக்கடனை தீர்த்துக்கொண்டார்கள். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ்த் பிரதிநிதித்துவத்தைத்தக்க வைத்துக் கொள்வதற்காக தமிழ் மக்கள் தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்ற எண்ணத்தில் இதுவரையும் தங்கள் விருப்பத்தின் பெயரில் வேட்பாளர்களை நியமனம் செய்தார்கள்.

ஆனால் கடந்த 10 வருடங்களாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் இருப்பு பறிபோவதைத் வேடிக்கை பார்த்ததைத்தவிர வெறெதுவும் செய்யவில்லை.

எனவே தமிழ் மக்கள் இந்தத் தேர்தலிலாவது சிந்தித்து புதிய அரசியல் அணுகுமுறையில் களமிறங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களைப் புதிய மாற்றத்திற்கான தெரிவாக தேர்ந்தெடுத்து வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் என அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# மணல் விநியோகத்தில் ஈடுபட அபிவிருத்தி சங்கத்துக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்திலிருந்து மணல் விநியோகத்தில் ஈடுபட குடத்தனை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நான்கு புதிய வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய யாழ்.அரச அதிபரால் இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-10)

# யாழ்.பல்கலையில் நடைபெற்ற உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்

(யாழ்ப்பாணம்)

2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் உலக தழிழாராய்ச்சி நிறுவனம் சென்னை - தமிழ்நாடு அரசு மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழ்த்துறை இதய நிறைவு தியான அமைப்பு என்பவற்றுடன் இணைந்து தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடத்திய உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாடு 2020 பன்னாட்டு கருத்தரங்கில் திருக்குறள் முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்தில் காணப்படும் கருத்துக்களுடன் கத்தோலிக்க மக்களின் புனித நூலான திருவிவிலியத்தின் நற்செய்தி ஏடுகளில் காணப்படும் கருத்தொற்றுமை - ஒரு ஒப்புநோக்கு என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையை 2020 இல் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார். 22 பெப்ரவரி 2020 அன்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரை மண்டபம் 307 இல் அவர் தனது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார். நிறைவில் அவரது ஆய்வுக்கட்டுரையை மேற்பார்வையிட்ட முனைவர் நெடுஞ்செழியன் சிதம்பரம், முனைவர் இராசு தமிழரசன் ஆகியோர் இணைந்து சான்றிதழை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கு வழங்கினர். அவரது ஆய்வுக்கட்டுரையின் சுருக்கம் பின்வருமாறு. திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் உலகின் பல்வேறு சமயங்கள் போதிக்கும் கருத்துக்களுடன் ஒப்பிடப்பட்டு அது பல்வேறு சமயக் கருத்துக்களுடனும் பொருந்துவதாக பல ஆய்வுகள் செய்யப்பட்ட நிலையில் திருக்குறள் முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்தில் காணப்படும் கருத்துக்களுடன கத்தோலிக்க மக்களின் புனித நூலான திருவிவிலியத்தின் நற்செய்தி ஏடுகளில் காணப்படும் கருத்தொற்றுமை பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரையை அந்த ஆய்வுகளுக்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

திருக்குறளின் பெருமையே அது உலகப்பொதுமறை என்பது தான். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்கூட போற்றும் ஒரு நூல் திருக்குறள். இதனால் எல்லா சமயத்தைச் சேர்ந்தவர்களும் தமது சமயக்கருத்துக்களும் உள்ள நூல் திருக்குறள் என ஏற்கின்றனர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் உலகில் அதிகம் விரும்பிப் படிக்கப்பட்ட நூல்களான திருக்குரான், பைபிள், திருக்குறள் ஆகியவற்றில் திருக்குறள் மட்டுமே சமயம் சாராத ஆனால் எல்லாச் சமயத்தவரும் விரும்பும் நூல் என்றார். குறிப்பாக கடவுள் வாழ்த்து அதிகாரத்தை இதற்குச் சான்றுபடுத்துகின்றனர். திருக்குறள் இன்று வரை 80 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகிலேயே



அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் எந்தவொரு கடவுளின் பெயரையும் குறிப்பிடவில்லை. ஆதிபகலன் (குறள் 01) வாலறிவன் (குறள் 02) மலர்மிசை ஏகினான் (குறள் 03) வேண்டுதல் வேண்டாமை இலான் (குறள் 04) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் (குறள் 05) பொறிவாயில் ஐந்தவித்தான் (குறள் 06) தனக்குவமை இல்லாதான் (குறள் 07) அறவாழி அந்தணன் (குறள் 08) எண் குணத்தான் (குறள் 09) இறைவன் (குறள் 10) என்று ஒவ்வொரு குறளிலும் இறைவனின் பண்புகளை மட்டுமே சொல்லி இத்தனை பண்புகளையும் கொண்டவர் ஒரே கடவுள்தான் என்பதை வலியுறுத்தியுள்ளார். இதனால் தான் திருக்குறள் பொதுமறை என போற்றப்படுகிறது.

முதல் குறளும் இரண்டாவது குறளும் ஒன்பதாவது குறளும் கடவுளை வணங்குதலே தலையாய கடமை என்று தெரிவிக்கின்றன. மற்ற ஏழு குறட்பாக்களில் மனித குலத்தின் மூன்று முக்கிய வரையறுப்புகளான சோகம் அல்லது மனக் கவலை (குறள் 4,7) காலம் அல்லது அந்நியம் (குறள் 3,6,8,10) அறியாமை (குறள் 5) ஆகியவற்றை நீக்கும் உபாயம் இறை வணக்கமே என்று கூறுகிறது.

இந்தப் பின்னணியில் பார்த்தால் வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி அந்தணன் என்னும் சொற்கள் கடவுளைக் குறிப்பதாகக் கருதுவதை விட முற்றும் துறந்த ஞானியர்களையே குறிப்பதாகக் கொள்ளலாம். கடவுளை ஏற்று வழிபட்டால் நாம் இவ்வுலகில் நன்மை அடையலாம். தீமை எதுவுமின்றி வாழலாம். இந்தக் கருத்தையே முதலாம் அதிகாரமான கடவுள் வாழ்த்து மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறது. பொய்தீரொழுக்கநெறி (குறள் 06) நீடு வாழ்வார் (குறள் 06) தனக்குவமையில்லாதான் (குறள் 07) பிறவிப் பெருங்கடல் (குறள் 10) என்ற சொற்கள் எல்லாம் இக்கருத்தையே விளக்க முற்படுகின்றன.

எல்லாவற்றையும் படைத்த கடவுளை வணங்கி அவரை அடைவதே மனிதனின் வேலை. இதற்கு படைத்த கடவுளை (குறள் 01) மனிதன் கடவுளை அறிய வேண்டும் (குறள் 02) அவரை ஏற்கவேண்டும் (குறள் 03) அவரை பற்றிக் கொள்ள வேண்டும் (குறள் 04) அவரை புகழ வேண்டும் (குறள் 05) அவர் விருப்பப்படி வாழவேணடும் (குறள் 06) அதனால் கவலையை தீர்க்கலாம் (குறள் 07) கடவுளின் பாதம் அடையலாம் (குறள் 08) (குறள் 09) இந்த முன்னுரையுடன் திருவள்ளுவரின் திருக்குறளில் காணப்படும் கருத்துக்கள் திருவிவிலியத்தின் இரண்டாம் பகுதியான புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஒற்றுமையை அணுகலாம்.

திருக்குறள் ஒரு சமய நூலா அல்லது ஒரு ஒழுக்க நூலா என்றால் அது அறவழி கூறும் இறை நூல் என்றே முடிவாக்க வேண்டியுள்ளது. திருவள்ளுவர் தனது பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் கடவுள் பற்றியும் மனிதன் பற்றியும் இறைவன் செய்யும் உதவி மற்றும் வழிகாட்டுதல் பற்றியும் தெரிவித்த பின் நாலாம் அதிகாரத்தில் அந்த அறவழியை பின்பற்றும் படி அழைப்பு விடுக்கிறார். இதுவே திருள்குறள் முழுவதிலும் தொடர்கிறது. (இ-7)

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாததால் டி.கே.பி.தசநாயக்கவை நீக்கவில்லை!

## விஜேயகுணரத்ன சாட்சியம்



(கொழும்பு)

11 தமிழர்கள் கடத்தல் விவகாரம் தொடர்பில் ஓய்வு பெற்ற பாதுகாப்புப் படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேயகுணரத்ன நேற்று முன்தினம் சாட்சியமளித்தார். ரியர் அட்மிரல் டி.கே.பி.தசநாயக்க கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாததால் அவரை சேவையிலிருந்து இடைநிறுத்தவில்லையென அவர் தெரிவித்தார்.

டி.கே.பி.தசநாயக்க மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தபோதும் அவரை இடைநீக்கம் செய்யாமை குறித்து கேள்வி எழுப்பியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாதபோது தசநாயக்கவின் சேவையை கடற்படைத் தளபதி நிறுத்தி வைக்க முடியாது என்று அவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

11 தமிழர்களைக் கடத்திக் கொலை செய்த வழக்கில் தான் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக டி.கே.பி.தசநாயக்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடளித்திருந்தார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்னே தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த விசாரணையை நேற்று முன்தினம் நடத்தியது.

நல்லாட்சி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஊழல் தடுப்புக் குழு முன் வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க 2018 ஏப்ரல் 24 அன்று முன்னிலையாகி, காணாமல் போன இளைஞர்கள் வழக்கின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தார்என்றும்ரவீந்திர தெரிவித்தார். அட்மிரல் திசர சமரசிங்க, அட்மிரல் ஏ.எஸ்.எம்.சமரசிங்க பெரேரா மற்றும் ரியர் அட்மிரல் கே.ஆர்.அமரசிங்க,ஆகிய உயர் கடற்படை அதிகாரிகளும் நேற்று முன்தினம் சாட்சியங்களை வழங்கினர். (இ-7)

### மனவளக்கலை யோகா ஆரம்பம்

(நாவற்குழி)

உலக சமுதாய சேவா சங்கத்தின் யாழ்.மண்டல கிராமிய சேவைத் திட்டத்தின் மனவளக் கலை யோகா ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத் தில் காலை 9 மணியளவில் இடம்பெறும்.

டபிள்யூ சீ.எஸ்.சீ யாழ்.மண்டல தலைவர் அருள்நிதி குழந்தைவேல் தலைமையில்இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மா.பிரதீபன் கலந்து கொள்வார். (இ-114)

### ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

வேலணை சரவணை சேவா மன்றம் நடத்தும் ஒன்றுகூடலும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று முற்பகல் 10 மணியளவில்சரவணை தபால் நிலைய வளவு வீட்டு மண்டபத்தில் இடம் பெறும்.

எனவே அங்கத்தவர்கள் அனைவரையும்கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ)


## விற்பனைக்கு

மல்லாகம் தெற்கில் 3 1/4, 1 1/4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:-
077 390 7137
077 535 3289
(2600)

## வேலையாள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் சைவ உணவகத்துக்கு சமையலாள், சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர் ஆண், பெண் இருபாலாரும்.

(தங்கியிருந்து வேலை செய்பவருக்கு முன்னுரிமை)

தொடர்புகளுக்கு:- 076 986 5027 (2573)

## மணமக்கள் தேவை

1984 பிறந்த மணமகளுக்கு (வேதம்) பல்கலைக்கழகம் படித்த மணமகன்.

1987, 1989, 1990 இல் பிறந்த மணமகள்மாருக்கு படித்த பல்கலைக் கழகம் முடித்த மணமகன்மார்.

1980-1993 வரை இடைப்பட்ட சுவிஸிலுள்ள மணமகன்மாருக்கு மணமகள்மார்.

இலங்கையிலுள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:-
ஜெயக்குமார் திருமண சேவை
076 475 2219,
077 023 7639,
076 204 9298
(2498)

## காணவில்லை



**கார்த்திகா ஆலாலசுந்தரம்**

**தே.அ.அ.இல:- 856054730V**

என்பவரை கடந்த ஒருமாத காலமாகக் காணவில்லை. இவர் பற்றிய விபரம் அல்லது இவரைக் கண்டவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல் வழங்கவும்.

**077 902 1451** (2606)

## தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டமொன்றில் காவலுக்கு ஆள் தேவை. தோட்டங்களில் தனியாளாக வேலை செய்து பழக்கம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் காவலுக்கு மட்டும் மாதத்துக்கு ரூபா 12,000 மேலதிக வேலைகளுக்கு வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். குடும்பமாகத் தங்குவதற்கான வசதி உண்டு. தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக்கடிதம், மேலதிக சிபாரிசுகள் தேவை.

தொலைபேசி: 077 168 1697/ 077 113 3667 (C-9481)

**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்.**

### ஏல விற்பனை

எமது அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 18.03.2020 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

1.CPU, 2.Monitors, 3.Printer, 4.UPS, 5.உடைந்த தளபாடம், 6.மின்சார உபகரணம், 7.பாவித்த வாகன உதிரிப்பாகம், ரயர், 8.ஏனைய சில அலுவலக உபகரணங்கள் (C-9485)

இ.இளங்கோவன், செயலாளர்.

## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது வியாபார நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

- தையல் -
- அழகுக்கலை நிபுணர் -

} முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது, வயதெல்லை 18-30

- கணக்காளர் - வயதெல்லை (30-45)

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
021 226 2620
077 813 7709
(2511)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 173cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. வங்கியாளர்.
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10655

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 24 ½ செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், ஆசிரியர் விரும்பத்தக்கது.
தொ.இ: B/10657

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: செவ் 9 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. Data Enter Operator
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10659

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 51 ½ செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. Q.S
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10660

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 30 செவ் 3 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது.
தொ.இ: G/7385

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 24 சூரி, செவ் 7 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில் : Diploma in Pharmacy அரச மருந்தாளர்.
எதிர்பார்ப்பு: பொருத்தமான மணமகன்
தொ.இ: G/7388

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 5 சூரி, செவ், புத 11 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: பட்டதாரி. நிரந்தர அரச தொழில்.
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/7395

பிறப்பு: 1979 கிறிஸ்தவம் (R.C.)
நட்சத்திரம்: அத்தம் செவ் 2 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: PHD தற்பொழுது வெளிநாட்டில் பணி புரிகின்றார்.
எதிர்பார்ப்பு: Doctor, Engineer. போன்ற உயர் பதவிகள்
தொ.இ: G/7405

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கொரோனா குறித்து அஞ்சத்தேவையில்லை பாதுகாப்பிற்கு செலவு செய்யத் தயார்

## யாழ். மாநகர முதல்வர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் மாநகரத்தின் பாதுகாப்பு நடவடிக்கைக்காக சபை செலவு செய்யத் தயாராக இருப்பதாகவும் யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

நாட்டில் சகல பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கை தொடர்பில் சகல தரப்புக்களுடனும் கலந்துரையாடவுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் வெப்பமான காலநிலை நிலவுவதால் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவது சாத்தியமில்லை எனச் சுகாதாரத் தரப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்நிலையில் யாழ்.மாநகரப் பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களை தற்காலிகமாக மூடுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உணவகங்ளுக்குச் சென்று உணவு உட்கொள்வோர் கைகளை நன்கு சுத்தமாகக் கழுவிய பின்னர் உணவுகளை உட்கொள்ளவும்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக "மாஸ்க்" முகக் கவசம் அணியும் நடைமுறை குறித்து நாளை மறுதினம் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்படும். எனவே, யாழ். மாநகர மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கொரோனாவுக்கு முகம்கொடுப்பது எவ்வாறு? அச்சுவேலியில் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் அச்சுவேலி ஊரணி பொது மைதானத்தில் நடைபெற்றது. இதில் வைத்திய கலாநிதி மாணிக்கவாசகன் கலந்து கொண்டார். மேலும் இவ்வாறான கலந்துரையாடல்களை சமூக ஊடகங்கள் பெரிதும் புழக்கமில்லாத பின்தங்கிய கிராமங்களில் நடத்த ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர். (இ)

# கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களை காப்பாற்ற விசேட வழிபாடு

புளியங்குளம் பழையவாடி சிவநாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் உலக நாட்டு மக்கள் அனைவரையும் பீதியில் ஆழ்த்தி வரும் கொரோனா என்ற கொடிய வைரஸினால் ஏற்படும் நோயைக் குணப்படுத்தவும், தொற்று ஏற்படாமல் தடுக்கவும் கூடிய ஆன்மீக ரீதியான வழிபாட்டோடு ஆலய மருந்தும் வழங்கப்படவுள்ளது.

எனவே இறை பக்தியும் நம்பிக்கையும் உள்ள நாட்டிலுள்ள அனைத்து மத மக்களையும் அன்புடன் வரவேற்று அனைத்து உலக மக்களும் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பங்கேற்குமாறு ஆலய தர்மகர்த்தா வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 160 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 100 | 120 |
| கரட் | 150 | 200 | 240 |
| பூசணி | 80 | 70 | 60 |
| புடோல் | 120 | 140 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 240 |
| பாகற்காய் | 200 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 |
| லீக்ஸ் | 140 | 170 | 200 |
| பீற்றூட் | 50 | 100 | 80 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 60 |
| கீரை-1பிடி | 30 | 50 | 30 |
| தேசிக்காய் | 80 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 30 |
| ஈரப்பலா | — | — | — |


# பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஓய்வூதியர் சங்க தலைவர் பொன். தில்லைநாதன் தலைமையில் பூநகரி பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்னேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலக கணக்காளர் திருமதி. ஐங்கரன் சுஜேஸ்காவும் மாவட்ட ஓய்வூதியர் சங்கத் தலைவர் அ.கனகரத்தினமும் கலந்து கொள்வார். (ஐ-2-84)

# கொரோனா வந்த கதை கூறு!



உலகம் அழிக்கவென ஒரு கிருமி வந்ததனால்
நிலமுழுதும் பதறிற்றாம் நெளிந்து!

வாரானா என ஏங்கி வர வேற்ற சீனர்களால்
கொரோனா வந்த கதைகூறு!

விஞ்ஞானம் இருக்கையிலே வேறென்ன பயமென்றோர்
மெஞ்ஞானம் தேடுகிறார் மெலிந்து!

ஆகாயம் தொட்டு அதற்கப்பால் சென்றவர்கள்
சாகாத வழிதேடிச் சரிந்தார்!

பொல்லாத நோய்க்கிருமி பொங்கிவர உலகதனில்
எல்லோரும் நடுங்குகிறார் ஏங்கி!

போரென்று உலகழிக்கப் புறப்பட்டோர் தமையெல்லாம்
வேரறுக்க வந்ததுவாம் வினை!

இயற்கையதை வென்றதுவாய் எக்காளம் போட்டவர்கள்
மயங்குகிறார் வைரஸால் மருண்டு!

விதியென்ன விதியென்று வீறுரைத்த அறிஞரெலாம்
மதி கலங்க மருளுகிறார் மயங்கி!

வல்லரசுத் திமிராலே வாழும் உலகழித்தோர்
துள்ளுகிற கிருமியதால் தொலைந்தார்!

பாம்பா, வெளவாலா பாழ்க்கிருமி தந்ததென
நாள் தோறும் ஆய்கின்றார் நலிந்து!

கைநீட்டிக் குலுக்குதலே கச்சிதமாம் என்றுரைத்தார்
கைகூப்பி வணாங்குகிறார் கலங்கி!

சாகவழி திறக்கையிலே சற்றேனும் அறிவின்றி
மா வாங்கி ஒளிக்கின்றார் மடையர்!

தாய் மண்ணில் மரணமெனத் தலைதெறிக்க ஓடியவர்
நோய் பிடிக்க வருவாரோ நுழைந்து!

சத்தான தாய்மண்ணை சபித்தேதான் ஓடியவர்
இத்தாலி வீட்டுக்குள் இருந்தார்!

ஊரடங்குச் சட்டமது உதவாதென்றோடியவர்
நாரெனவே வீட்டிருந்து நலிந்தார்!

சிங்களவர், தமிழரெனச் சீறிப் பகை வளர்த்தோர்
மாங்குகிற கிருமியதால் மருண்டார்!

மக்கள், உயிர்க்கு மரணமெனப் பதறுகையில்
இக்கணமும் தேர்தல்தான் இவர்க்கு!

மாளப்பயந்து மக்களெலாம் மருளுகையில்
ஆளத்துடிக்கின்றார் அசடர்!

வீடா, சைக்கிளா வெற்றிபெறும்? உலகழிய
ஆடுகிறார் நம் தலைவர் அலைந்து!

மாறாத நோயதுஎம் மண்ணைத் துளைத்திடுமோ?
ஆரறிவார் ஆண்டவனே காப்பு!

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**

# கொரோனா பரிசோதனை முகாம்களை அமைத்து தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக அழிக்கச் சதி



## அரசு மீது சுரேஷ் காட்டம்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்றுத் தாக்கம் குறித்து அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகள் முரண்பட்டதாகவே உள்ளதாகவும் அரசியல் உள்நோக்கம் கொண்டதாக எடுக்கின்ற நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்த வேண்டுமெனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற வடக்கு-கிழக்கு பகுதிகளில் கொரோனா பரிசோதனை முகாம்களை அரசாங்கம் அமைப்பதானது தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக அழிக்கின்ற சதி நடவடிக்கையா என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். கட்டப்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின் போது கொரோனா தொற்று தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக ஆராய்ந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து அரசியல் நோக்கம் கொண்டதாக அரசாங்கத்தின் முடிவுகள் அமையக் கூடாது.

உண்மையில் வடக்கிலோ அல்லது முழு நாட்டிலோ பாதிப்பு இருந்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பது அவசியமானது தான். ஆனால் அந்த நடவடிக்கைகள் சரியான முறையில் கலந்து பேசி ஆராய்ந்து எடுக்கப்படுவதே பொருத்தமானதாக இருக்கும்.

ஆனால் இன்றைக்கு அரசாங்கம் எடுக்கின்ற முடிவுகள் என்பது மிகவும் முரண்பட்ட முடிவுகளாகவே இருக்கின்றன. இவ்வாறாக முரண்பட்ட முடிவுகளை ஏன் எடுக்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இத்தாலி அல்லது தென்கொரியா போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்றவர்கள் விமான நிலையத்தில் வைத்து சோதனைக்குட்படுத்தி மேலதிக சோதனைகளுக்காக மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அவ்வாறு அங்கு சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர்தான் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அரசாங்கம் கூறுகின்றது.

ஆனால் சீனாவில் இருந்து இலங்கைக்கு வருகின்றவர்களுக்கு பரிசோதனை தேவையில்லை என்று அரசாங்கம் கூறுகின்றது. ஏனெனில் சீனாவில் தற்போது கொரோனா தாக்கம் குறைவடைந்து வருவதாக அதற்கு காரணமும் கூறுகின்றது.

உண்மையில் இந்த கொரோனா வைரஸ் தொற்று தாக்கம் சீனாவில் தான் உருவாகியது. அங்கு பலர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போதும் வைத்தியசாலைகளில் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆக மொத்தத்தில் சீனாவில் இருந்து வருபவர்களுக்குப் பரிசோதனை இல்லை. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் என்பது மிகவும் முரண்பட்ட நடவடிக்கைகளாகவே பார்க்கப்படுகிறது.

எனவே தேர்தலுக்காக அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுப்பது பொருத்தமானதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பூந்துணர் X வெளியீடு-2020; ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப்பேரவை வெளியிடும் பூந்துணர் X வெளியீடு - 2020 ஒன்பதாவது நூலிற்கான ஆக்கங்கள் பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் அவர்களது சொந்தப்படைப்பாக இருக்க வேண்டும் எனவும் ஆக்கங்கள் எதிர்வரும் 10.04.2020 இற்கு முன் பிரதேச கலாசாரப் பேரவை தலைவர் பிரதேச செயலகம், பூநகரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளன.

கோரப்பட்டுள்ள ஆக்கங்களாவன,

கட்டுரை - 500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல்

கவிதை - 40 வரிகளுக்கு மேற்படாதிருத்தல்

சிறுகதை - 500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல்

நாடகம் - நான்கு காட்சிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் என்றும் ஆக்கங்களுக்கான பொதுவான நிபந்தனைகளாக

- ஆக்கங்கள் சமூகத்தின் பாரம்பரியங்களையும் வழக்காறுகளையும் கலைகளையும் வெளிப்படுத்துவனவாகவிருத்தல்.
- பிரதேச அபிவிருத்திக்கான மூலோபாயங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
- கட்டுரைகளுக்கு உசாத்துணைகள் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ஆக்கங்கள் தனிநபரையோ இனக்குழுக்களையோ புண்படுத்தாததாக அமைதல் வேண்டும்.
- மலர் வெளியீட்டுக்குழுவினரால் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் ஆக்கங்களே மலரில் பிரசுரிக்கப்படும்.
- ஆக்கங்கள் இலகுவானதும் ஏற்புடையதுமான மொழிநடையில் அமைதல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2-84)

# பிணைமுறி மோசடி; ரவி உள்ளிட்டோரின் ரிட்மனு குறித்த தீர்மானம் செவ்வாயன்று

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி மற்றும் மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறிகள் ஏலத்தின் போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்ட முன்னாள் நிதியமைச்சரும், ஐ.தே.கவின் உப தலைவருமான ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜரானார்.

அவருடன் பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் அர்ஜுன் அலோசியஸ், அதன் முன்னாள் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன உள்ளிட்ட 7 பேர் நீதிமன்றில் ஆஜராகினர்.

பிணைமுறிகள் மோசடி தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சந்தேக நபர்களை நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு முன்னர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன மற்றும் ஷோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாமே இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

தம்மை கைது செய்ய கோட்டை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையை, செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறு கோரி முன்னாள் நிதியமைச்சரும் ஐ.தே.க.உப தலைவருமான ரவி கருணாநாயக்க உள்ளிட்ட நால்வர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த ரிட் மனு மீதான பரிசீலனைகளின் இடை நடுவே இந்த உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்தது.

மேன் முறையீட்டு நீதி மன்றின் உத்தரவுக்கு அமைய நீதிமன்றத்தில் ஆஜராகும் சந்தேக நபர்களுக்கு எதிராக எவ்வித உத்தரவுகளையும் பிறப்பிக்க வேண்டாம் என கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகாத சந்தேக நபர்கள் தொடர்பில், சட்டமா அதிபர் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் நிலைப்பாட்டிற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 4 சந்தேக நபர்களால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனு மீதான பரிசீலனை நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்ட போதே இவ்வாறான ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த ரிட்மனு மீது நாளை மறுதினம் செவ்வாயன்று தீர்மானம் எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்நிலையில் அதுவரை சந்தேக நபர்கள் தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டினை முன்னெடுப்பது என்பது தொடர்பில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதிச் சொலிசிற்றர் ஜெனரல் மிலிந்த குணதிலகவின் ஒப்புதலுடன் மேன்முறையீட்டு நீதிமன்றம், இன்று இவ்வாறான உத்தரவைப் பிறப்பித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனியார் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு தடை; சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பில் பரிசோதிப்பதற்கு அல்லது வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளோர் சிகிச்சை பெற்றுக் கொள்வோர் அரச வைத்தியசாலைகளுக்கு மாத்திரமே செல்ல வேண்டும் என்று சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவிக்கையில்,

அரச வைத்தியசாலைகளில் மாத்திரமே கொரோனாப் பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் வைத்தியசாலைகளுக்கு இது தொடர்பில் அரசாங்கம் அறிவுறுத்தல் எவற்றையும் முன்னெடுக்கவில்லை.

இது தொடர்பான பரிசோதனைகள் அரச மருத்துவப் பரிசோதனை நிலையம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடம், கராப்பிட்டி மற்றும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை உள்ளிட்டவற்றிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்வரும் சில தினங்களில் வட கொழும்பு வைத்தியசாலையிலும் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பொதுக்கூட்டங்களை மட்டுப்படுத்த பொதுஜன பெரமுன தீர்மானம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுக் கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடலை நேற்று முதல் மறு அறிவித்தல் வரும் வரை கணிசமாக மட்டுப்படுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, சுகாதார அதிகாரிகள் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைக் குறைக்க இது உதவும் என்று நாமல் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (இ-7)

# யாழ்.விமான நிலையம் ஊடாக இந்தியர்கள் நுழையத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியர்கள் நுழையத் தடைவிதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள இந்தியர்கள் தமது நாட்டுக்குச் செல்வதற்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2020

## நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடிவரும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே ராகு வீற்றிருக்கிறார். இராசிநாதன் புதன் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 9 இற்கு அதிபதியான சனி பகவான், தனது வீட்டில் சஞ்சரிக்கும் புதனைப் பார்க்கிறார். இதன் விளைவாக சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

இலாப ஸ்தானத்தில் விரயாதிபதி சுக்கிரன் வீற்றிருக்கிறார். சுக்கிரன் 12 ஆம் இடத்திற்கு மட்டும் அதிபதியானவர் அல்ல,5 ஆம் இடத்திற்கும் அதிபதியாவார். 5 ஆம் இடம் புத்திர ஸ்தானம் என்பதால், பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்பட வாய்ப்புண்டு. அதேநேரம் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், வரும் விரயம் சுப விரயமாகவே அமையும்.

பொதுவாக இந்த மாதத்தின் தொடக்கத்தில் செவ்வாய், சனி சேர்க்கையால் சில பிரச்சினைகள் உருவாகலாம். மார்ச் 22 ஆம் திகதி செவ்வாய் பெயர்ச்சியாகி, மகரத்திற்கு சென்று உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். எனவே இடம், பூமியால் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

குரு நீச்சம் பெறும் மாதமிது. நீச்சம் பெற்றாலும் அதன் பார்வைக்குப் பலன் கிடைக்கும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தைக் குரு பார்க்கப் போகிறார். மகர குருவின் சஞ்சார காலத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மக்கள் செல்வங்களின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். இம்மாதம் பங்குனி உத்தரத் திருநாள் வருகிறது. அன்றையதினம் முழுமையாக விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபடுங்கள்.

மகர செவ்வாய் சஞ்சாரம்

மார்ச் 22 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல என்றாலும் 6 இற்கு அதிபதியாக விளங்கும் செவ்வாய், 8 ஆம் இடத்திற்கு வரும் பொழுது 'விபரீத ராஜயோகம்' செயற்படும். இதனால் வாழ்வில் திடீர் திருப்பங்கள் பல ஏற்படும். ஆரோக்கியத்தில் சிறுசிறு அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.

மகர குரு சஞ்சாரம்

குரு நீச்சம் பெறும் மாதமிது. நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். சப்தமாதிபதியாக விளங்கும் குரு, 10 ஆம் இடத்திற்கும் அதிபதி. அதோடு கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவராகவும் விளங்குகிறார். எனவே அவர் நீச்சம் பெறும் பொழுது 7 ஆம் இடத்திற்கும், 10 ஆம் இடத்திற்கும் உரிய ஆதிபத்யங்களை எளிதில் நிறைவேற்றுவார். குறிப்பாக வெளிநாட்டு முயற்சியில் ஒருசில அனுகூலங்கள் கிடைக்கும். மணமாலையை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு உருவாகும். தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு அதற்




கான மூலதனம் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். விரயாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், வீடு, இடம், ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. அதுமட்டுமல்லாமல் பெண்வழிப் பிரச்சினைகளும் நல்ல முடிவிற்கு வரும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

விலை உயர்ந்த வாகனங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

நீச்ச புதன் சஞ்சாரம்

ஏப்ரல் முதலாம் திகதி மீன இராசிக்கு செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். நீச்சம் பெற்ற புதன் தன் வீட்டைத் தானே பார்க்கப் போகிறார். இராசிநாதனாகவும், சுகாதிபதியாகவும் விளங்குபவர் புதன்.

அவர் தனது வீடான 4 ஆம் இடத்தைப் பார்க்கும் பொழுது சந்தோஷம் அதிகரிக்கும். விற்ற சொத்துக்களுக்கு இணையாக, புதிய சொத்துக்கள் வாங்கும் யோகமும் வாய்க்கும். இம்மாதம் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவை வழிபட்டு வாருங்கள்.

பெண்களுக்கான
சிறப்புப் பலன்கள்

இம்மாதம் கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், திடீர் விரயங்கள் ஏற்படும். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். தாய்வழி ஆதரவு, சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். ஏற்ற இறக்கம் இல்லாத வாழ்வு அமைய, நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்துகொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு சக ஊழியர்களால் பிரச்சினைகள் உருவாகும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.

திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். கண்டகச் சனி விலகும் வரை பொறுமையோடு செயற்படுவதே உத்தமம்.

## உயர் பதவிகள் கிடைக்கும் நேரம்



விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. மேலும் உங்களுக்கு யோகம் தரும் கிரகமான செவ்வாயோடு குரு கூடி, குரு-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். தொழிலில் இருக்கும் குறுக்கீடு அகலும்.

6 ஆம் இடத்தில் சனியும், கேதுவும் இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதியாக விளங்கும் சனி பகவான் 6 ஆம் இடத்திற்கு வரும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். குறிப்பாக தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கடந்த மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். சொத்துக்களால் வந்த பிரச்சினைகளை உடனே தீர்த்துக் கொள்வீர்கள். சொந்த பந்தங்களின் ஒத்துழைப்போடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

புதன் உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் இருக்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். எனவே சகோதர வழியிலும், வெளிநாட்டு முயற்சியின் மூலமும் சில சாதகமான பலன்கள் உங்களுக்கு கிடைக்கலாம். சூரிய பலம் நன்றாக இருப்பதால் பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். உத்தியோகத்தில் உள்ளவர் களுக்கு ஊதிய உயர்வும், திறமைக்கேற்ப உத்தியோக உயர்வும் வந்து சேரலாம்.

12 இல் ராகுவும், 6 இல் கேதுவும் இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசும் நீங்கள் சில சமயங்களில் சிக்கல்களையும் வரவழைத்துக்கொள்ள நேரிடும். எனவே கொஞ்சம் கவனத்துடன் இருப்பது நல்லது. இம்மாதம் பங்குனி உத்தரத் திருநாள் வருவதால் அன்றைய தினம் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபடுங்கள்.

மகர செவ்வாய் சஞ்சாரம்

மார்ச் 22 ஆம் திகதி மகர இராசிக்கு, செவ்வாய் செல்கிறார். அங்கு உச்சம் பெற்று விளங்கும் செவ்வாய் மிகுந்த யோகத்தைக் கொடுக்கப்போகிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வெற்றிக்குரிய செய்திகள் வீடு தேடி வரும். எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். இடம், பூமியால் லாபம் உண்டு. இதுவரை விற்பனையாகாத இடங்கள், இப்பொழுது நல்ல விலைக்கு விற்று அதன் மூலம் புதிய இடங்கள் வாங்க முயற்சிப்பீர்கள்.

நீச்ச குரு சஞ்சாரம்

மார்ச் 27 ஆம் திகதி குரு பகவான் மகரத்திற்கு செல்கிறார். அங்கு அவர் நீச்சம் பெறுகிறார். இருப்பினும் அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவது யோகம்தான். இதனால் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். எதிலும் நீங்கள் துணிந்து




முடிவெடுப்பீர்கள். அங்ஙனம் எடுத்த முடிவு வெற்றியைத் தேடித் தரும். உத்தியோகத்தில் வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கும்.

ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். சுக்கிரனுக்கு அது சொந்த வீடாகும். இராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது, இலாப ஸ்தானமாக ரிஷப இராசி கருதப்படுவதால் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும்.

விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். தொழிலில் இருந்த தேக்க நிலை மாறும்.

நீச்ச புதன் சஞ்சாரம்

ஏப்ரல் முதலாம் திகதி மீன இராசிக்குப் புதன் செல்கிறார். அது புதனுக்கு நீச்ச வீடு. உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 12 இற்கு அதிபதி நீச்சம் பெறும்பொழுது பயணங்களால் பலன் உண்டு. புதிய வாகனங்கள் வாங்கும் சந்தர்ப்பம் கைகூடி வரும்.

திட்டமிட்ட காரியங்களில் திட்டமிட்டபடியே வெற்றி காண்பீர்கள். மாமன், மைத்துனர் வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். பிள்ளைகளின் கடன் சுமைகளை நிறைவேற்றி, பிறரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். இம்மாதம் யோகம் தரும் செவ்வாயை பலப்படுத்த செவ்வாய் தோறும் முருகனை வழிபடுங்கள்.

பெண்களுக்கான
சிறப்புப் பலன்கள்

இம்மாதம் இனிய மாதமாக அமையும். எடுத்த முயற்சிகளில் இருந்த குறுக்கீடுகள் அகலும். மார்ச் 22 ஆம் திகதி செவ்வாய் உச்சம் பெறுவதால், தேக நலம் சீராகும். தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளை உங்கள் மேற் பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். செவ்வாய், சனி சேர்க்கை இருப்பதால் ஒருசில சமயங்களில் உறவினர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். தாய் மற்றும் சகோதரர்களால் உதவி கிட்டும். பெண்களுக்குச் சகபணியாளர்களால் பிரச்சினை வரலாம். தேவையான சலுகைகளை, மேலதிகாரிகள் வழங்குவர். இம்மாதம் செவ்வாய் தோறும் வராகி வழிபாட்டை மேற்கொண்டால் தடைகள் அகலும்

(தொடரும்)

## தேவையான எரிபொருள் கையிருப்பில்

# தேவையற்ற நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் விநியோகிப்பதற்கு தேவையான பெற்றோல் கையிருப்பிலுள்ள நிலையில் மக்கள் தேவையற்ற நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டாம் என அநுராதபுரம் பெற்றோலியக் கூட்டுத்தாபன சாலை முகாமையாளர் நாலக தெரிவித்தார்.

நாட்டில் விடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் பொது மக்கள் தேவைக்கு அதிகமாக பெற்றோலை கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக வாரத்தில் திங்கள் - சனிக்கிழமை வரை பெற்றோல் விநியோகத்தில் ஈடுபட்ட நாம் தற்போது ஞாயிற்றுக்கிழமைகளிலும் விநியோக நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம்.

எனவே, எரிபொருள் முழுவற்ற நிரப்பு நிலையங்கள் தமக்கான எரிபொருள் கோரல்களை உரிய இடங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கும் போது தொடர்ச்சியாக சேவையை வழங்கத் தாம் தயாராகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## "அதிக பீதியை உருவாக்க விரும்பவில்லை"

# வழமை போன்று வழிபாடு

## பேராயரின் செய்தித் தொடர்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் ஆபத்தான நிலையை எட்டாததால் தேவாலயங்களில் ஞாயிறு ஆராதனைகளை நடத்துவதை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லையென கொழும்பு கத்தோலிக்க மறைமாவட்டம் தெரிவித்தது.

"இதேவேளை இக்காலகட்டத்தில் ஞாயிறு ஆராதனைகளை நிறுத்துமாறு தேவாலயங்களைக் கேட்டு நாங்கள் அதிக பீதியை உருவாக்க விரும்பவில்லை" என்று கொழும்பு பேராயரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மேலும், "வைரஸ் பரவாமல் தடுக்க அனைத்துப் பாடசாலைகளையும் மூடுவதற்கான தனது முடிவை அரசாங்கம் ஏற்கனவே அறிவித்தது. எனவே மக்கள் மத்தியில் அதிக அச்சத்தை உருவாக்க வேண்டிய அவசியமில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கத்தோலிக்க பாடசாலைகளின் அதிபர்களுக்கு மறைமாவட்டம் அறிவுறுத்தியிருந்த நிலையில், கத்தோலிக்க பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# றிசாத்தின் சகோதரருக்கு அரச சார்பற்ற நிறுவனம் 100 கோடி ரூபா வழங்கியுள்ளதாக சி.ஐ.டி.தகவல்!

(கல்கிஸை)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரரான றியுதீன் மொஹமட் றியாஜ்ஜின் மக்கள் வங்கியிலுள்ள கணக்குக்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றிடமிருந்து கிடைக்கப் பெற்ற சுமார் நூறு கோடி ரூபாய் தொடர்பில் சி.ஐ.டி.எனும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கல்கிஸை பிரதான நீதவான் உதேஷ் ரணதுங்கவுக்கு விசாரணையாளர்கள் அறிவித்துள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் நிரோஷா இதனை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் நுவான் வெதசிங்க மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ திலகரத்ன ஆகியோருக்கு, கடந்த பெப்ரவரி மாதம் சதொச நிலையத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பான ஆவணங்கள் வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டுள்ளதாக புலனாய்வு தகவல் ஒன்று கிடைத்தது.

கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பில் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்து பெற்றுக் கொண்ட சோதனை உத்தரவுக்கமைய சோதனை நடவடிக்கைகளை சி.ஐ.டியினர் முன்னெடுத்து ஆவணங்கள் பலவற்றை மீட்டதுடன் ஒருவரைக் கைதும் செய்தனர்.

இது குறித்த நீதவான் நீதிமன்ற விசாரணைகள் நேற்று முன்தினம் மீள கல்கிஸை நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றன.

இதன்போது சம்பவம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான மொஹமட் இம்ரான் என்ற நபர் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சி.ஐ.டியின் விசாரணையாளர்கள் சார்பில் விசாரணை அதிகாரி, பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் நிரோஷா, பொலிஸ் பரிசோதகர் பிரியஞ்ஜித், உப பொலிஸ் பரிசோதகர் ஆனந்த மற்றும் சார்ஜன் பெரமுன உள்ளிட்டோர் ஆஜராகினர்.

இந்நிலையில் குறித்த விவகாரத்தில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகள் தொடர்பில் பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் நிரோஷா நீதவானுக்கு மேற்கண்ட விடயங்களை தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபரின் பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதவான் அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

## கொரோனாவை ஒழிக்க ஒன்றுபடவேண்டும்

# மோடியின் அறிவிப்புக்கு கோட்டாபய பதில்!

(கொழும்பு)

கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு வலுவான மூலோபாயத்தை வகுக்க தெற்காசிய நாடுகளின் தலைமைகள் ஒன்றுபட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் பிரதமர் மோடியின் அறிக்கைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதிலளித்துள்ளார்.

அதாவது கொரோனா வைரஸை முழுமையாக அழிக்கும் செயற்றிட்டம் தொடர்பான உரையாடலில் கலந்துகொள்ள தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய தெரிவிததார்.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5,000 ஐ எட்டியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# சவால்களை மக்களுக்குப் புரியவைக்க ஒரு நாள் கழிவகற்றல் நிறுத்தம்!

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் வலியுறுத்து

(சாவகச்சேரி)

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சாவகச்சேரி நகரசபை எதிர்கொள்கின்ற சவால்களை பொது மக்களுக்குப் புரிய வைக்கும் முகமாக எதிர்வரும் 20.03.2020 வெள்ளிக்கிழமை (ஒரு நாள்) கழிவகற்றலை நிறுத்த சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் சபையில் தீர்மானித்தனர். சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே உறுப்பினர்கள் இவ் யோசனையை முன்வைத்தனர். இது தொடர்பாக உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை கழிவகற்றலை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் அக்கழிவுகள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதில்லை. இதனால் அக்கழிவுகள் தேங்கிக்கச்சாய் கடல் நீரேரியுடன் கலக்கின்ற அதே தருணத்தில் காற்றுடன் பறந்து அருகிலுள்ள உதய சூரியன் கிராமத்திற்கும் செல்கிறது.

இதனால் சுகாதார மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் முன்னெடுக்கப்பட்ட மலக்கழிவுகளை உரமாக்கும் திட்டமும் இடை நடுவில் கைவிடப்பட்டது. இதனால் நகர சபைக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகிறது. மீள் சுழற்சி மற்றும் இடை நிறுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பாக உரிய திணைக்களங்கள் சாவகச்சேரி நகரசபைக்கு உரிய பதில் வழங்க வேண்டும்.

இல்லையேல் எதிர்வரும் 20 ஆம் திகதி சபை உறுப்பினர்கள் கூடி கழிவகற்றல் செயற்பாடுகளை நிறுத்துவோம். இதனூடாகவே கழிவு முகாமைத்துவம் தொடர்பாக நகராட்சி மன்றம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ள முடியும் என அவர்கள் மேலும் வலியுறுத்தினர். (இ-30)

# உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு!

(கல்முனை)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான 12 பேருக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

குறித்த வழக்கு கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையின் விசாரணைக்கு இருவேறு சந்தர்ப்பங்களில நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி விசாரணைக்காக வந்த சந்தேகநபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத் தரப்பினர்களால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கைதானோரில் இருவர் பாதுகாப்புத் தரப்பினரின் முகாம் ஒன்றில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இவர்களின் தடுப்புக்காவல் நிறைவடைவதைச், சுட்டிக்காட்டிய போதிலும் சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கப்பெறாமையையும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை இன்னும் நிறைவடையவில்லை என மன்றின் ஆஜரான பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.


மேலும், குறித்த சந்தேக நபர்கள் தொடர்பான பிணைக் கோரிக்கை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளை பொலிஸாரின் ஆட்சேபனை காரணமாக அனைத்துச் சந்தேகநபர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-10)

# ஆயுதப் போராட்டம் ஓய்ந்தபின் இராஜதந்திர ரீதியில் எமது பயணம்

## சிறீதரன் தெளிவுபடுத்தல்

(இயக்கச்சி)

**தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் விடுதலைப் போராட்டத்தை ஆயுத ரீதியில் அதியுச்ச நிலைக்கு கொண்டு வந்தார்.ஆனால் அந்த ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர் எமது பயணம் இராஜதந்திர ரீதியில் இடம்பெற்று வருகிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டினார்.**



தமிழர்களின் தேவைகளை தமிழர்களே கூற வேண்டுமே தவிர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ சிங்கள அரசியல் தலைவர்களோ அல்ல எனவும் சிறீதரன் தெரிவித்தார்.

இயக்கச்சி விநாயகர்புரம் மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற் றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அண்மையில் ஜனாதிபதி யால் தமிழ் மக்களுக்கு பொரு ளாதார ரீதியிலான பிரச்சினை இருப்பதாக கூறப்பட்டிருந்தது. கருத்துக்கு பதிலளிக்கும் வகை யிலே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், தமிழர்கள் இந்த மண்ணி னுடைய பூர்வீகக் குடிகள். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்த போது தமிழர்கள் இந்த மண்ணிலே இறைமை யுடனே வாழ்ந்தவர்கள்.

தனியான இராசதானிக ளோடு வாழ்ந்தவர்கள். ஐரோப் பியர்களின் வருகையின் பின் னர் அவர்க ளால் இலங்கைக்கு வழங்கப் பட்ட சுதந்திரத்தின் பின்னரே எமது இறைமையும் சுதந்திரமும் எங்கள் மண் ணும் பறிக்கப்பட்டது. அதன் பின்னரே தந்தை செல்வாவினால் தமிழர் களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது.

அதன் பின்னர் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன விடுதலைப் போராட்டத்தை ஆயுத ரீதியில் அதியுச்ச நிலை க்கு கொண்டு வந்தவர் .ஆனால் அந்த ஆயுதப்போராட்டம் நிறை வுற்றதன் பின்னர் எங்களின் விடுதலைப் போராட்டம் இராஜ தந்திர ரீதியில் இடம் பெற்று வருகிறது.

மீண்டும் இராணுவ கெடுபிடிகள் ஆரம்பித்திருக்கிறது. எங்களின் உரிமைகள் கிடை க்கப் பெற்றால் நாம் சுயமாகவே மேலெழும்புவோம்.

எமது மண்ணிலே இயங்கிய சீமெந்துத் தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை, உப்பளம் போன்றவை எம்மால் மேற்கொள்ளப்பட்டால் நாங்கள் பொருளாதார ரீதியிலும் வேலை வாய்ப்பு தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் த.றமேஸின் தலை மையில் இடம்பெற்றது.

இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கஜன், பிரதேச சபையின் உறுப்பினர்க ளான வீரவாகு தேவர் அருட் செல்வி, வட்டார அமைப்பாளர் பிரசன்னா பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஜ-2)

# மதச் சார்பற்ற அரசியல் தலைவர்களே தேவை

## மன்னார் மாவட்ட சர்வமத பிரதிநிதிகள் தெரிவிப்பு

(மன்னார்)

மதச் சார்பற்ற அரசியல் தலை வர்களை தேர்ந்தெடுக்க மக்க ளுக்கு வழிகாட்டுவதே சர்வமதத் தலைவர்களின் கடமையாகும் என மன்னார் மாவட்ட சர்வ மதப் பிரதிநிதிகள் தெரிவித் தனர்.

நாடளாவிய ரீதியில் வதந் திகள் மூலம் ஏற்படுகின்ற இன, மத ரீதியான வன்முறைகளைத் தடுக்கும் முகமாக தேசிய சமாதா னப் பேரவை மற்றும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங் கம் ஆகியவை இணைந்து ஏற் பாடு செய்திருந்த விசேட நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழல்ம காலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் தேசிய சமாதானப் பேர வையின் 'மன்னார் மாவட்ட இணைப்பாளர் அன்ரன் மெடோ சன் பெரேரா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சர்வமத பிரதிநிதி கள் மேற்கண்டவாறு தெரிவித்த னர்.

சர்வமதத் தலைவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய அரசியலில் பல் வேறு வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. வன்னித்தேர்தல் தொகுதியில் பதவிக்கு வருவதற் காக எல்லா வித அரசியல், சமய, சமூக தனி மனித காரியங்களை ஆயுதமாகப் பயன்படுத்தி தவ றான பிரசாரங்களை மேற்கொள் கின்றனர்.

இது தற்போது சமூகத்தினுள் பெரிய பிரிவை ஏற்படுத்துகின் றது.

எனவே சமயத்தில் மதத் தலைவர்களாக, சமூக தலைவர் களாக சரியான கருத்தை தெளிவு படுத்தி அரசியல், சமூக, சமய பக்கச்சார்பின்றி நடத்துவதும், தலைமைத்துவத்துக்கு வந்தவு டன் மத பக்கச்சார்பின்றி வழிந டத்தக் கூடிய, ஒரு தலைவரை இனங்காட்டக் கூடிய ஒரு பொறு ப்பு மதத் தலைவர்களுக்கு இரு க்கின்றது.

அரசியல் வேறு, மதம் வேறு என்ற நிலைப்பாட்டில் தேர்தலில் செயற்பட வேண்டும்.

எனவே இந்தத் தேர்தலில் இன, மத ஒற்றுமைக்காக செயற் பட வேண்டும் எனவும் தெரிவித் தனர்.

அண்மைக்காலமாக மன் னார் மாவட்டத்தில் இடம் பெற்ற மத ரீதியான வன்முறைகள் தொடர்பாகவும், பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றினால் ஏற்பட்ட விபரீத பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டதோடு, குறித்த பிரச்சினை களை தீர்த்துகொள்வது தொடர் பாகவும் கலந்துரையாடப்பட் டது.

இந் நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள்,விசேட தேவையு டையவர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஜ-2-285)




# நெல்லுடன் புதையுண்ட வாகனம்



வருடா வருடம் மழை வெள் ளத்தால் பெரிதும் பாதிப்புறும் கண்டாவளை பிரதேச விவசாய மக்கள் வெள்ளம் சென்று பல மாதங்கள் கடந்தும் அதன் பலனை அனுபவித்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

வெள்ளத்தினால் விளை ச்சல் பாதிப்படைந்த நிலையில் வெட்டி எடுக்கப்பட்ட நெல்லை ஏற்றுமதி செய்வதிலும் பல இன் னல்களை எதிர்நோக்குகின் றனர்.

இந்த நிலையில் தான் கண்டாவளை பிரதேச புளியம் பொக்கணை கிராமத்தில் விவசாயி ஒருவரிடம் நெல் கொள்வனவு செய்துகொண்டு சென்ற கனரக வாகனம் ஒன்று கடந்த வியாழக் கிழமை புதையுண்டு நெல் மூடைகள் இறக்கப்பட்டு சிரமப் பட்டே வாகனம் நகர்த்தப்பட்டது.

இவ் இடத்திலேயே அறு வடையின் பின்னர் பல நெல் வாகனங்கள் புதையுண்டதால் தற்போது இங்கு நெல் கொள் வனவு செய்பவர்கள் வரத்தயங் குவதாகவும் தமது நெல் மூடை களை நல்ல விலைகளில் விற்க முடியாது உள்ளது எனவும் தங் கள் கிராமத்தின் பிரதான வீதி யான இவ் வீதியை உரிய அதிகாரிகள் கவனத்திற்கொ ண்டு சீர்செய்து தரவேண்டும் எனவும் கிராம மக்கள் கேட்டுள் ளனர். (ஜ-2)

# மன்னாரில் வெடிபொருட்கள்; சந்தேகத்தில் அகழ்வுப்பணிகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி,பேசாலை பிரதேச த்திற்குட்பட்ட வியாயடிப் பண்ணை காட்டுப் பகுதியில் ஆயுதங்கள் உள்ளிட்ட சந்தேகத்திற்கு இட மான வகையில் பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலில் குறி த்த பகுதியில் இரண்டாவது நாளா கவும் நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை காலை அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் குறித்த அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்ற போதும் தற்போது வரை எவ்வித ஆயுதங்களும் மீட்கப்படவி ல்லை. மன்னார்-தலைமன் னார் பிரதான வீதி,பேசாலை பிரதேசத்திற்குட்பட்ட வியாயடிப் பண்ணைக் காட்டுப் பகுதியில் ஆயுதங்கள் உள்ளிட்ட சந்தேகத் திற்கு இடமான வகையில் பொரு ட்கள் புதைத்து வைக்கப்பட்டு ள்ளதாக மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த தக வலுக்கு அமைவாக மன்னார் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று கடந்த வியாழக்கிழமை மாலை குறித்த பகுதியில் அகழ்வு நடவ டிக்கை இடம் பெற்றது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை காலை 2 ஆவது நாளாகவும் மன்னார் நீதவான் முன்னிலையில்குறி த்த பகுதியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் எவ்வித ஆயுதங் களும் மீட்கப்படவில்லை. தொட ர்ந்தும் அகழ்வுப்பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிட த்தக்கது. (ஜ-2-285)

நீ உண்மையைத் தேட
விரும்பினால் உன் எதிரியின்
வார்த்தைக்கு அர்த்தம் கொடு. ~ஜான் பவுல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உன்னால் முடிந்தால் தடுத்துப் பார் மனிதா!

அரிது அரிது மானிடர் ஆவது அரிது என்பது ஞானவான்களின் கூற்று.

உலகிலுள்ள அத்தனை பிறவிகளிலும் மனிதப் பிறவிக்கு இருக்கக்கூடிய மேன்மைக்குக் காரணம் பகுத்தறியும் பேராற்றலாகும்.

மனிதர்கள் மட்டுமே பாவபுண்ணியத்தை உணரக்கூடியவர்கள். தர்மத்தின் வழியில் நடக்கக் கூடியவர்கள்.

இந்த உலகம் இறைவனின் படைப்பு என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடியவர்கள். அதனால் மனிதப் பிறவி அனைத்து ஜீவராசிகளினின்றும் மேன்மையானதாகின்றது.

காடுகளில் ஒரு விலங்கு இன்னொரு மிருகத்துக்கு உணவாகிறது.

வேட்டையாடாவிட்டால், உணவில்லை என்பது சிங்கத்தினதும் வேங்கையினதும் தலைவிதி.

இதனால் காடுகளில் சதா உணவுப் பலி நடந்து கொண்டே இருக்கிறது.

சிங்கத்தின் வேட்டைக்குத் தப்பினால் மட்டுமே மான் உயிர்வாழ முடியும்.

மாறாக மானைக் கொல்லாவிட்டால் சிங்கம் உணவின்றி உயிரிழந்து போகும்.

ஆக, ஐந்தறிவுப் படைப்பில் கொல்வதும் கொன்று புசிப்பதும் ஏற்புடைய தர்மமாகிறது.

ஆனால் இஃது மனிதர்களுக்குப் பொருந்தாது. எனினும் ஊர்வன, பறப்பன, நடப்பன என அனைத்தையும் கொன்று புசிக்கும் பிறவிகளாக மனிதர்கள் மாறியபோது இயற்கையின் படைப்பு ஒழுங்கற்று போயிற்று.

தனித்து சைவ உணவை மட்டுமே புசிக்கக் கூடியதாக மனித உடல் படைக்கப்பட்டது.

ஆனாலும் அசைவப் பிரியர்களாக நாம் மாறி விட்டோம். இது உலகம் முழுவதும் பரவிக்கிடக்கும் நோய்.

உயிரினங்கள் அனைத்தும் மனிதர்களுக்கான மாமிச உணவு என்ற கொள்கை கொண்ட சீனாவில் ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்று இன்று உலகம் முழுவதையும் உலுப்பி நிற்கிறது.

ஆம், கொரோனாத் தொற்றைத் தடுக்க பல்முனை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் எங்கே நீயா? நானா? பார்க்கலாம் என்று சபதம் செய்கிறது இயற்கை.

இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த மனிதன் இயற்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வண்ணம் என்று நடக்கத் தலைப்பட்டானோ அன்று இயற்கையின் இயங்கு நிலை குழம்பியது.

புதுப்புது வியாதிகள் மனித சமூகத்தை அச்சுறுத்தி நிற்கிறது.

என்ன செய்வது இந்த மண்ணில் ஒன்றுடன் தொடங்கிய கொரோனா இன்று பத்தாயிரம் நூறாகும் பயங்கரத்தைத் தந்து நிற்கிறது.

இந்நிலையில் கடவுளால் படைக்கப்பட்ட மேன்மை மிகுந்த மனிதப் பிறவியை பக்குவமாக, பிறர்க்குத் தீங்கு செய்யாத வண்ணம் ஆக்கிக் கொள்ள வேண்டும். அதுவொன்றுதான் பேராபத்திலிருந்து மானிடம் விடுபடுவதற்கான ஒரே வழியாகும்.

## மன்னாரில் உள்ள உணவகங்களுக்கு விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட

### 224 கிலோ கழிவு தேயிலையுடன் மூவர் கைது

(மன்னார்)

மன்னார் பகுதியில் உள்ள உணவகங்களுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி பாவனைக்கு உதவாத கழிவு தேயிலை மூடைகளை வங்காலையில் வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கடற்படையினரும், வங்காலை பொலிஸாரும் இணைந்து மீட்டுள்ளனர்.

குறித்த சொகுசு வாகனத்தின் இருக்கைகள் அகற்றப்பட்டு சுமார் 8 மூடைகளில் அடைக்கப்பட்ட பாவனைக்கு உதவாத 224 கிலோ கிராம் கழிவு தேயிலையை மீட்டுள்ளனர்.

மேலும் குறித்த சொகுசு வாகனத்தில் பயணித்த மூன்று நபர்களையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் முசலி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

-கைது செய்யப்பட்டவர்கள் வங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, சொகுசு வாகனம் மற்றும் மீட்கப்பட்ட கழிவு தேயிலை மூடைகளும் வங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-3.285)

## லண்டனில் பிறந்த குழந்தைக்கும் கொரோனா வைரஸ் தொற்று

(லண்டன்)

லண்டனில் பிறந்த குழந்தை கொரோனா வைரஸால் பாதிக் கப் பட்டுள்ளது. மேலும் அந்தக் குழந்தை கோவிட் -19 வைரஸால் பாதிக்கப்பட்ட இளையவர் என்று கருதப்படுகிறது.

தாய் பிரசவத்தை மேற்கொண்டபோது குழந்தைக்கு உடனடியாக நிமோனியாவின் அறிகுறிகள் பரிசோதிக்கப்பட்டன. மேலும் குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்தது.

கர்ப்பம் அல்லது பிரசவத்தின்போது இந்த வைரஸ் தொற்றப்பட்டதாக கருதப்படுகிறது.

இதேவேளை கொரோனா வைரஸ் இங்கிலாந்தில் 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு தொற்றியுள்ளதுடன் 10 பேர் இறந்துள்ளனர் (ம-3)

## தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை இரண்டு வாரங்களுக்கு பூட்டு

(கொழும்பு)

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் புகலகம் மற்றும் உயிரியல் பூங்கா, ரிடியாகம சபாரி பூங்கா ஆகியன நேற்று தொடக்கம் 2 வாரங்களுக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா அச்சநிலை காணப்படும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்க பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

பொதுமக்களை பொது இடங்களில் தவிர்க்கும் நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு எடுத்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

### கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த

## பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த இ.போ.ச அவதானம்

(கொழும்பு)

பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை போக்குவரத்து சபை அவதானம் செலுத்தியுள்ளது.

போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பயணிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அதிகாரி ஒருவர் குறிப் பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக அனைத்து சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு முகக்கவசம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்து வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3.114)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** அராலி பிரதேசம், செட்டியார்மடம் சந்தி, காரம்பிட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி ஜயனார் கோவிலடி, அராலி குடியிருப்பு, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## கொரோனாவினால் யுத்த காலத்தையும் விட அதிக பாதிப்புக்கள் ஏற்படலாம்-ஆசு மாரசிங்க

(கொழும்பு)

கொரோனா வைரஸினால் யுத்த காலத்தையும் விட பெருமளவான இழப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் தற்போது பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான இரு நோயாளர்கள அடையாளம்காணப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான அச்சம் மேலும் வலுப்பெற்றுள்ளது.

அரசாங்கம் தற்போது இத்தாலி, தென்கொரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகள் தொடர்பில் செலுத்தும் கவனத்தை , சீனப் பிரஜைகள் மீது ஏன் செலுத்தாமல் இருக்கின்றது.

இந்த வைரஸ் பரவல் சுமார் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கும் என்ற அச்சம் இருக்கின்றது. இந்நிலையில் அதுவரையான காலப்பகுதியில் வைரஸ் தாக்கத்திற்குள்ளானவர்களுக்கு சிகிச்சை வழங்கும் வசதிகள் எமது நாட்டில் இருக்கின்றதா? என்பது தொடர்பில் சிந்தித்து பார்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பேச்சு பெரியதே. ஆனால் மௌனத்தின் மொழி அதைவிடப் பெரியது. -கிருபானந்த வாரியார்

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருகாலமும் பசியடையான். விசுவாசமாயிருக்கிறவன் ஒருகாலமும் தாகமடையான்.
- இருக்கிறவரும், இருந்தவரும், மீண்டும் வருகிறவருமாகிய சர்வ வல்லவராகிய நான், ஆதியும், அந்தமும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன்.
- இரண்டு பேர் மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடி இருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருக்கிறேன். நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்.
- நானே, வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னைக் கண்டவன் கடவுளை கண்டவன். நானும் கடவுளும் ஒன்றாக இருக்கிறோம்.
- நான் உலகின் ஒளியாயிருக்கிறேன். நான் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.
- வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் தருவேன்.

# பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரை விரைவாக முடிக்க திட்டம்

கொரோனா வைரஸ் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரை விரைவாக முடிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

இதன்படி பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் வடிவம் மற்றும் அட்டவணை திருத்தப்பட்டுள்ளது. இதற்கமைய விளையாடும் நாட்களின் எண்ணிக்கையை 4 ஆகவும் போட்டிகளின் எண்ணிக்கையை 34 முதல் 33 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள போட்டிகளை மாற்றியமைத்து, பிளே ஓஃப்களை இரண்டு அரையிறுதிக்கு மாற்றியது. முன்னதாக பிளே-ஓஃப் சுற்றில் இறுதிப் போட்டிக்கான தகுதிப் போட்டி, வெளியேற்று சுற்றுகள் நடைபெறும் வகையில் இருந்தது. தற்போது அது அரையிறுதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

மேலும், பெஷாவர்ஸல்மியின் பயிற்சியாளர் ஜேம்ஸ் ஃபாஸ்டர் மற்றும் இஸ்லாமாபாத் யுனைடெட் பயிற்சியாளர் கோரேரட் ஜெர்ஷேவ் மற்றும் 14 வெளிநாட்டு வீரர்களை வெளியேறவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பணித்துள்ளது.

இதன்படி, வீரர்களில், அலெக்ஸ் ஹேல்ஸ் (கராச்சி கிங்ஸ்), ரிலே ரோசோவ்(முல்தான் சுல்தான்ஸ்), டொம் பான்டன், கார்லோஸ் பிராத்வைட், லியாம் டாசன், லூயிஸ் கிரிகோரி மற்றும் லியாம் லிவிங்ஸ்டன் (பெஷாவர் ஸால்மி), ஜேசன் ரோய் மற்றும் டைமல் மில்ஸ் (குவெட்டா கிளாடியேட்டர்ஸ்), கொலின் முன்ரோ, டேல் ஸ்டெய்ன், டேவிட் மாலன் மற்றும் லூக் ரோஞ்சி (இஸ்லாமாபாத் யுனைடெட்) ஆகியோர் போட்டிகளில் இருந்து வெளியேறினர்.

திருத்தப்பட்ட அட்டவணையின்படி, இரண்டு அரையிறுதிகளும் மார்ச் 17 ஆம் திகதி இரட்டைப் போட்டிகளாக விளையாடப்படுகின்றன.

முதல் அரையிறுதிப் போட்டி உள்ளூர் நேரம் 2 மணிக்கும், இரண்டாவது போட்டி உள்ளூர் நேரம் இரவு 7 மணிக்கும் நடைபெறவுள்ளன.

மகுடத்திற்கான இறுதிப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி உள்ளூர் நேரம் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த விளையாட்டுகள் அனைத்துப் போட்டிகளும் லாகூரின் கடாபி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (ஜ-2)

# அவுஸ்திரேலியா - நியூசிலாந்து ஒரு நாள் தொடர் ஒத்திவைப்பு

கொரோனா அச்சம் காரணமாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதால் பொது நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்படுகின்றன.

கொரோனா அச்சம் காரணமாக நாளை 16 ஆம் திகதி முதல் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை நடைபெறுவதாக இருந்த அனைத்து பட்மிண்டன் போட்டித் தொடர்களையும் உலகப் பட்மிண்டன் கூட்டமைப்பு நிறுத்தி வைத்துள்ளது. அவ்வகையில் இந்தியாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த இந்தியா ஓபன் பட்மிண்டன் தொடரும் திகதி குறிப்பிடப்படாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவுஸ்திரேலியா- நியூசிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரையும் ஒத்திவைப்பதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது. ரசிகர்கள் இல்லாமல் முதல் போட்டி நடத்தப்பட்ட நிலையில், அடுத்த 2 போட்டிகளும் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நியூசிலாந்து அரசு புதிய பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன்படி, அவுஸ்திரேலியாவில் உள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி வீரர்கள், நாடு திரும்ப வேண்டும். அத்துடன், அவர்கள் 14 நாட்கள் அவர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். இதன் காரணமாக கிரிக்கெட்



தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இந்த மாத இறுதியில் இரு அணிகளும் நியூசிலாந்தில் விளையாடவுள்ள இருபது-20 போட்டிகளும் திட்டமிட்டபடி நடைபெறாது. இந்தப் போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (ஜ-2)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ரொனால்டோவுக்கும் கொரோனா?



உலகின் புகழ்பூத்த கால்பந்து நட்சத்திரமான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவியிருக்கலாம் என்ற அச்சத்தினால், அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சக அணியின் வீரரொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இந்தத் தொற்று ரொனால்டோவுக்கு பரவியிருக்கலாம் என்ற அச்சம் நிலவியது. இதன்பின்னர், தீவிர கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனையின் பின்னர் ரொனால்டோவுக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. எனினும் முற்பாதுகாப்பு கருதி அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலியின் பழைமையான கால்பந்து கழக தொடரான செரி ஏ கால்பந்து லீக் தொடரில், ரொனால்டோ, ஜுவெண்டஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இதில் ஜுவெண்டஸ் அணிக்காக விளையாடிவரும் டேனிலே ருகானிக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்தது.

இதனால், ஜுவெண்டஸ் அணியின் 121 வீரர்களையும் தனிமைப்படுத்த அணி நிர்வாகம் முடிவு செய்தது. வீரர்கள் மற்றும் அவர்களாகவே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என அந்த அணி கேட்டுக்கொண்டுள்ளது.

செரி ஏ கால்பந்து லீக் தொடரில், சம்ப்டோரியா அணியின் மனோலோ கேப்பியாடினியும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் மிகப்பெரிய கொரோனா வைரஸ் தாக்கத்தினை எதிர்கொண்டுள்ள இத்தாலியில், எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை அனைத்து வகைப் போட்டிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இடுப்பில் மகனுடன் ஒரு புகைப்படம்

## பாராட்டைப் பெற்ற சானியா!

பெட் கோப்பைக்கான தொடரில் சானியா மிர்சா பங்கேற்பதற்கு முன்னர் வெளியான புகைப்படம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்திய டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் வீரர் சோயிப் மாலிக்கை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு இஷான் என பெயர் வைத்தனர். குழந்தைப் பேறுக்கு பின் சானியா மிர்சா கடந்த 2 ஆண்டுகளாக ஓய்வில் இருந்தார்.

இந்த இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கடந்த 8 ஆம் திகதி பெட் கோப்பைக்



கான தொடரில் சானியா மிர்சா பங்கேற்றார். ஆட்டத்தில் பங்கேற்பதற்கு முன்னதாக சானியா மிர்சா தனது மகன் இஷானுடன் ஆடுகளத்திற்கு வந்தார். அப்போது இடுப்பில் இஷானையும் வலது கையில் டென்னிஸ் பட்டையும் வைத்திருந்தார்.

இது மட்டுமல்லாமல் இந்தப் புகைப்படத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்தார்.

அதில் "எனது வாழ்க்கை இந்தப் புகைப்படத்தில் உள்ளது. எனக்கு வேறு வழியில்லை. இஷான் என்னை எப்போதும் ஊக்கப்படுத்தி எதை செய்தாலும் என்னால் முடிந்த அளவு சிறப்பாக செயற்பட வைக்கிறான்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து இந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலானது. இந்தப் போட்டியில் சானியா மிர்சா இந்தோனேஷிய வீராங்கனையை வீழ்த்தி வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)





காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் உட்பட எட்டு பொலிஸ் நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் தளபாடங்களும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாரட்ன தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்-மகாலிங்கம்)

### பொதுத் தேர்தலில்

# தனித்து களமிறங்கும் அத்துரலிய ரத்னதேரர்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தனித்து களமிறங்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் அறி வித்துள்ளார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார். அபே ஜனபல பக்ஷய என்ற கட்சியினூடாக தான் போட்டியிட உள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஐ.தே.க வின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அத்துரலியரத்ன தேரர் பின்னர் சுதந்திரக்கட்சியுடன் இணைந்திருந்தார். (ம-3)

## கொரோனா வைரஸ் மையமாக...

சமூகநடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உயிர்களை காப்பாற்ற முடியும் என்று உலக சுகாதார மையத்தின் தலைவர் டெட்ரோஸ் ஆதனொம் ஜிப்ரேயஸீஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் என்ற இந்த தீயை எரிய விடவேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியில் அதிகமானோர் கொரோனா வைரஸினால் உயிரிழந்துள்ளனர்.

அங்கு கடந்த 24 மணித்தியாலங் களில் மாத்திரம் 250 பேர் பலியாகியுள்ளனர். இதனையடுத்து அங்கு உயிரிழந்தோர் தொகை 1266 ஆக உயர்ந்துள்ளது. 17 ஆயிரத்து 600 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

ஸ்பெயினில் 120 பேர் பலியாகியுள்ளனர். 4231 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரான்ஸில் 79 பேர் பலியாகியுள்ளனர். 2876 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜேர்மனியில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 3062 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரித்தானியாவில் 11 பேர் உயிரிழந்தனர் 798 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஈரானில் கடந்த 24 மணித்தியாலங்களில் 85 பேர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 514 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 1143
சீட்டிழுப்பு திகதி ▶ 14.03.2020 சனிக்கிழமை
S 02 21 24 67
4 8 4 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,272,476/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3313 திகதி: 2020.03.14
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 35 44 64 U
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 37,808,158
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 912
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.03.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,473,100/-
வெற்றி இலக்கங்கள் 07 21 25 51 Z
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 துரித அழைப்புக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
0114 825 825

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.03.2020 வெற்றி வாரம் 2798 வர்ணம் இளம் நீலம்
கடகம் வெற்றி இலக்கங்கள் 04 25 35 36
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,517,152
டபல் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 1 7 3 2
ரூ.100 பரிசுக்குரிய 7 5 4
15.03.2020 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

## மாத்திரைகளை உட்கொண்டு காய்ச்சலை...

இனம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் வாக்கு மூலத்தில் தெரியவந்துள்ளது.

நேற்று மதியமளவில் உறுதி செய்யப்பட்ட 2 கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய சில அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்கள் தமக்கு ஏற்பட்டிருந்த காய்ச்சலை மறைத்துக் கொண்டு வீடு செல்ல முயன்றுள்ளனர், விமான நிலையத்தில் டிமிக்கி கொடுத்து வீடு செல்ல முயன்ற போதும் அது பலனளிக்காத விடயம் தற்போது வெளியாகியுள்ளது.

இத்தாலியில் இருந்து வந்திருந்த இருவரே கொரோனா தொற்றிற்கு இலக்காகியிருந்தனர்.

இத்தாலியின் மிலோனா நகரத்தில் இருந்து விமானப் பயணம் செய்ய முடியாத நிலைமையேற்பட்டபோது, தமது காரில் 800 மைல்களிற்கு மேல் பிரயாணம் செய்து பிறிதொரு விமான நிலையத்தில் இருந்தே இலங்கையை வந்தடைந்துள்ளனர். அவர்கள் இத்தாலியிலிருந்த போதே காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் காய்ச்சலுடன் விமான நிலைய சோதனையை கடந்து செல்ல முடியாது என்பதால் பனடோல் மற்றும் நோயெதிர்ப்பு மாத்திரைகளை உட் கொண்டு காய்ச்சலை கட்டுப்படுத்தியுள்ளனர்.

விமானம் மூலம் இத்தாலியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்ததும், தனிமைப்படுத்தல் மையங்களிற்கு செல்ல மறுத்து விமான நிலையத்தில் ரகளையில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும் ரகளையின் பின் மற்றவர்களுடன் இணைந்துள்ள னர். எனினும் தமக்கு ஏற்பட்ட காய்ச்சல் பற்றி விமான நிலைய அதிகாரிகளிடம் அவர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

அவர்கள் மேலும் 16 பேருடன் பேருந்தில் கந்தக்காடு தனிமைப் படுத்தப்பட்ட மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு அவர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த இராணுவத்தினர் அவர்களை தனிமைப்படுத்தி மேலதிக பரிசோதனை மேற்கண்டபோதே அவர்கள் கோவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. (ம-3)

## ஆணொருவரின்...

தந்தையான பழனிவேல் தயாகரன் (வயது-46) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 9ஆம் திகதி அன்று காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-100)

## 485 கிலோகிரா...

அதேவேளை இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 97 இலட்சம் எனவும் கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10,60)

## கொரோனா...

கள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் இருவரும் தற்போது கொழும்பு தொற்று நோயியல் (ஐடிஎச்) வைத்தியசாலையில் சிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## பொது நிகழ்...

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பொது நிகழ்வுகள், விழாக்கள், கூட்டங்களை ஏற்பாடு செய்தல், பொது இடங்களில் மக்கள் கூடுதல் என்பன அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்கு கட்டுப்படுத்தப்படும். அதனால் பொது நிகழ்வுகள், கூட்டங்களை நடத்துவது தொடர்பில் பொலிஸாரின் அனுமதி கோரப்படுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் கூறினார். (ம-3)

## கொடிகாமம்...

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை தேடியும் ஏனைய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களைத் தேடியும் குறித்த தேடுதல் வேட்டை இடம் பெற்றது.

அதிகாலை வேளை ஆரம்பித்த குறித்த தேடுதல் வேட்டையில் சந்தேகத்தின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டதுடன் மேலும் பலரைப் பொலிஸார் தேடிவருகின்றனர். (ம-3,10,114)

## நாளை திங்கட்கிழமை அரச பொது...

நாடுமுழுவதும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் காணப்படுவதால் நாளை திங்கட்கிழமை அரச, வங்கி, வர்த்தக பொது விடுமுறையாக பிரகடனப்படுத்துவதாக பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அறிவித்துள்ளார்.

இந்த வைரஸ் பரவுவதைக் குறைக்க அரசு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதால் மக்கள் தங்கள் வீடுகளில் தங்குவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

பயணங்கள் அல்லது பிற உல்லாசப் பயணங்களுக்குச் செல்லும் வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டாம் என்று நாங்கள் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (ம-3)

## கொரோனா பரவல் மேலும் அதிகரிக்கும்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தாலி போன்ற நாடுகளிலிருந்தே, இலங்கைக்கு இந்த நோய் பரவுகிறது. அதனாலேயே இத்தாலி, ஈரான், தென்கொரியாவிலிருந்து வருவோரை தனிமைப்படுத்தி ஆராய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1600 க்கும் மேற்பட்டவர்கள் தற்போதும் தனிமைப்படுத்தபட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். பிரான்ஸ், ஸ்பெய்ன், ஒஸ்ரியா,பஹ்ரேன், கட்டார் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து விமான பயணிகளை ஏற்றிவருவதை இலங்கை தடை செய்துள்ளது .

இந்த அச்சுறுத்தல் நிலைமை மேலும் வலுவடையக் கூடும். தனிமைப்படுத்தப்பட்ட ஆய்வுக்கு முகம் கொடுக்காமல் வெளியே உள்ளவர்கள் வாயிலாக சமூகத்துக்கு பரவ முடியும் .

இலங்கையில் இதுவரையில் பெருமளவிலான சமூகக் கட்டமைப்புக்குள் பரவும் அபாயம் இல்லை. இருவாரங்கள் முறையாக செயற்படும் பட்சத்தில் நிலைமையை வெற்றிகொள்ள முடியும்.

எவ்வாறாயினும் இன்று (நேற்று) கண்டுபிடிக்கப்பட்டவர்கள், இத்தாலியிலிருந்து வரும்போதே இத்தாலியிலிருந்து நோய் பீடிக்கப்பட்டு வந்தவர்கள், அவர்களால் கந்தகாடு தனிமைப்படுத்தபட்ட ஆய்வகங்களில் உள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டிய நிலைமை உள்ளது என்றார். (ம-3)

## வல்லை பற்றை...

இவ்வாறு சடலமாக காணப்பட்டவர் வல்லை வீதி தொண்டைமானாற்றைச் சேர்ந்த நச்சேத்திரன் அரியம் (வயது-82) என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை வீட்டில் இருந்து வெளியேறிய இவர் நேற்று சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் அங்குள்ள பற்றைப்பகுதியில் இருந்து சடலமாக கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-60,3)

## இராணுவச் சிப்...

மற்றொருவர் வவுனியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இருவருக்கும் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ சோதனைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான சாத்தியக்கூறுகள் இருக்கவில்லை, எனினும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ம-3)

செவன
திகதி 14/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 270
ஆங்கில எழுத்து F வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 49 50 62
NATIONAL LOTTERIES BOARD

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/03/14
சீட்டிழுப்பு இலக்கம் 1512
சுப்பர் இலக்கம் 18 வெற்றி இலக்கங்கள் 08 31 32 69 முதல் போனஸ் இல 30 இரண்டாவது போனஸ் இல 09
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 14-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2421
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 08 42 49 65
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14-03-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1026
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 5 6 1 6 5 3
தேசிய லொத்தர் சபை

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள
(நாச்சிமார் கோவிலடி)
பொதிகள் சேவை நிறுவனத்துக்கு
பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:- (C-9494)

075 330 5500
070 330 5500

## விற்பனைக்கு

இயக்கச்சியில் A9 வீதியில் இருந்து
1½ km தூரத்தில் காய்க்கும் பருவமுள்ள
7½ ஏக்கர் தென்னங்காணி
விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:- (2607)

076 200 9025

## IELTS

Academic Life skills
**British college**
of higher studies
0212224550 / 0761380212
Sirampiyady lane,
Stanley road, Jaffna
(C-9409)


வவுனியாவில் தங்கியுள்ள

# சீன நாட்டு பொறியியலாளர் மூவரையும் தனிமைப்படுத்துக

## பொலிஸாரிடம் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியாவில் தங்கியுள்ள சீன நாட்டுப் பொறியியலாளர் மூவரை தனிமைப்படுத்துமாறு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

மன்னார்-வவுனியா பிரதான வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் மூன்று பொறியியல் துறை சார்ந்த சீன நாட்டுப் பிரஜைகள் தங்கியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் பங்களாதேஷ் நாட்டினூடாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே இலங்கை வந்துள்ளார். ஏனைய இருவரும் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னரே சீனாவிலிருந்து இலங்கைக்கு விமான நிலையத்தினூடாக வருகை தந்துள்ளனர்.

அவர்கள் கடந்த சில வாரங்களாக வெளியே எங்கும் செல்லாமல் வீட்டிற்குள் தனிமைப்படுத்தப்பட்டிருந்து வந்துள்ளனர்.

எனினும் அவர்களுக்கு கொரோனா வைரஸ தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்களை மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு தனிமைப்படுத்தி வைத்திருக்குமாறும் அப்பகுதியிலிருந்து அவர்களை அகற்றுமாறும் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் சிலரினால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சீன நாட்டு பிரஜைகள் தங்கியுள்ள வீட்டின் பாதுகாப்பு ஊழியரிடம் விசாரணைகள் மேற்கொண்டதுடன் அவர்களை அங்கு தங்க வைக்க நடவடிக்கை எடுத்த உயர் அதிகாரிகளுடனும் மாவட்ட அரசாங்க அதிபருடனும தொடர்பு கொண்டு அவர்கள் இலங்கைக்கு வருகை தந்த ஆவணங்கள், அறிக்கைகள் என்பனவற்றை பரிசோதனை மேற்கொண்டதுடன் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான ஆரம்ப பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம-299)

8 ஐரோப்பிய நாடுகளின்

# விமானங்கள் இன்று முதல் இலங்கை நுழையத் தடை

கொரோனா தொற்று காரணமாக, இன்று நள்ளிரவு முதல் பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மன், சுவிஸர்லாந்து, நெதர்லாந்து, டென்மார்க், சுவிடன் மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கான விமான சேவைகளை எதிர்வரும் 2 வார காலத்தீற்கு இடைநிறுத்துவதற்கு இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தீர்மானித்திருப்பதாக அதன் தலைவர் உபுல் தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பரவுவதன்காரணமாக சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக இந்த தீர்மானம்மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.


இந்த தடை எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் நடைமுறையில் இருக்கும்.

தென் கொரியா, இத்தாலி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு கடந்த 14 ஆம் திகதி தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக இந்த தடை இன்று நள்ளிரவு முதல் அமுலுக்குவரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மரண அறிவித்தல்

மலர்வு
1936
-
07
-
26



உதிர்வு
2020
-
03
-
11

## விசேந்தி அருளானந்தம்

**(முன்னாள் ஆசிரியர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)**

யாழ்.பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறண்டோவை வதிவிடமாகவும் கொண்ட விசேந்தி அருளானந்தம் அவர்கள் 11.03.2020 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசேந்தி - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - விக்ரோரியா தம்பதிகளின் அன்பு மருமகனும் மரியம்மாவின் பாசமிகு கணவரும் Leitan (ரமேஷ்), Leteciya (ஜான்சி), Lecian (லெசி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி, பிரபு, அதி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், எபிரகாம், பெனடிக்ற் மற்றும் றீற்ரா, மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் ராசு, லலிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் Sherley, Lebon, Lithusha, Andrea, Alexia, Joel, Hephzibah ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனையும் நல்லடக்கமும் 16.03.2020 திங்கட்கிழமை காலை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை — தகவல்: திரு.அ.மரியராசநாயகம்
தொ.பே:- 0778693803 (C-9493) (ராசு) மைத்துனர்


## சிற்றூழியர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
நிறுவனம் ஒன்றுக்கு
**சிற்றூழியர் (ஆண்)**
வயது:- 28 - 50க்கு உட்பட்டவர்கள்
தேவை
(யாழ்.நகருக்கு அண்மையில்
இருப்பவருக்கு முன்னுரிமை
வழங்கப்படும்)

தொடர்பு இ

076 097 3127

## கார் தேவை

Suzuki ALTO 2015ம் ஆண்டு அல்லது பிற்பட்ட வீட்டுப் பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள கார் விற்பனை செய்ய உள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- (2608)

075 555 8384

## J.THARSHAN'S ENGLISH ACADEMY

30 வகுப்புகளில் சரளமாக ஆங்கிலம் எழுத, வாசிக்க, கதைக்க 16 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
ஆங்கிலம் கதைப்பதற்கு 100% முழு உத்தரவாதம் (2519)

தொடர்புகளுக்கு:- 077 478 7007

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550*/= Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-9458)

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240
V2 TRAVELS

## BUILD YOUR CAREER WITH US!

Inner Circle

STUDY & WORK IN NORTH PROVINCIAL

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கு **முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார்** ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற்று நிரந்தர தொழில்புரிய விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சியில் இருந்தே நிரந்தர வருமானம் குறைந்தது 13500/= - 45000/=
- EPF, ETF பயிற்சியின் பின்னர் பதவிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
- வயது 18 - 28 வரை
- தங்குமிட வசதி உண்டு.
- பயிற்சியின் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்.



மேலதிக தகவலுக்கு அழைக்குக
Inner Circle Pvt Ltd
076 770 7759
No.100/3, 3rd Floor முட்டாஸ்கடைச் சந்தி, யாழ்ப்பாணம். (2611)

## மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| பிரான்ஸ் | -ரூ.750/ரூ.700 |
| ஜேர்மனி | -ரூ.750/ரூ.700 |
| டென்மார்க | -ரூ.750/ரூ.700 |
| கொலண்ட் | -ரூ.750/ரூ.700 |
| பெல்ஜியம் | -ரூ.750/ரூ.700 |
| இத்தாலி | -ரூ.850/ரூ.750 |
| லண்டன் | -ரூ.700/ரூ.575 |

கனடா மற்றும் லண்டனுக்கு பழங்கள் மரக்கறி வகைகளை வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு அனுப்பிட தொடர்புகொள்ளவும்.

முகவர்களாக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும் (C-9490)

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும், யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org** (2596)

021 222 8093
புதிய விலாசம்
No.17, Kandy Road, Jaffna.

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9459)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 269

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 15.03.2020 | தொலைபேசி : 021 222 3378



தேர்தல் பிரார்த்தனை



மன்னாரில் புதிய எழுச்சி

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வழமைக்கு மாறாக கங்காணி கார்த்திகேயன் இரு கால்களையும் நீட்டியபடி இருந்தார். இதனை அவதானித்த மூப்பர் என்ன கங்காணியார் காலில ஏதும் பிரச்சினையோ என வினவ,

இலங்கையில ஒருவருக்குக் கொரோனா தொற்று இனங்காணப்பட்டதும் எங்கட சனங்கள் விழுந்தடித்து பொருட்களை அளவுக்கதிகமாக வாங்கிப் பதுக்க முற்பட்டினம்.

பால்மா வாங்கப் போன நான் அந்தச் சனக் கூட்டத்திற்குள்ளச் சிக்கிப் போனன். அதுதான் கால் உளைவு.

கங்காணி இவ்வாறு கூறியதும் அப்ப அளவுக்கதிகமாகப் பொருட்களை வாங்கிப் பதுக்குகிற பொதுமக்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு சொல்லுறியள். விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

சிறாப்பர்: வசதி படைத்தவர்கள் தேவைக்கு அதிகமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தட்டுப்பாட்டை ஏற்படுத்தினால் சாதாரண ஏழை மக்கள் என்ன செய்ய முடியும்.

பண்டிதர்: பொருட் தட்டுப்பாட்டுக் காலத்தில பங்கீட்டு முறையில பொருட்களை விநியோகிக்கின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இப்ப கந்தறுந்தல்லோ கிடக்குது.

மூப்பர்: பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை சரியாக இயக்க முடியாத நாங்கள் எதைத்தான் செய்யப் போறம்.

கங்காணி: அப்ப, கொரோனாவோட சங்கக் கடைகள் மீள தளைக்குமோ.

மூப்பர்: முன்பு கூப்பன் நடைமுறையில இருந்த காலத்தில அடிக்கட்டை எண்டு சொல்லுவினம். அப்ப கூப்பனுக்கு இருந்த அடிக்கட்டை கூட இப்ப சங்கக்கடைக்கு இல்லாமல் போயிற்று. பிறகென்னெண்டு சங்கக் கடைகள் திரும்பத் தளைக்கிறது.

சிறாப்பர்: அதுசரி, கொரோனா வைரஸ் தாக்கத்தில இருந்து தப்புவதற்கு என்ன வழி எண்டு சொல்லுங்களன்.

வாத்தியார்: உலகத்தில நீதி இல்லாமல் போயிற்றுது பாருங்கோ. எங்கும் அதர்மம், அடாவடித்தனம். யாழ். போதனா வைத்தியசாலையில சில மதமாற்றிகள் நோயாளர்களைச் சந்தித்து தாங்கள் நோயைக் குணப்படுத்துறதாகவும் தங்கட மதத்திற்கு வருமாறும் கேட்கினமாம்.

பண்டிதர்: அதுமட்டுமல்ல மருத்துவர்கள் நோய்க்கு சிகிச்சை வழங்கி நோயாளர்களைக் குணப்படுத்த, இந்த மதமாற்றிகள் தாங்கள் செய்த செபத்தால தான் நோய் குணமடைந்ததாகவும் எனவே தங்கட மதத்திற்கு வருமாறும் மதப் பிரசாரம் செய்வதாகவும் கேள்வி.

சாத்திரியார்: இதென்ன கதை. யாழ். போதனா வைத்தியசாலைக்குள்ள மதமாற்றிகள் போய் நோயாளர்களைக் கட்டாயப்படுத்தி தங்கட மதத்திற்கு ஆட்சேர்க்கினமோ.



## யாழ். போதனா வைத்தியசாலையில் மதமாற்றிகள் நோய் தீர்க்கினமாம்

பண்டிதர்: ஓம் சாத்திரியார், நோயாளர்களைக் குணப்படுத்துவதற்காக தாம் செபம் செய்கிறதாகக் கூறி, நோயாளர்களுடன் கதையை ஆரம்பிக்கிற மதமாற்றிகள், நோயாளர்களின் தொலைபேசி இலக்கங்களையும் வீட்டு விலாசங்களையும் அறிந்து கொண்டு அவர்களைத் தேடிச் சென்று மதமாற்றம் செய்வதாகப் பலரும் கூறுகினம்.

மூப்பர்: அப்ப யாழ். போதனா வைத்தியசாலைக்குள்ள மதமாற்றச் செயற்பாடுகள் எதுவும் நடக்கக் கூடாது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

மூப்பர் இவ்வாறு கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மிகச் சிறந்த நிர்வாகி. எனவே யாழ்.போதனா வைத்தியசாலையில சிகிச்சை பெறும் நோயாளர்களை மதமாற்றம் செய்கின்ற நடவடிக்கையில ஈடுபடுகிறவர்களை உடனடியாகத் தடை செய்ய வேணும்.

விதானையார்: அதுசரி, மதமாற்றிகள் நோயைக் குணப்படுத்துகினம் எண்டால் இந்தக் கொரோனா வைரஸையும் குணப்படுத்தவல்லோ வேணும்.

பண்டிதர்: நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால், தன்ர சமயத்தை விட்டு மதம் மாறின எத்தனையோ பேர் மனத்தால பாதிக்கப்பட்டுப் பெருந்துன்பங்களை அனுபவிக்கினம். அதுமட்டுமல்ல, சில மதங்கள் வைத்தியசாலையில சிகிச்சை பெறுவதையும் மருந்து உட்கொள்வதையும் பெரும் குற்றச் செயலாகக் கருதுது. இதால எத்தனையோ இளம் மரணங்கள் நடந்துள்ளன.

உண்மையைச் சொன்னால் மதம் மாறின குடும்பங்கள் மனநிம்மதியை இழந்து உள்ளன என்பது தான் யதார்த்தம்.

விதானையார் இவ்வாறு கூறும்போது சாத்திரியார் சதாசிவம் ஏதோ ஆழ்ந்த யோசனையில் மூழ்கி இருந்தார்.

இதனை அவதானித்த சிறாப்பர் கனகசபை என்ன சாத்திரியார் ஏதோ கடுமையாக யோசிக்கிறியள் என்றார்.

சாத்திரியார்: எல்லாம் இந்த கொரோனா வைரஸால தான் யோசனை.

சிறாப்பர்:என்ன சாத்திரியார் கொரோனாவுக்காக இவ்வளவு யோசிக்கிறியளோ.

சாத்திரியார்: வெளிநாட்டு மாப்பிள்ளைமாருக்கு திருமணத்திற்கு நாள் எடுத்துக் கொடுத்தனான். கொரோனாத் தொற்றால வெளிநாட்டில இருந்து வாறதில பெரும் கஷ்டம் இருக்குதாம். இதால திருமணத்தை உரிய நாளில செய்ய முடியாமல் இருக்குது.

மூப்பர்: அப்ப சாத்திரியார் எடுத்த முகூர்த்தம் சரியில்லை எண்டு சொல்லுகினம் போல...

சாத்திரியார்: இந்தா மூப்பருக்கு நிலைமை புரியுது. கொரோனாவுக்கும் சாத்திரத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எண்டாலும் திருமணங்கள் தடைப்பட்டால் பொருத்தம் பார்த்த - நாள் எடுத்த எங்களுக்குத் தானே ஏச்சு.

பண்டிதர்: கொரோனோத் தொற்று பரவுகிற அதேநேரத்தில, பொதுத் தேர்தலும் களைகட்டி நிற்குது.


யாழ். மாவட்டத்தில தானாம் அதிகளவு சுயேட்சைக் குழுக்கள் தேர்தலில களமிறங்குகின்றன.

மன்னாரிலும் சைவமக்கள் சார்பில வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருக்கினம். இனி அங்கயும் தேர்தல் போட்டி கடுமையாக இருக்கும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆமோதிப் பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து தப்பிப்பது எப்படி?



**கொரோனா என்னும் கொடிய உயிர் குடிக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டால் என்னென்ன அறிகுறிகள் உண்டாகும் என்று விரிவாக பார்க்கலாம்.**

உலகையே அச்சுறுத்தி கொண்டிருக்கிறது கொரோனா வைரஸ். சீனாவில் தோன்றிய இந்த வைரஸ் தாக்குதலுக்கு சுமார் 2 இலட்சம் பேர் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள்.

தடுப்பு மருந்து இல்லாத கொரோனா வைரஸ் என்ன காரணத்தினால் பரவுகிறது? இதைத் தடுக்க முடியுமா? கொரோனா வைரஸ் என்றால் என்ன என்பது குறித்து மக்கள் கண்டிப்பாக விழிப்புணர்வு பெற வேண்டும்.

கொரோனா வைரஸ் உங்களை தாக்க தொடங்கியிருந்தால் என்ன மாதிரியான அறிகுறிகள் இருக்கும் என்பதை சீனாவின் தேசிய சுகாதார மருத்துவம் தெரிவித்துள்ளது. முதலில் காய்ச்சலில் தொடங்கும்.

அதாவது உடல் வெப்பத்தை காட்டிலும் அதிக வெப்பநிலையை கொண்டிருக்கும். தொடர்ந்து இருமலும் அதிகரிக்க தொடங்கும். சுவாசக்கோளாறு உண்டாகும்.

அதைத் தொடர்ந்து மூச்சுத் திணறலும் உண்டாகும். இவை படிப்படியாக அதிகரிக்க தொடங்கும். இந்த அறிகுறியால் மருத்துவமனைக்கு வந்தவர்களில் இதுவரை அதிகம் பேர் இறந்திருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்படுபவர்களுக்கு முதலில் சாதாரணமான ஜலதோஷம் ஏற்படும். பின்னர், காய்ச்சல் உருவாகி நிமோனியா என்ற நுரையீரல் தொற்றினை இந்த வைரஸ் உருவாக்கும். முறையான சிகிச்சை பெறாவிட்டால், பாதிப்புக்கு உள்ளானவர்கள் உயிரிழக்க நேரிடும் என சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

இவை காற்றில் பரவும் தன்மை கொண்டது, இத்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும், சளியை உமிழும் போதும் இந்தக் கிருமிகள் காற்று வழியாக கலந்து விடும். இதை சுவாசிப்பவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும்.

கொரோனா வைரஸ்நோய்வேகமாக பரவுவதைத் தடுக்க, சீன மற்றும் உலக நாடுகளின் மருத்துவர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த ஆய்வின் ஒரு கட்டமாக கொரோனா வைரஸ் கிருமி, ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு எளிதில் பரவும் என்பது கண்டறியப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே கொரோனா குடும்பத்தில் 6 வைரஸ் தொற்று இருக்கும் நிலையில் இவை 7ஆவது வைரஸாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு கொவிட்-19 என்று பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸை முழுமையாக குணப்படுத்த முடியாது. ஆனால் இதன் அறிகுறிகளை ஆரம்பத்தில் கண்டால் இதற்கு தடுப்பு மருந்துகள் உண்டு என்றும் கூறுகிறது மருத்துவத்துறை. சீனாவில் தானே இந்த கொரோனா வைரஸ் தொற்று என்று அலட்சியம் இருந்துவிட இப்போது இலங்கை, இந்தியா என எமது காலடிக்குள் வந்துவிட்டது இந்தக் கொடிய கொரோனா.

அண்மையில் இலங்கையில் முதலாவது கொரோனா தொற்றுள்ளவர் கண்டுபிடிக்கப்பட்டார் என்ற செய்தி வந்து சில மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துக் கடைகளிலும் பலசரக்குப் பொருட்களை வாங்கிக் குவிக்க மக்கள் அலைமோதியதைப் பார்த்திருந்தோம்.

அதேபோல் முகத்திற்குப் போடும் மாஸ்க் அன்றைய தினம் காலை 8 மணிக்கு 120 ரூபாவிற்கு விற்பனையானதுடன் மாலை 4 மணிக்கு அதே மாஸ்க் 280 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையில் நின்று எரிபொருளை கான்களில் கொள்வனவு செய்து சென்றதைக் காணக்கூடியதாகவும் இருந்தது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் வராமல் இருக்க முழு எச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் நாமும் கொஞ்சம் கவனத்தோடும் விழிப்புடனும் இருப்பது நல்லது தானே.

கொரோனா என்னும் கொடிய உயிர் குடிக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டால் என்னென்ன அறிகுறிகள் உண்டாகும் என்று பார்க்கலாம்.


மூக்கு ஒழுகுதல், தலைவலி, இருமல், மேல்சுவாசக்கோளாறு, தொண்டை கரகரப்பு, காய்ச்சல், உடல் சோர்வாக இருப்பது போன்ற அறிகுறிகள் தான் ஆரம்பத்தில் இருக்கும். இவை வழக்கமாக இருப்பது தானே என அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. இந்த அறிகுறிகள் இருந்தால் முதலில் மருத்துவரிடம் போய் சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்.

மனிதர்களுக்குப் பரவக்கூடிய இந்த கொரோனா வைரஸ் தொற்றானது சில சமயங்களில் கடுமையான சுவாசக் கோளாறுகளை உண்டாக்கும்.

- தொண்டையில் கடுமையான வலியை உண்டாக்கும்.
- மார்புப் பகுதியில் லேசான வலி கூட சிலருக்கு இருக்கும்.
- உடலை பலவீனப்படுத்தும்.
- குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு நோய் எதிர்ப்பு மண்டலத்தையே பாதிக்கச் செய்யும்.

மனிதர்களுக்குத் தொற்றக்கூடிய கொரோனா வைரஸ் ஒருவரிடம் இருந்து மற்றவர்களுக்குப் பரவுகின்ற தொற்று நோயாகவே இருக்கிறது. அது எப்படியெல்லாம் பரவும் என்று பார்க்கலாம்.

இருமல் மற்றும் தும்மலின் வழியாக ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரவும்.



நோய்த்தொற்று இருப்பவர்களிடம் நெருக்கமாக இருப்பது, தொடுவது, கை குலுக்குவது ஆகியவற்றாலும் பரவும்.

### கை கழுவுதல்

வைரஸ் தொற்று தேங்கியிருக்கும் ஏதாவது பொருளைத் தொடுவதன் மூலம் பரவும்.

கண், வாய், மூக்கு ஆகியவற்றை கைகளைக் கழுவுவதற்கு முன்பாகத் தொடுவதால் பரவும்.

தற்போது மனிதர்களுக்குப் பரவும் கொரோனா போன்ற தொற்று நோய்களுக்குத் தடுப்பூசிகள் கிடைக்கின்றன.

அடிக்கடி கையை சோப்பு போட்டு 20 நொடிகளாவது நன்கு தேய்த்துக் கழுவுங்கள்.

கைகளைக் கழுவாமல் உங்களுடைய கண்கள், மூக்கு மற்றும் வாய்ப் பகுதியைத் தொடுவதைத் தவிர்த்திடுங்கள்.

உடல் நலம் குன்றியவர்களிடம் நெருக்கமாக இருப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

ஒருவேளை தொற்று பரவி விட்டால் நோய்த்தொற்று இருப்பதாக உணர்ந்தாலோ அறிந்து கொண்டாலோ வீட்டை விட்டு வெளியில் செல்லாதீர்கள்.

மற்றவர்களை உங்களுக்கு அருகில் நெருக்கமாக வைத்துக் கொள்ளாதீர்கள். சுற்றியுள்ள பொருட்களையும் இடங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். தும்மல் மற்றும் இருமல் வரும்போது வாய் மற்றும் மூக்குப் பகுதியை துணி அல்லது டிஸ்யூ கொண்டு மூடிக் கொள்ளுங்கள்.

மனிதர்களைத் தாக்கும் கொரோனா வைரஸ் தொற்றுக்களுக்கு என்று தனியே குறிப்பிட்ட மருத்துவ முறைகள் ஏதும் கிடையாது. நாமே நம்மைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமாகவே இந்த வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து நம்மை நாம் காத்துக் கொள்ள முடியும்.

வலி நிவாரணி மற்றும் காய்ச்சல் மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகளாக இருந்தால் அஸ்பிரின் போன்ற மருந்துகளைத் தவிர்த்து விடுங்கள்.


நீராவி கொண்டு ஆவி பிடியுங்கள். இருக்கும் இடத்தை கதகதப்பாக வைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். சுடுதண்ணீரில் தினமும் இரண்டு முறையாவது குளிக்க வேண்டும்.

இலேசாக முடியாதது போல உணர்ந்தீர்கள் என்றால், வெளியில் செல்லாமல் வீட்டில் இருந்தபடியே ஓய்வெடுங்கள். நிறைய நீர் ஆகாரங்களைச் சாப்பிடுங்கள்.

கொரோனா கொடிய நோய் தொடர்பில் வாய்வழி மற்றும் சமூக வலைத்தளங்களினூடே வதந்தி பரப்பும் செயல்களும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

பொதுமக்கள் இவற்றைக் கேட்டு பீதியடையத் தேவையில்லை. கொரோனா தொடர்பில் போதிய ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# தகவல் தொடர்பு சாதனங்கள்



நாம் தகவல்களையும் செய்திகளையும் பெறுவதற்குப் பயன்படுத்தும் சாதனங்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் எனப்படும். இவை வெகுசனத் தொடர்பு சாதனங்கள் எனவும் அழைக்கப்படும். பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கும் தகவல்தொடர்பு சாதனங்கள் பெரிதும் பாவிக்கப்படுகின்றன.

தகவல் தொடர்பு சாதனங்கள் பின்வருமாறு,

பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி, செய்மதி வர்த்தமானி, மின்அஞ்சல் அல்லது ஈமெயில் (E.mail), இணையத்தளம் / இன்ரநெற் (Internet), தொலைபேசி.

# சிங்கமும் ஆடும்



காட்டில் ஒரு சிங்கம் ஒரு ஆட்டை அழைத்தது.

"எனது வாயில் துர்வாடை வீசுவதுபோல் இருக்கிறது. நீ முகர்ந்து பார்த்துவிட்டுச்சொல்... நீயும் அப்படி உணர்கிறாயா என்று" ...!

ஆடு சிங்கத்தின் திறந்த வாயை முகர்ந்து பார்த்து விட்டு ஆமாம் துர்வாடை வருகிறது என்று சொல்லிற்று. உடனே சிங்கம், முட்டாளே... என்னைக் குறை சொல்ல உனக்கு எவ்வளவு திமிர் என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது!

அடுத்து சிங்கம் ஒரு ஓநாயை அழைத்து அதனுடைய கருத்தைக் கேட்டது. ஓநாய் முகர்ந்து பார்த்துவிட்டு... "அப்படியொன்றையும் நான் உணரவில்லையே" என்றது!

சிங்கம் "மூடனே.. பொய்யா சொல்கிறாய்? என்று கூறி ஓநாயை அடித்துக் கொன்றது!"

பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது.

நரி சொன்னது... "நாலு நாளா கடுமையான ஜலதோஷம்" அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை. சிங்கம் நரியை விட்டுவிட்டது.

**நீதி: ஆபத்தான காலகட்டத்தில் சமயோசிதமாக சிந்தித்து வாயைத் திறக்காதிருப்பதே புத்திசாலிகளின் செயல்!**




சூரியனைச் சுற்றி 8 கோள்கள் வலம் வருகின்றன அவை,

புதன், பூமி, வியாழன், யுரேனஸ், வெள்ளி, செவ்வாய், சனி, நெப்டியூன்

சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் - புதன்

சிவப்பு நிறக்கோள் - செவ்வாய்

துணைக்கோள் - சந்திரன்

மிகச் சிறியகோள் - புதன்

ஒளி மிகுந்த கோள் - வெள்ளி

மிகப்பெரிய கோள் - வியாழன்

பூமிக்கு மிக அருகிலுள்ள கோள் - சந்திரன்

2006 ஆம் ஆண்டு வரை சூரியனைச் சுற்றிவரும் கோள்கள் புளூட்டோ என்பதுடன் 9 ஆக இருந்தது.

புளூட்டோ கோள் சூரியனைச் சுற்றிவரும் பாதையிலிருந்து விலகியதால் உலக விஞ்ஞானிகள் அதனைத் தகுதி நீக்கம் செய்தனர்.

சூரியனும் அதனைச் சுற்றிவரும் கோள்களும் ஞாயிற்றுத்தொகுதி எனவும் அழைக்கப்படுகின்றது.

பூமி தன் அச்சில் ஒருமுறை சுழல எடுக்கும் நேரம் 24 மணித்தியாலங்கள்.

இதனால் ஏற்படுவது - இரவு-பகல்.




# பசுவின் பெருமை

சிவனடியான்



காளிதாசர் எழுதிய ரகுவம்ச காவியத்தில் திலீபன் மகாராஜா காமதேனுவின் மகளான நந்தினியை முறையாக மூன்று முறை வலம் வந்து வாரிசு பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

பசுவைக் குளிப்பாட்டி சுத்தப்படுத்தினால் நமது பாவங்கள் அனைத்தும் கழிந்து விடுகின்றன. பசுவை முறையாகப் பராமரிப்பதால் அஸ்வமேத யாகம் செய்த புண்ணிய பலன் கிடைக்கிறது. காயப்பட்டிருக்கும் பசுவிற்கு மருத்துவமளித்தால் நமக்கு வரும் நோய் நொடியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். குளிர் வெய்யிலில் இருந்து அதற்கு அடைக்கலம் தந்து காத்தால் நமக்கு நிச்சயம் சொர்க்கம் கிட்டும். கோ பூசை செய்வதால் நமக்கு சகல விதமான சௌபாக்கியமும் அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கும். பசுவின் கோமிய நீரை வீடு உள்ளேயும் வெளியேயும் தெளித்தால் தொற்று நோய்களுக்கு இடமேயில்லை. பசுஞ்சாணம் தெளித்து வீட்டு வாசலில் கோலமிட்டால் மகாலக்ஷ்மியின் அருள் கிட்டி விச ஜந்துக்களும் கிருமிகள், தொற்று நோய்கள் வீட்டினுள் வராது.

பசுவின் சாணத்தை தாமரையிலையில் வேண்டி வராட்டி தட்டி காயவிட்டு உமியுடன் சேர்த்து எரித்து பாலில் கழுவி காய விட்டு ஜவ்வாது பன்னீர் சேர்த்து உலரவிட்ட விபூதியால் இறைவனை அபிஷேகம் செய்து அவ்விபூதியை உடலெங்கும் அணிந்தால் எந்தவித நோயும் அணுகாது. அதுமட்டுமல்ல நோய் பீடித்தவரை விபூதியால் குணமாக்கிய வரலாறு சைவ சமயத்தில் உள்ளது. பாண்டியனை சம்பந்தப்பெருமான் குணப்படுத்தியதும் மதம் மாறிய அப்பர் சுவாமியை திலகவதியார் விபூதி அணிவித்து நோய் நீங்கப்பெற்று சைவ சமயத்தை தழுவியதும் கண்கூடு. நாம் முன்னவர் காட்டிய வழியை கைவிடுத்து வியாபார நோக்கத்திற்காக உற்பத்தி செய்த கிருமி நாசினிகளை வீட்டில் பாவித்து எமது கிணற்று நீரையும் கொடி, செடிகளையும் பாதிக்கும் வண்ணம் செயற்படுகின்றோம். சைவ மக்கள் திருநீற்றின் பெருமையை உணர்ந்து நோயற்றவர்களாக வாழ முயல்வோம்.

# பொன்மொழி



அறிவுத் தேவையை விட கவனக்குறைவு தான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது

-சர்ச்சில்-





நோதாஜி — வதிரி

**தமிழர்களை ஏமாற்றியவர்கள் இப்போது தாம் ஏமாந்ததாய் கதை விடுகிறார்களே?**

வெளிநாட்டில் சிற்றிசன் பெறுவதற்காக அங்கு சென்ற எம்மவர்கள் சிலர் போரில் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் காவடி எடுத்ததால் வந்த காய தழும்புகளைக் காட்டி காட் எடுத்த தாகவும்.

கஜு காயில் இருந்த பாலை பூசி அவிய வைத்து அதைக் காட்டி காட் எடுத்ததாகவும் கதையுண்டு. நீங்கள் கேட்கும் கதையைக் கேட்க எனக்கு அந்த நினைப்பே வருகிறது நேதாஜி.




தாஸ் — வரணி

**கொரோனா வைரஸ் தீவிரமடைகிறதே?**

கோதாரியில போவார் யாழ்ப்பாணத்தார். கொரோனா வைரஸ் தீவிரமானா பெற்றோலை வாங்கி வைக்கிறதை விட்டிட்டு பெற்றோலை வாங்கி வைத்து பத்தி எரியப் போகுதுகளே!

இதில் என்ன வேதனை என்றால் பணக்காரன் மூடைமூடையா பொருள்வாங்கிப் பதுக்கினால் அன்றாடம் உழைத்து வாழும் பாமர மக்களின் நிலைதான் திண்டாட்டமாகிவிடும்.
ஏனோ இதை எம்மவர் புரிந்து கொள்வதே இல்லை.

திகழன் — யாக்கரு

**இந்த முறை நான் யாருக்கு வாக்களிக்க வியாசரே?**

மகாஜனங்களே! இது உங்கள் அனைவருக்குமான நேரம்.

தயவு செய்து உங்கள் கண்களை இறுக மூடி சிந்தியுங்கள்.

- போர்க்குற்றம் தொடர்பிலான பொறுப்புக்கூறலுக்கு இரண்டு வருட அவகாசம் கொடுத்தது யார்?
- எங்கள் உறவுகள் கொத்துக் கொத்தாய் செத்து விழ ஏ.சி வாகனத்தில் வாய்மூடித் திரிந்தது யார்?
- பட்ஜெட்டில் என்ன இருக்கிறது என்றே பார்க்காமல் கைதூக்கி ஆமோதித்தது யார்?
- வாக்குறுதி மறந்து வருடத்துக்கு வருடம் பொமிட்டில் வாகனம் இறக்குமதி செய்தவர் யார்?
- அரசு வழங்கிய அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலைபோய் எம் இறைமையை விற்றுப் பிழைப்பு நடத்தியவர் யார்?
- தேர்தலுக்குத் தேர்தல் தேசியம் பேசி எம் படலையைத் தட்டாமல் வருவது யார்?
- மகாஜனங்களே சிந்தித்து விட்டீர்களா?
- இப்போது உங்கள் வாக்கு யாருக்கு? சொல்லுங்கள்?



## இந்த முறை நான் யாருக்கு வாக்களிக்க வியாசரே?

தர்ணிகா — கௌந்தில்

**புலிகளைவிட கொரோனா பெரிசில்லையாம் உண்மையோ?**

ஒரு படத்தில் வடிவேல் அர்ஜுனைப் பார்த்துச் சொல்வார் புள்ளைப் பூச்சிக்கொல்லாம் கொடுக்கு முளைக்கும் என்று நான் கனவா கண்டேன் என்று.

ஒரு காலத்தில் புள்ளப்புறாவ் வாகனங்களை தொகை வாரியாய் வாங்கிக் குவித்ததை மறந்து பேசினால் நாம் என்ன செய்ய முடியும்.

என்ன செய்ய இப்போது அவர்கள் பக்கம் காற்றடிக்கிறது. அதனால் நன்றாகப் பேசட்டுமே.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## புலிகளைக் கொச்சைப்படுத்தும் கூட்ட மைப்பா தமிழர்களின் அபிலாசைகளை வென்று தரப்போகிறது?

சுதன் — குப்பிழான்

**புலிகளைக் கொச்சைப்படுத்தும் கூட்டமைப்பா தமிழர்களின் அபிலாசைகளை வென்று தரப்போகிறது?**

சிஷ்யன்: குருவே இந்தத் தேர்தலில் நாம் எப்படி வெல்லப்போகிறோம்? போகிற போக்கைப் பார்த்தால் எல்லாம் பிழைக்கும் போலத் தெரிகிறதே.

குரு: அதனால் தான் நீ சிஷ்யன்.
சிஷ்யா முட்டாள் தமிழன் இருக்கும் வரை நாம் வாழ்நாள் எம்.பி.தான்.

தேர்தலில் வென்ற பின்பு நாம் என்ன கூத்தும் ஆடலாம்.கொஞ்சம் கதைக்குங்கள் தான்.

அதை பொருட்படுத்தாமல் பொக்கெற் நிறைக் குறதிலை கவனம் செலுத்த வேணும்.

தேர்தல் அறிவிச்சவுடன் பல்டி அடித்து தேசியம், சுயநிர்ணயம், போர்க்குற்றம், சர்வதேச விசாரணை ஐ.நா. நீதிமன்று இப்படி கதைத்தால் போதும் நாம் வெல்வது உறுதி.

அருட்கதிர் — துன்னாலை

**ஐ.நாவில் பொது வாக்கெடுப்பு நடத்தும் சாத்தியக்கூறு இருக்கிறதா?**

இருக்கிறதா? இல்லையா? என்ற பதில் எமக்குத் தெரியாவிட்டாலும் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டியது.

பயங்கரவாதத்தை அழிக்கும் போர்வையில் ஓர் இனத்தை துவம்சம் செய்துவிட்டு எப்படி குற்றவாளிகள் அச்சமின்றி எம்மை அச்சப்படுத்தியபடி நடமாட முடியும் சொல்லுங்கள்.

தமிழன் — யாழ்ப்பாணம்

**இளைஞர்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்ற நான் அரசியலில் குதிக்கப் போகிறேன் வியாசரே?**

கவனம் தம்பி குதிக்கிறாய்... தண்ணி உள்ள இடமாப் பாத்துக் குதியும்.

இல்லாட்டி கால்முறிஞ்சு போயிடும் தம்பி.

கலை — மிருசுவில்

**கூட்டமைப்பின் கூட்டு இனி எதனுடன்?**

இதனுடன் அதனுடன் என்று எதுவும் இல்லைத் தம்பி

எங்கு அதிகம் கிடைக்கிறதோ அங்கே பெட்டி படுக்கையுடன் கிளம்புவது தான் அவர்களின் றிக்ஸ்.

இந்த லட்சணத்தில் வயதுக்கு வந்தாயா? நாற்று நட்டாயா? என்று வீரபாண்டிய கட்டப் பொம்மன் வசனம் வேறு

சீமா

**தமிழ்க் கட்சிகளின் எண்ணிக்கை கூடுகிறது. இது தமிழர்க்கு நன்மை பகர்க்குமா?**

நன்மை இல்லைத்தான். அதற்காய் தொடர்ந்து எம்மை ஏமாற்றி ஏமாற்றி அடிமுட்டாளாக்குபவர்களை ஆதரித்து நின்று பயனேதும் வரப்போவதில்லையே.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# மலர்களின் முகவரியே

ஸ்ரீயோதா, மண்டைதீவு

மலர்களின் முகவரியே!
இந்த மண்ணிற்கு
இரு விழியே!
முன்னாள் பாரதி கூறியது...

பள்ளிக்குள் நுழைந்திடு
பாடத்தைக் கற்றிடு
பாரதி கனவினை
பாரினில் விளைந்திடு...

அன்பின் அகிலம் நீ
அதன் ஆழம் சொல்ல
இல்லை சொற்கள்
ஆதாரம் என்று கேட்டால்
அன்னை தெரேசா
என்று முடிக்க...

அடுப்பினில் இன்னும்
உனக்கேன் உறக்கம்
எழுந்து வா
மீண்டும் செல்வோம்
அப்பலோ உலகம்...

இருண்ட உலகம்
இன்னும் எதற்கு
இணைய உலகம்
வந்து கிடக்கு

உன் கனவினை முடக்கும்
திரைகள் விலக்கு
காலம் உனக்காய்
காத்துக் கிடக்கு...

## மகளின் அழுகை

தம்பி எழும்ப முன்
வேலைக்கு போயிற்று வாறன்
என்று சொல்லிப் போன
அப்பாவே...
அம்மாவுக்கு சட்டையும்
தங்கச்சிக்கு சித்திரக் கொப்பியும்
வாங்கி வருவதாக கூறிய வார்த்தை
ஏன் அப்பா இன்னும்
வீடு திரும்பேல?
அம்மா இப்போது
நெற்றியில குங்குமம்
வைக்கிறதில்ல
அப்பாவை தேடாத
இடங்கள் இல்லை
பத்து வருடங்கள் ஒடிப்போயிற்று
தம்பி இப்பவும்
அப்பா உடுத்திற சாரத்தைதான்
போர்த்து படுக்கிறான்
யாரும் அப்பாவை
பிடிச்சு வைச்சிருந்தா
விட்டிருங்கோ...

ஆ.முல்லைதிவ்யன்

## போலியாய் உறவு

கானல் போன்ற
உறவுகளின் மத்தியில்
நாணலாய் ஆவது தான்
உலக வாழ்க்கையோ?
தணலாய் இங்கு மனம்
தவித்துக் கொண்டிருக்கையில்
அனல் அடித்து இதயம்
அமுங்குவதும் ஏனோ?
புனலாய் தண்மை
தரவேண்டிய உறவும்
கனவாய் இங்கே
கருக்குவதால் தானோ?

## முழுப்பூசணிக்காயை

சிறுபான்மை இனமொன்றை
சிதைத்து வதைத்து
சேதாரம் ஆக்கிவிட்டு
ஆதாரம் இல்லை என்கிறார்கள்
வேட்டைக்காரனிடம் சிக்காமல்
தப்பியோடிய தீக்கோழி
பாலைவன மணலுக்குள்
தலையைப் புதைத்துக்கொண்டு
பாதுகாப்பு என நின்றதாம்
பூனை தன் கண்களை மூடிவிட்டு
பூலோகமே இருட்டு என்றதாம்
மணித்துளிக்குள் தகவல் யாவும்
வையகம் எங்கும்
'வைரல்' ஆகப் பரவுகின்ற
காலமிது என்பதும் மறந்து
கனவு வேறு காணுகின்றார்கள்
பூசணிக்காயை சோற்றினுள்ளே
முழுசாய்ப் புதைக்கப் பார்க்கும் முயற்சி
உயர் பாதுகாப்பு வலயம் என்றுவிட்டு
உணவின்றி, நீரின்றி வாடிய உயிர்களை
வருத்தி வதம் செய்த உத்தமர்கள்
மற்றைய இனமொன்றை
மனிதராகவே மதித்திடாத
குற்றவாளிகளே மன்றிலமர்ந்து
குறை தீர்க்கப் போகின்றனராம்
நீதிமான்கள் ஆகத்துடிக்கின்றார்கள்
சாத்தான் வேதம் ஓதுவது போல்
நன்றாகவே நடிக்கின்றார்கள்
இருப்பது நாங்கள் என்னவோ
இடுக்குப் பிடிக்குள் என்றபோதும்
எங்கள் பக்கமும் காற்று வீசும்
அந்த நாளில் நீதிதேவதை
இந்த உலகமறிய
உண்மையை மிக உரத்துப் பேசும்

வாணியழகன்
கிளிநொச்சி

## வேள்விக்கிடாய்

மனிதன் நேர்த்திக் கடன் தீர்ப்பதற்காய்
நான் வெட்டப்படுகிறேன்
என்பது ஆடுகளுக்குத் தெரிவதில்லை
அதனாலோ என்னவோ
அவனை நம்பி
அவன் கொடுக்கும் உணவு
எதென்றாலும் தின்று தீர்த்து
உருண்டு திரண்டு நிற்கிறது

உன்னை சிறு குட்டியிலிருந்து
அன்பாய்க் கொஞ்சி வளர்த்து
என் குலக் குற்றம் தீர்க்க
உன் தலை வேண்டி
நேர்த்தி வைத்தேன்...

உன் தலை துண்டிக்க
காலநேரம் கூடிவர
உன்னைக் குளிப்பாட்டி
சொக்கட்டான் பந்தலிட்டு
மின்குமிழ்கள் பூட்டிவைத்து
உன் கழுத்தில் மாலையிட்டு
ஊர் பார்க்க உறவுபார்க்க
என் கிடாய் திறம் என்ற
பேர் கேட்க
கோலாகலமாய் உன்னைக்
கூட்டிச் செல்லும் நிகழ்வது...

தலை துண்டிக்கப்படுவது தெரியாமல்
நீ தளை குழை தின்று
தலையாட்டி குதூகலிப்பாய்
கொஞ்ச நேரம் தான் இந்தக்
குதூகலிப்பு...

என்ன இது இரத்தவாடை
என்று நினைத்திட முன்னமே
தலை துண்டிக்கப்பட்டது
பீறிட்ட இரத்தம் மண்ணில் காயமுன்
நான் விலைபேசப்பட்டேன்
என்ன கொடுமை என்னைக்
கொஞ்சி வளர்த்த என் எசமானே
இறந்த என் உடலடியில் நின்று
பேரம் பேசிக் கொண்டிருந்தார்

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 489



## இதயச் சிறை

எல்லாம் மாயை
என்றறிந்த என்மனம்
உன்னிடத்தில் மட்டும்
சிறைப்பட்டது எப்படி
இதுவும் மாயையோ
என்னைக் குற்றவாளியாக
நிறுத்திவிட்டாய்
காதல் களத்தில்
அன்று இராமன்
வனவாசம் சென்றான்
இன்று நான் உன்
மனவாசத்தில்
நுழைந்து விட்டேன்
தருவாயா உன்
இதயச் சிறையிலிருந்து
எனக்கோர் விடுதலை

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை
சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்

## இவர்களுக்கேன்

கொலைக்குற்றம்
குறித்த மரண தண்டனை
நீதி நிராகரித்து அதிபர் வழங்கிய
விடுதலையை ஓதி வந்த புத்தமதம்
ஒருவழியாய் தேடி பாதி நிலையிலே
பல சாகசங்கள் செய்யும்
அரசுக் கைதிகளை இன்னும்
அறைச்சிறைக்குள்
மீட்க இரக்கமனம் இனும் எழலை
இவர்களுக்கேன் அரசு

கார்வண்ணன்
காவலூர்

## சிறைத்துன்பம்

கைதிகளைச் சிறைப்படுத்தும்
அரசு அன்றும்! இன்றும்!
கைதிகளல்லாத பொதுமக்களை
சிறைப்படுத்தும் வைரசு இன்றும்!
அரசின் சிறையில் கைதிகளின்
உயிர் போகும் தண்டனை துன்பம்!
வைரசின் சிறை மனிதர்களின்
உயிர் காவும் துன்பம்!

சி.சுகிர்தமலர்
ஆனைப்பந்தி

## துணிவே துணை

குற்றஞ் செய்தவன்
குதூகலமாய்
திரிகிறான்
தவறேதும் செய்யாதவன்
காலத்தின் கொடுமை
தனை எண்ணி
தவிக்கிறான்
சிறைக் கூண்டில்
உழைத்து உரமேறிய
கைகள் உருக்குக் கம்பியை
உறுதியோடு பற்றி
உருக்குலைந்த
தன் வாழ்வுக்கு
உயிர் கொடுத்து
உயர்வேனென
உறுதி எடுக்கிறான்
துணிவோடு


துரை
தென்மட்டுவில்

## விடுதலை கிட்டாதா?

நம் நாட்டில் இன்று
பொதுமன்னிப்பு மூலம்
பல இராணுவத்தினருக்கு
கிடைத்த விடுதலை
நீண்ட காலம் இப்படிச்
சிறைவாசம் அனுபவிக்கும்
தமிழ் அரசியல்
கைதிகள்
எமக்கும் கிட்டாதா?

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மௌனத்தின் தேடல் -490



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஆட்கொல்லி கொரோனா

வாள்வெட்டு வேண்டாம்
வலிந்து நுகரும் போதை
ஏழ் பிறப்பும் வேர் அறுக்கும்
இழிவு நிலை வேண்டாம்
ஆட்கொல்லி கொரோனா
ஆபத்து எழுந்து
உயிர் கேள்விக்குறியாகிப்
போகிறது
கெடுதிகளில் சிக்காமல்
வாழ்வதற்கு இளைஞரே
வழிதெரிந்து புறப்படுக

த.சிவகாமி
நல்லூர்

## விழுதுவிட்ட எம்

எம் மண்ணும் மொழியும்
இரு கண்கள் ஏதும் ஊறு
எழுமாயின் துணிந்து எழு
எதிரிகள் நிலை குலையவே
அழுது இரங்கின் அலட்சியமே
ஆளும் தரப்பு நகை செய்யும்
விழுது விட்டஎம்
பெரு விருட்சம்
பெயர்த்து வீழ்த்த
விதி வருமென்
மழுப்பி அரசு மறுதலித்தால்
அநீதி உடைக்க சிறைபுக்க

தமிழின்தாசன்
தாவடி



சிறுகதை
சசிரேகா

# டிங் டோங் கோயில் மணி

சிவன் கோயில் இன்று பிரதோஷ நாள். தாயின் வற்புறுத்தல் காரணமாகவே அவரது ஒரே செல்ல மகன் என்பதால் அவரின் விருப்பத்தை புறக்கணிக்க முடியாமல் அவருடன் பிரதோஷத்திற்கு சிவன் கோயிலுக்கு வந்த நானோ அங்கிருக்கும் கூட்டத்தைக் கண்டு அதிர்ந்து ஓரமாக சென்று நின்றுகொண்டு என்னுடைய செல்போனில் வட்ஸ் அப் சட்டிங்கில் பிசியாக இருந்தேன். அதுவும் போரடிக்கவே மெல்ல இயர்போன் மாட்டி பாடலை கேட்க எண்ணினேன். அதற்காக நான் ஒரு பாடலை தேர்ந்தெடுத்தேன்.

"டிங் டோங் கோயில் மணி கோயில் மணி நான் கேட்டேன்... உன் பேர் என் பெயரில் சேர்ந்தது போல் ஒலி கேட்டேன்...நீ கேட்டது ஆசையின் எதிரொலி... நீ தந்தது காதலின் உயிர்வலி..." பாடலில் என்னை நான் மறந்தேன். கற்பனையில் நுழைந்தேன் எனக்கேற்ப கற்பனை உலகத்தை உருவாக்கி அதில் மகிழ்ந்து கொண்டிருந்தேன். பாடலின் சில வரிகள் கூட கேட்டிருக்கமாட்டேன் என்னை சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் வித்தியாசத்தை உணர்ந்தேன்.

என்னைக் கடந்து சென்றவர்களோ எனது செயலைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டும் சிலர் முகத்தை சுழித்துவிட்டும் சென்றார்கள். இன்னும் சிலர் என்னிடம் கோயிலில் செல்போன் பயன்படுத்தக்கூடாது என அறிவுரையும் தந்தார்கள். அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக் கொண்டு செல்போனை சுவிட்ச் ஓப் செய்துவிட்டு எனது தாயின் வரவிற்காக பொறுமையாக காத்திருந்தேன்.

பிரதோஷம் அல்லவா. அபிஷேகம் ஆராதனை என எப்படியும் 3 மணி நேரத்திற்கு மேலே ஆகும் என தாய் சொன்னது நினைவில் வரவே நொந்துபோனேன். 3 மணி நேரம் என்ன செய்வது என திகைத்து நின்றேன்.

தாய் சொன்னார்களே பிரதோஷம் அன்று என்ன வேண்டினாலும் கிடைக்கும் என்று. அதற்காகவே அலுவலகத்தில் அரை நாள் விடுப்பு எடுக்க வைத்து அழைத்து வந்தாளே உண்மையில் அவளின் நம்பிக்கையின் படி எனக்கு திருமணம் நடக்கவும் வாய்ப்பிருக்கிறது. கூடவே வேலை உயர்வு கிடைத்தால் ஆஹா போதுமே அதற்கு மேல் ஆசைப்பட என்ன உள்ளது நிம்மதியாக வாழ்க்கையை பயணிக்கலாம்.

சரி தாயின் உடனே நாமும் சென்று வேண்டிக் கொள்ளலாம் தவறில்லை. பதவி உயர்வும் திருமணமும் ஒருவரின் வாழ்க்கையில் தேவையான ஒன்று. இதில் பேராசைப்பட என்ன உள்ளது. சின்ன சின்ன வேண்டுதல் தானே அந்த சிவபெருமான் கோபித்துக் கொள்ளமாட்டார் என மனதுக்குள் நினைத்தபடியே தாய் இருந்த இடம் நோக்கி விரைந்தேன்.

அவ்வளவு நேரம் சட்டிங் செய்து கொண்டு பொறுப்பில்லாமல் வெறுப்பாக இருந்த நான் தாயின் பக்கத்தில் சென்று பக்தியோடு அங்கு இருந்த நந்தி கடவுளுக்கு நடக்கும் அபிஷேகத்தை காண்பதைக்கண்டு யாரெல்லாம் என்னை பார்த்து வெறுத்தார்களோ அறிவுரை கூறினார்களோ அவர்கள் விந்தையாக பார்த்தார்கள் என்னை.

தாயும் அமைதியாக, பக்தியாக சிவனின் ஸ்லோகங்களை சொல்லிக் கொண்டே அபிஷேகத்தை கண்டு கொண்டிருந்தார். ஸ்லோகங்களுக்கும் நமக்கும் பல மைல் தூரம். தவறாக உச்சரித்து விட்டால் கெடுதல் நடக்கும் வேண்டாமே வெறும் ஓம் நமசிவாய மந்திரத்தை உச்சரிப்போம். அதுவே சாலச் சிறந்தது. அங்கு வந்த பெண்களில் பலரும் சிவபெருமானின் பக்திப் பாடலை பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமும் வரிசையில் நின்றபடியும் அமர்ந்தபடியும் இருந்தார்கள். நானோ என் தாயின் பக்கத்தில் நின்றேன். பெண்களோ என்னைப்பார்த்து முறைக்க நானோ என் தாயைப் பார்க்க அவர்களும் வேறுவழியில்லாமல் பொறுத்துக் கொண்டார்கள். ஆனாலும் என் தாய் வயதுடைய ஒரு பெண் என்னை அங்கிருந்து விரட்டி ஆண்கள் பக்கம் நிற்க வைத்து விட்டாள்.

நானோ தாயைப் பாவமாக பார்க்க அவரோ கவலைப்படாதே என்பது போல் பார்த்து வைத்தார். என்னதான் படித்து முடித்து வேலைக்கு சென்று திருமணம் வயது வந்தாலும் இன்னும் நான் என் தாய்க்கு குழந்தைதானே. சில நொடிகள் கழித்து எனக்கு மட்டும் அந்த வித்தியாசமான உணர்வு எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை. சட்டென எனது பார்வை கடவுளை விட்டு என் தாய் இருக்கும் இடம் சென்றது. என் தாய்க்கு பக்கத்தில் ஒரு அழகான இளம் பெண் நின்றுகொண்டு என் தாய் சொல்லும் ஸ்லோகம் போலவே அவளும் பக்தியாக சொல்லிக் கொண்டிருந்தாள்.

எனக்கு ஆச்சர்யம் உலகத்தில் தாய்க்கு நிகர் யாரும் இல்லை என்பார்கள். ஆனால் எனக்கு இந்த பெண்ணைக் கண்டதும் அந்த கூற்று பொய்யாகிப் போனதாக உணர்ந்தேன். எனது உணர்வு உண்மை என்பது போல் கோயில் மணியும் டிங் டோங் என ஒலியை எழுப்பியது. அந்த மணி சப்தத்தில் சற்று நேரம் முன்பு நான் கேட்ட பாடல் வரிகள் என் காதில் ரீங்காரமிட்டது. "டிங் டோங் கோயில் மணி கோயில் மணி நான் கேட்டேன்...உன் பேர் என் பெயரில் சேர்ந்தது போல் ஒலி கேட்டேன்..."

அதை நினைத்துக் கொண்டே அவளையே பார்த்து ரசித்தான். என்ன ஒரு அடக்கம், என்ன ஒரு அமைதி அவள் முகத்தில் தெரிந்த பக்தியும் கண்களில் தெரிந்த ஆர்வமும் பொலிவான தோற்றமும் தாய் போல தாரம் அமைய வேண்டும் என எதிர்பார்த்த எனக்கு உடனே கடவுள் இவளை அனுப்பி விட்டதாகவே தோன்றியது. என் தாயின் உண்மையான வேண்டுதல் கடவுள் காதில் எட்டி அதற்கான பலனாக இப்பெண்ணை அனுப்பி வைத் திருக்கிறார் என்றே நான் நினைத்தேன். என் பார்வை அவளை விட்டு அகலவில்லை. அபிஷேகம் ஆராதனை முடிந்ததும் அனைவரும் கடவுளை தரிசிக்க முயன்றார்கள் கூட்டம் அலைமோதியது. அந்தக் கூட்டத்திலும் அனைவரும் பக்தியாக கடவுளை பார்த்துவிட முயன்றார்கள். ஆனால் நானோ என்னவளின் முகத்தை பார்த்து விட முயன்றேன்.

அவள் பெண்கள் கூட்டத்தில் மறைந்துவிட்டது எனக்கு ஏமாற்றத்தை தந்தாலும் இயல்பிலேயே விடாமுயற்சி குணம் கொண்ட நான் அவளை பார்த்துவிட வேண்டும் என்ற உந்துதலில் எக்கி எக்கி குதித்தபடியே இருந்தேன். என் தாயின் வேண்டுதல் பலிக்க வைத்தாய் எனக்கு வேலை உயர்வு கூட வேண்டாம் எனக்கு அவள்தான் வேண்டும் அவளை நான் திருமணம் செய்துக் கொள்ள விரும்புகிறேன். இது மட்டும் சாத்தியம் என்றால் அவளை என் கண்ணில் காட்டு இல்லையேல் நான் விலகிவிடுகிறேன் என வேண்டினேன்.

அதிசயம். கடவுளுக்கு என் வேண்டுதல் பிடித்துவிட்டது உடனே கோயில் மணியும் டிங் டோங் என ஒலிக்க ஆரம்பித்தது. பின் இருக்காதா பக்தியுடன் சுயநலமின்றி வேண்டிக்கொண்டேனே அதற்கான பலனும் கிடைத்தது அவளின் அழகு முகம் என் கண்களில் விழுந்தது. மகிழ்ந்தேன். மெய்மறந்தேன். சில நொடிகளில் மக்கள் கூட்டம் கலைய ஆரம்பிக்கவும் அவளும் கோயிலை விட்டு சென்றுவிட நான் அவசரமாக அவளை தேடி ஓய்ந்து பின்பு அமைதியாகி என் தாயுடன் வீடு திரும்பினேன்.

கோயிலில் பார்த்த பெண்ணை தாயிடம் சொல்ல எண்ணினேன். ஆனால் ஒரு தயக்கம். அவள் மனதில் என்ன உள்ளது என தெரியாமல் தாயிடம் சொல்லி அவர்கள் அப்பெண் வீட்டில் பேசி அவளுக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமையை தர விரும்பவில்லை. எப்படியாவது அவளிடம் ஒரு வார்த்தை பேசி அவள் உள்ளத்தில் இடம் பெற்றால் போதும். ஒருவேளை அவள் மனதில் வேறு எவராவது இருந்தாலும் அவளின் மீது ஆசை வளர்த்துக் கொள்வதற்குள் உண்மை தெரிந்துகொண்டு விலகி விடுவது சிறந்தது என உணர்ந்தேன்.

மறுபடியும் அந்தக் கோயிலில் விசேஷ நாள் வந்தால் அவள் வருவாள் என நம்பினேன். அதற்காகவே தாயிடம் கேட்டு விசாரித்துக் கொண்டு விசேஷ நாள் வரும் போதெல்லாம் தாயை அழைத்துச் செல்ல நினைத்தேன். அதன்படி பௌர்ணமி வரவே தாயை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு நம்பிக்கையுடன் சென்றேன். என் நம்பிக்கை பொய்யாகவில்லை அவளைக் கண்டேன் மனம் நிம்மதியானது இவளை காண எத்தனை நாட்கள் ஆனது. கண்டதும் இது நாள் வரை மனதில் இருந்த குழப்பம், கவலை, வேதனை அனைத்தும் ஒரு நொடியில் ஓடி விட்டதே. மனது லேசாகி நிம்மதியானதை நினைத்து வியந்தேன். தினமும் இரு வேளை மறவாமல் கோயிலுக்கு சென்று வந்தேன். சில நாள் அவளின் தரிசனம் கிடைக்கும், சில நாள் கிடைக்காது ஆனா லும் எனது விடாமுயற்சியை தொடர்ந்தேன்.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி ஓடியது. அதேபோல என்னுள் உருவான அவளின் மீதான எண் ணங்கள் கூட மாறி காதல் பிறந்தது. அந்த காதலால் நான் பித்தனாகிப் போனது எனக்கு மட்டுமே தெரியும் ஆனால் பார்ப்பவர்கள் என்னை பக்தியில் பித்தனாகிப் போனதாக நினைத்துக் கொண்டார்கள்.

எதேச்சையாக அவள் என்னை கடந்து போகும் போது அவள் வீசும் ஒரு நொடி பார்வைக்காகவே நான் ஏங்கித் தவித்தேன். சில நாள் அந்த பார்வையின் அருள் கிடைக்கும், சில நாள் கிடைக்காது. அதற்காக அவளை நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அதே சமயம் அவளை வற்புறுத்தி பேசி என்னை காதலிக்க சொல்லவும் நினைக்கவில்லை. என்றாவது ஒருநாள் அவளின் முன்பு நிற்போம், அவளும் என்னிடம் பேசுவாள். அப்போது நாமும் நம் காதலை சொல்லலாம் என மனதில் ஆயிரம் முறை அவளுடன் எப்படி பழகுவது, எப்படி பேசுவது என கற்பனை செய்து கொண்டான். அந்த கற்பனைக்கு யார் கண் பட்டதோ அன்று என் தாய் சொன்ன வார்த்தை என் தலையில் இடி என இறங்கியது. எனது பக்தி மார்க்கத்தையும் வேலை திறமையையும் கண்டு எனது திருமணத்திற்கு ஒரு பெண்ணின் வரன் வரவே என் தாயும் அதற்கு ஒப்புக் கொண்டார். நாளை நான் பெண் பார்க்க செல்ல வேண்டும் எப்படி என்னால் முடியும்.

மனதில் ஒருவளை வைத்துக் கொண்டு இன்னொரு பெண்ணை பார்ப்பதே நாகரிகம் கிடையாது. இதில் பெண் பார்க்க அழைத்து இரு குடும்பங்களுக்கும் பிடித்துவிட்டால் அது திருமணம் வரை சென்றுவிடுமே, கூடாது. இப்பொழுதே நான் என் தாயிடம் அவளைப்பற்றி சொல்ல வேண்டும், இல்லையேல் எனது மனசாட்சியே என்னை கொன்றுவிடும். உடனே தாயைக் காண சென்றேன். அவ்வளவு நாள் மனதில் மறைத்து வைத்த காதலை அவரிடம் சொல்லி நாளை நடக்கும் பெண் பார்க்கும் படலத்தையே தடுத்துவிட துடித்தேன். அதற்காக அவர் என்னிடம் கோபித்துக் கொண்டாலும் கவலையில்லை. ஒரு பெண்ணிற்கு துரோகம் இழைக்கக்கூடாது என முடிவு எடுத்து தாயிடம் பேச அவர் பக்கத்தில் அமர்ந்தேன்.

அவரோ சந்தோஷ மிகுதியில் பார் உன் வருங்கால மனைவியை என சொல்லி ஒரு போட்டோவை நீட்ட அதை வாங்கக்கூட எனக்கு பிடிக்கவில்லை. யார் அப்பெண் என பார்க்கக்கூட விரும்பாமல் தாயிடம் என்னுள் உருவான காதலை போட்டு உடைத்தேன். அவர் மேல் என் கோபத்தைக் கொட்டினேன். தாய் அல்லவா என் கோபத்தை தாங்கிக் கொண்டார். என் வெறுப்பை புரிந்து கொண்டார்.

நான் சொன்னதைக்கேட்டு முதலில் அதிர்ந்தவர் பின்பு என் மனதை புரிந்துக் கொண்டார். அப்பெண்ணை தனக்கு காட்டுமாறு கூற நானும் மகிழ்வுடன் தாயை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு சென்றேன். அவளை தேடி அலைந்து ஓரிடத்தில் விளக்கேற்றிக் கொண்டிருந்த என்னவளின் முகத்தை என் தாய்க்கு காட்ட அவரோ சிரித்தார். அதைப் பார்த்து நான் ஆச்சர்யப்பட்டேன்.

உடனே அவர் கையோடு வைத்திருந்த பெண்ணின் போட்டோவை என்னிடம் நீட்டி பார் என்றார். நான் முடியாது என்றேன். அவரோ பார் என கட்டாயப்படுத்த விதியே என வேண்டா வெறுப்பாக போட்டோவை பார்த்து முதலில் அதிர்ந்தேன். மறுநொடி ஆச்சர்யப்பட்டேன் அடுத்த நொடியே ஈஈஈ என சிரித்தேன்.

அடுத்த நொடி என் தாயை பாசமாக பார்த்தேன். அவரோ என் மகிழ்ச்சியைக்கண்டு என்னிடம் நான் உன் தாய். என் மகனின் மனதில் இருப்பதை புரிந்து கொள்ளாத அளவிற்கு முட்டாள் அல்ல. தினமும் அப்பெண்ணை பார்ப்பதற்காக என்னை இழுத்துக்கொண்டு கோயிலுக்கு வருகிறாய் எனக்கு அவ்விசயம் தெரியாமலா இருக்கும். குழந்தையாக இருந்த நீ பக்திமானாக மாறியது எப்படி என்றுகூடவா நான் அறிந்துகொள்ள முனைய மாட்டேன்.

ஊரே அறியும் உன் காதலைப்பற்றி. அதன்றால் நானே அப்பெண்ணிடம் பேசி அவள் சம்மதம் வாங்கிக் கொண்டு அப்பெண்ணின் பெற்றோரிடம் கலந்து பேசி நாளை பெண் பார்க்கும் படலத்தை ஏற்பாடு செய்தேன். நாளை உனக்கு பிறந்தநாள். ஒவ்வொரு வருட பிறந்த நாளும் உனக்கு பிடித்தவற்றை பரிசாக தந்து பழகிவிட்டேன். இம்முறையும் உனக்கு பிடித்தவளை உன் வாழ்க்கையில் இணைக்கும் திருமண பந்தத்தை பரிசாக தர ஆசை கொண்டேன்.

அதற்குள் விபரம் அறியாமல் நீ என் மீது கோபித்துக் கொண்டாய். இப்பொழுது சொல் உனக்கு நீ காதலித்த பெண் வேண்டுமா? அல்லது உனக்காக நான் பார்த்த எனது வருங்கால மருமகள் வேண்டுமா யாரை நீ திருமணம் செய்துகொள்கிறாய் என சிரிப்புடன் கேட்டாள். எனக்கு என்ன பதில் சொல்வதென தெரியாமல் எனக்கு வாழ்வளித்த தாயையும் எனக்கு புது வாழ்க்கையை தரப்போகும் என்னவளையும் மாறிமாறி பார்த்து மகிழ்ந்து நிம்மதியில் சிரித்தபடியே பிரகாரத்திற்குள் இருந்த சிவ பெருமானுக்கு கைகூப்பி பல நன்றிகள் சொன்னேன். அந்நேரம் டிங் டோங் என கோயில் மணி பலமாக அடித்தது. எனது நன்றியை கடவுள் ஏற்றுக் கொண்டார் என்பதை சொல்லாமல் சொல்லியது.



# எம்.பிக்களி
# உரிமைகளை

## சி.வி. விக்னேஸ்வர

பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு மக்களின் பிரச்சினைகளை மதீர்க்கமுடியும் என்றால் அது தவறான எண்ணமாகும். சரியான சந்தர்ப்பத்தில் நிபந்தனைகளுடன் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் திடமாகவும் கொள்கைப் பிடிப்போடும் கேள்வியெழுப்பும் திராணி கொண்ட ஒருவர் அல்லது இருவர் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலே போதுமானது. அவ்வாறானவர்கள் பாரளுமன்றம் செல்ல வேண்டும். அப்படியானவர்களை அங்கு அனுப்புவதற்கான முயற்சியிலேயே நாம் இறங்கியிருக்கின்றோம் என வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணியின் வியூகம் மற்றும் ஜெனீவா பேரவை தொடர்பில் அவர் வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகின்றது.

**கேள்வி:** தமிழ்க் கட்சிகள் பிளவுபடக்கூடாது என தமிழீழ விடுதலைப் புலிகள் நினைத்ததாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது. ஆனால் தற்போது நிலைமை அப்படியில்லை. நீங்களும் ஒரு கட்சியை தொடங்கியுள்ள சூழ்நிலையில் எந்தளவுக்கு இது தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பை பெறும் என்று நினைக்கின்றீர்கள்?

**பதில்:** எல்லோர் மனதில் இருக்கும் கேள்வியும் இது தான். நாம் எல்லோரும் ஒருமித்து 15 பேரை ஐந்து வருடங்களுக்காக பாராளுமன்றத்துக்கு அனுப்பினோம். இன்று வரையில் அவர்கள் தமிழர்களுக்கு என்ன செய்திருக்கின்றார்கள்? நான் பாராளுமன்றத்தில் இருந்திருந்தால் முதலாவது வருடத்திலேயே ஒரு பிரச்சினையை எடுத்திருப்பேன். அதாவது அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்கிறோம். ஆனால் நீங்கள் சிறையிலிருக்கும் 300 பேர் வரையான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என உறுதி வழங்க வேண்டும் என்று கேட்டிருப்பேன். ஏனென்றால் இது சாத்தியமான விடயமாகும். ஜே.வி.பி காலத்தில் அனைவரையும் அப்போதைய அரசாங்கம் பொது மன்னிப்பில் விடுதலை செய்திருந்தது. ஆகவே இது ஓர் உதாரணமே. இவ்வாறு பல வழிகளில் அரசாங்கத்துக்கு நெருக்குதல்களை செய்திருந்தால் எமது மக்களுக்கு பல விடயங்களைப் பெற்றுக்கொடுத்திருக்கலாம். எதிர்வரும் தேர்தலில் வடமாகாணத்திலிருந்து பாராளுமன்றத்துக்குச் செல்பவர்களில் ஓரிருவர் தவிர மற்ற அனைவருமே தமிழர்களாகவே இருக்கப் போகின்றனர். அவர்கள் அங்கு சென்று தமிழர்கள் சார்பாக ஒருமித்து சில விடயங்களில் முடிவுகளை எடுக்கக்கூடும். ஒரே கட்சியிலிருந்து அத்தனைபேர் சென்று நன்மைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்ததில் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. ஆகவே கொள்கை ரீதியாக திடமாக அரசாங்கத்துக்கு சில விடயங்களை சொல்லக்கூடிய ஓரிருவர் அந்த 15 பேருக்கு இணையானவர்கள் என்பது தான் எனது கருத்து. ஆகவே உறுப்பினர்களின் தொகையைக் கொண்டு அவர்கள் ஏதோ செய்யப்போகின்றார்கள் என எண்ணுவது தவறு.

**கேள்வி:** கடந்த காலங்களில் உங்களை விமர்சித்தவர்களுடன் கூட்டு சேர்ந்திருக்கின்றீர்களே? அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை எதிரியும் இல்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

**பதில்:** மக்களின் நன்மை கருதி எமக்கு எதிரான கருத்துகளை கொண்டிருப்பவர்களிடமும் கூட்டுச் சேர வேண்டிய அவசியம் இருக்கின்றது. தனித்தனியாக கட்சி ரீதியாக இயங்கும் போது விமர்சனங்கள் அல்லது எதிரான கருத்துகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும். ஆன்ால் தமிழ் மக்களுக்காக ஒருமித்து பயணிக்கும் போது எத்தகைய முரண்பாடுகளை கொண்டவர்களும் ஒருமித்து செயற்பட முடியும் என்பதையே நாம் உணர்த்தியுள்ளோம். எங்களிடம் இணைந்துள்ள நான்கு பேரும் ஒரு பலமான கூட்டணியை அமைத்துள்ளார்கள். ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதை மக்களிடத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்துவோம். எங்களிடத்திலே இரகசியமான சிந்தனைகள் இல்லை. தற்செயலாக எங்களில் யாராவது ஒருவர் தவறான வழியில் சென்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

**கேள்வி:** அப்படியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் போது ஏன் இது சாத்தியமற்றுப் போனது?

**பதில்:** எங்களுடைய சிந்தனையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சிலர் தங்களுக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற மமதையிலும் அகந்தையிலும் ஆணவத்திலும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக ஒரு சம்பவத்தை கூறலாம். நல்லாட்சி அரசாங்கத்தின் பெப்ரவரி 3 ஆம் திகதி அதாவது சுதந்திர தினத்துக்கு முதல் நாளன்று எனது வீட்டுக்கு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் சுமந்திரனும் வருகை தந்திருந்தார்கள். அப்போது சம்பந்தன் என்னிடம் 'நாளை சுதந்திர தின நிகழ்வுக்கு வருவீர்களா' என்று கேட்டார். அதற்கு நான் தயவுசெய்து அதைப்பற்றி என்னிடம் கதைக்காதீர்கள் நீங்கள் வேண்டுமானால் செல்லுங்கள் என்றேன். ஏனெனில், 1958 ஆம் ஆண்டு நான் றோயல் கல்லூரியில் மாணவனாக இருந்த போது ஒரு சுதந்திர தின அணிவகுப்பில் கலந்து கொண்ட பிறகு இதுவரை எந்தவொரு நிகழ்விலும் ஏன் நீதியரசராக பதவி வகித்த காலத்திலும் நான் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கு கொண்டதில்லை.

ஏனென்றால் இலங்கை தமிழர்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதே எனது நிலைப்பாடு. எனது கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது ஒரு நல்ல ஆட்சி மலர்ந்திருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு எமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றார்கள். ஒத்துழைப்பை நல்குவதில் பிரச்சினையில்லை. ஆனால் அவர்களிடமிருந்து எமது மக்கள் சார்பாக சிலவற்றை பெற்றுக் கொள்வதாக இருத்தல் வேண்டும் என்றேன். ஆனால் அதற்கு அவர்கள் உடன்படவில்லை. ஆகவே கொள்கை ரீதியாக ஒத்துப் போகாவிட்டால் நான் என்ன செய்வது? மக்களுக்கு ஏதாவது நடக்கும் என்ற நம்பிக்கையில் தான் இந்த முதுமையிலும் நான் அரசியலில் பிரவேசித்தேன். ஆனால் அவர்கள் என்னை செயற்பட விடவில்லை.

**கேள்வி:** சஜித் பிரேமதாஸவை தமிழ்க் கட்சிகள் ஆதரிப்பதை பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** என்னைப்பொறுத்தவரை சிங்களத் தலைவர்கள் அனைவருமே தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதற்கு தயங்குகின்றனர். தமிழர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என அவர்கள் உள் மனதில் நினைத்தாலும் கூட தேர்தல்களின் போதோ அல்லது சிங்கள மக்கள் மத்தியில் அதை வெளிப்படுத்துவதில்லை. ஆகவே தமிழர்களுக்கு ஏதாவது செய்வோம் என சிலர் பாசாங்கு செய்வார்கள், சிலர் வெளிப்படையாக ஒன்றும் செய்யமாட்டோம் என்பார்கள். சஜித்தை பொறுத்தவரை அவர் எப்போதுமே சிங்கள பௌத்த சிந்தனையில் இருப்பவர். அவரது நடவடிக்கைகளும் அவ்வாறே இருக்கின்றன.

இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் கூட தமிழ்த் தேசியக்

# ரின் எண்ணிக்கை அவசியமில்லை
# ள கேட்க தைரியம் இருந்தாலே போதும்

## லவரன் சாட்டையடி



கூட்டமைப்பினர் வெளிப்படையாக அவருக்கு ஆதரவு என்று அறிவித்ததாலேயே அவர் தோல்வியை தழுவினார். அந்த ஆதரவு அறிவிப்பு சிங்கள மக்களை சிந்திக்கத் தூண்டியது. எனக்குத் தெரிந்த வரை அவருக்கு ஆதரவு அளிக்கவிருந்த மக்கள் மற்றும் சிங்களத் தலைவர்கள் இந்த அறிவிப்புக்குப் பின்னர் தமது எண்ணங்களை மாற்றிக் கொண்டனர். ஆகவே அவர் ஒரு சிங்கள பௌத்த அரசியல்வாதியாகவே இருக்கின்றாரே ஒழிய ஒரு பரந்து பட்ட சிந்தனை கொண்ட முழுநாட்டு மக்களையும் ஒன்றாக நோக்கக்கூடிய ஒரு மனிதாபிமானம் கொண்ட பின்னணி அல்லது பின்புலம் அவருக்கு இல்லை.

**கேள்வி:** கூட்டமைப்பை எதிர்த்து உங்களால் அதிக ஆசனங்களை பாராளுமன்றத் தேர்தலில் பெற முடியுமா?

**பதில்:** இத்தனை நாள் வரையில் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் மக்களுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. மக்களிடத்தே இவர்கள் பற்றிய எதிர்க்கருத்துக்கள் நிலவுகின் றன. ஆகையால் அவர்களுக்கு வாக்களிப்பதை மக்கள் தவிர்ப்பர். எனினும் எமது கட்சி புதியது. இது ஆரம்பித்து ஒன்றரை வருடங்கள் கூட இல்லை. எனினும் மக்கள் நலம் சார்ந்து சிறந்த கொள்கையுடன் களமிறங்குகிறோம். ஆகவே மக்கள் எமக்கு ஆதரவை நல்குவார்களேயானால் எம்மால் வெற்றி பெறலாம். மேலும் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு எங்களால் ஆன முயற்சிகளை மேற்கொள்வோம்.

**கேள்வி:** அவ்வாறு உங்கள் கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சாத்தியமுள்ளதா?

**பதில்:** எந்த கட்சி ஆட்சியமைக்கும் என்பது இதுவரை தெரியாது. ஆனால் எந்த அரசாங்கம் வந்தாலும் எமக்கான முக்கியமான விடயம் தமிழ் மக்களின் எதிர்காலம். வெறுமனே அவர்களுக்கு ஆதரவு அளித்து கொண்டு கைகளை உயர்த்தி காலத்தை கடத்தும் எண்ணம் கிடையாது. அந்த அரசாங்கம் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய விடயங்களைப் பெற்று கொண்டு அல்லது அதற்கான வழிவகைகள் ஊடாகவே அவர்களுடன் இணைந்து கொள்ளும் சாத்தியங்களை ஆராய்வோம்.

**கேள்வி:** வடமாகாணத்தின் முதலமைச்சராக ஐந்து வருடங்கள் இருந்தீர்கள். முதலமைச்சராக சாதிக்க முடியாதவற்றை ஒரு பாராளுமன்ற உறுப்பினராக சாதிக்க முடியும் என்று கருதுகின்றீர்களா?

**பதில்:** நிச்சயமாக. காரணம் வடமாகாண சபையின் அதிகாரங்கள் மிக மிகக் குறைந்தவையாகும். மத்திய அரசாங்கத்தினால் பல வழிகளிலும் அதைக் கட்டுப்படுத்த முடியும். அப்படி நடந்ததால் தான் என்னால் ஒன்றையும் செய்ய முடியாது போனது. அதைவிட எனது சொந்தக் கட்சியே எனக்கு எதிராக வேலை செய்யும் போது எவ்வாறு இயங்குவது? முதலில் முதலமைச்சரின் நிதியை எனக்குப் பெறமுடியவில்லை. ஒரு வெளிநாட்டு நிறுவனம் வன்னியில் பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்து அதை ஏற்றுமதி செய்யும் திட்டமொன்றை கொண்டு வந்தது. அதன் மூலம் பலருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலைமை இருந்தது. சிறந்த நீர்வளம், சுற்றாடல் மற்றும் காலநிலை என்பன சிறப்பாக இருக்கின்றன என நிறுவனம் மிகவும் திருப்தியடைந்தது. எனினும் அத்திட்டம் ஆரம்பிக்கப்படவே இல்லை. ஏனென்றால் குறித்த காணி வனவளத் திணைக்களத்துக்கு சொந்தமானது என அரசாங்கம் கூறியது. வரைபடத்தின் படி அது எவருக்கும் சொந்தமானதில்லை என்று ஆதாரங்களை காட்டினோம். அது பழையது. புதிய வரைபடம் எங்களிடம் உள்ளது என்றார்கள். எப்போது புதிய வரைபடம் வந்தது என்று கேட்டோம். 2007 ஆம் ஆண்டு என்றார்கள். அப்போதுதான் யுத்தம் நடந்து கொண்டிருந்ததே எவ்வாறு வரைபடம் கீறப்பட்டது என்று கேட்டதற்கு வானத்திலிருந்து கூகுள் வரைபடம் மூலம் பெற்றோம் என்றார்கள். அது சட்டத்துக்கு புறம்பானது என்று கூறினாலும் இல்லை இடத்தை தர முடியாது என்றார்கள். இப்படி எத்தனையோ தடைகள். அரசாங்கத்தின் அதிகாரிகள் எம்மை ஒன்றும் செய்யவிடவில்லை. வெளிநாட்டு அரசியல் பிரமுகர்கள்கூட சில விடயங்களில் தெளிவைப் பெறுவதற்கு எம்மையே நாடி வந்தார்கள்.

ஏனென்றால் நாங்கள் எமது பிரச்சினையை பலருக்கும் தெரிவித்திருந்தோம். அதற்கும் தடை வந்தது. இவர் மாகாண சபைக்காரர் தானே எவ்வாறு எம்.பிக்களுடன் பேச முடியும் என்றார்கள். அவர்களுடன் கதைத்து எதையும் பெற முடியாது என்ற காரணத்தினாலேயே அவர்கள் என்னை நாடி வந்தனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு உயர்ஸ்தானிகராக செயற்பட்ட ஹுசைன் வருகை தந்தபோது காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை நூல் வடிவமாக கொடுத்தோம். ஆகவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் சர்வதேசத்துடன் தொடர்புகளை பேணலாம். அதில் தடைகள் இருக்காது.

**கேள்வி:** ஜெனீவா பிரேரணையிலிருந்து இலங்கை விலகியமை -தமிழர்களுக்கு எந்தளவுக்கு சாதகமாக உள்ளது?

**பதில்:** பிரேரணையிலிருந்து விலகியமை தமிழர்களுக்கு சாதகமான விடயம் தான். சர்வதேசம் தொடர்ந்தும் தமிழர்க்ள் சார்பாக பேச ஆரம்பித்துள்ளதே. ஜனாதிபதி கோட்டாபய எமக்கு சாதகமானவர் இல்லை தான். ஆனால் தமிழர்களுக்கு சாதகமான ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது என்பேன். மேலோட்டமாக பார்க்கும் போது தமிழர்களுக்கு நீதி கிடைக்காது போகுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு சாதகமான சம்பவங்கள் இடம்பெறும் ஒரு சூழல் உருவாகியிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

**கேள்வி:** உங்கள் கட்சியானது என்ன அடிப்படையில் மக்கள் மத்தியில் பிரசாரங்களை முன்னெடுக்கப் போகின்றது?

**பதில்:** நாம் முக்கியமான மூன்று விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எமது பிரசாரங்களை முன்னெடுக்கப் போகின்றோம்.

1) அரசியல் ரீதியான தன்னாட்சி
2) மக்கள் சார்பான தற்சார்பு (Self Reliant)
3) தன்னிறைவு

அரசியல் ரீதியாக எதையும் பெற்றுக்கொள்வதில் எமக்கு நம்பிக்கை உள்ளது. ஆகவே எமது சமூகத்துக்கான தன்னாட்சி என்ன என்பது குறித்து விவாதித்து அதைப் பெற முயற்சிப்போம். வடக்கு- கிழக்கை இணைக்க வேண்டிய அவசியம் குறித்து நாம் மக்களுடன் கதைத்து வருகின்றோம். தன்னாட்சி என்பது வெறுமனே ஒரு யோசனை அல்ல. தமிழ் மக்கள் இருக்கும் பிரதேசத்தில் அவர்களுக்கான ஒரு தனி அலகு அவசியம். இல்லாவிடின் அது எதிர்காலத்தில் வேறு சிக்கல்களை தோற்றுவிக்கும். ஆகவே அந்த தாக்கம் ஏற்படும் முன்னர் வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதே வேளை தற்சார்பு எனும் போது மற்றவரிடத்திலேயே எல்லாவற்றையும் கேட்டு பெறல் அல்லது என்ன கிடைக்கும் என்று எதிர்பார்த்திருத்தல், மற்றவரிடத்தில் தங்கியிருத்தலை அகற்ற வேண்டும்.

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சிலர் தங்களுக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற மமதையிலும் அகந்தையிலும் ஆணவத்திலும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்

போருக்குப் பின்னர் இந்த நிலைமை அதிகரித்துள்ளது. எங்களில் நம்பிக்கை வைத்து தற்சார்பாக அதாவது தன்னம்பிக்கையை வளர்த்து கொள்ளும் நிலைமைக்கு சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும். அடுத்ததாக தன்னிறைவு. எங்கள் பிரதேசத்தில் எல்லா வளங்களும் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் நாம் மற்றவரிடத்தில் கையேந்தி நிற்கும் நிலைமைகள் தொடர்கின்றன. அதாவது எல்லாவற்றையும் தெற்கிலிருந்து பெற வேண்டிய நிலைமைகளை மாற்ற வேண்டும். சில விடயங்களில் தாராளமாக நாம் தன்னிறைவை பெறலாம்.

அதாவது எமக்கு போதிய காய்கறிகளை இங்கு பெற்று அதை பின்பு இங்கிருந்து தெற்கிற்கு அனுப்பலாம். அதற்கடுத்து வெளிநாட்டுக்கும் அனுப்பலாம். அவ்வாறானதோர் சூழலை அரசியல் அதிகாரங்களுடன் மாற்றியமைக்கலாம். அதாவது எங்களை நாம் பொருளாதார ரீதியாக பலப்படுத்திக்கொண்டால் ஏனைய விடயங்களைப்பற்றி பேசலாம்.

**கேள்வி:** நீங்கள் முன்வைத்துள்ள மூன்று விடயங்களில் தன்னாட்சி என்ற விடயம் தனி நாட்டுக் கோரிக்கை போன்று அர்த்தப்படுகின்றது. பெரும்பான்மையினத்தவர்களிடம் இது சர்ச்சையை ஏற்படுத்தாதா? எவ்வாறு அவர்களுக்கு விளக்கப்போகின்றீர்கள்?

**பதில்:** ஆம், சற்றுக் கடினமான காரியம் தான். ஏனென்றால் உண்மையாக தூங்கிக்கொண்டிருப்பவனை எழுப்பலாம். பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. சமஷ்டி என்பது நாட்டை பிரிப்பது அல்லது அது ஐக்கியப்படுத்துவது என்பது சிங்களத் தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் அரசியல் ரீதியாக நன்மைகளைப் பெறுவதற்கு நாட்டை பிரிக்கிறார்கள் என்று மக்கள் மத்தியில் பிரசாரத்தை மேற்காள்வார்கள். அதில் எம்மை பலிகடாவாக்குவார்கள். ஆனால் நான் எமது கொள்கை குறித்து சிங்கள மக்களிடம் பேசிக்கொண்டிருக்கின்றேன். தன்னாட்சி என்றால் அந்த பிரதேச மக்களின் சுயாட்சி என்பதன் அர்த்தத்தை விளங்கப்படுத்த வேண்டியதாகவுள்ளது. சில சிங்கள ஊடகங்களின் மூலம் அதை வெளிப்படுத்தியிருந்தேன். மேலும் மகாநாயக்கர்களை சந்தித்தேன். எனினும் அது போதாது என்றுதான் கூற வேண்டும். எனினும் நான் பாராளுமன்றம் சென்றால் நிச்சயமாக அதைச் சிங்கள மக்களிடம் எடுத்துக்கூற வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். அந்த மக்களிடம் நேரடியாகச் சென்று புரிந்துணர்வை ஏற்படுத்துவேன்.

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் காலி மாவட்ட சட்டத்தரணிகள் அமைப்பினர் என்னுடன் சந்திப்பை ஏற்படுத்தினர். நான் சமஷ்டி மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து பேசினேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் சட்டம் படித்தவர்கள். சமஷ்டி என்பது நாட்டை ஐக்கியப்படுத்துமே ஒழிய பிரிக்காது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே சிங்கள மக்களுக்கு போதுமான புரிந்துணர்வை நாம் ஏற்படுத்தினால் இதில் நாம் வெற்றி காண முடியும்.

**கேள்வி:** புதிய தேசிய கட்சியாக உருவெடுத்திருந்தாலும் பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு விளங்குகிறது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. உங்கள் தன்னாட்சி கோரிக்கை தேர்தல் பிரசாரமாக முன்னெடுக்கப்பட்டால் மீண்டும் அந்த கட்சியினரே ஆட்சியமைக்கக்கூடிய சூழல் ஏற்படாதா?

**பதில்:** பேரினவாத சக்திகள் வடக்கு- கிழக்கில் ஊடுருவக்கூடிய சாத்தியங்கள் இல்லை. அதேவேளை தெற்கில் இது ஒரு பிரசாரமாக கொண்டு செல்லப்பட்டால் அது சிங்கள மக்களின் ஆதரவை பெறக்கூடிய ஒரு விடயமாகத்தான் இருக்கும். மாறாக தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருக்காது. இங்கு அது வேறு கட்சிகளின் மூலம் முன்னெடுக்கப்பட்டாலும் தமிழ் மக்களிடம் எடுபடாது. கூறப்போனால் எனக்கெதிரான பிரசாரங்களே இங்கு முன்னெடுக்கப்படும். தமிழ் மக்களுக்கு எதிராக இங்கு ஒன்றும் எடுபடாது.

இருப்பினும் தமிழ் மக்களுக்கு இவ்வாறான ஒரு தீர்வை நாம் பெற வேண்டுமானால் சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து மட்டும் தான் அதை பெற்றுக்கொள்ள முடியும். அவர்களின் ஆத்ரவு இல்லாதவர்களிடம் இதை பெற முடியாது. ஆகவே தற்போதைய அரசாங்கத்தின் எண்ணங்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப்பின்னர் மாற்றமடையும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**கேள்வி:** உங்கள் கூற்றுப்படி சிங்கள மக்களின் பேராதரவைப் பெற்ற தற்போதைய ஜனாதிபதியிடமிருந்து தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றீர்களா?

**பதில்:** நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு தீர்வு கிடைக்கும் எனக் கூற முடியாது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவை விட கூடுதலான சில விடயங்களை இவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. தற்போதைய உலக அரசியலின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்துக்கு பல நெருக்கடிகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. அதையும் எமக்கு சாதகமாகப் பாவித்து பல விடயங்களை அவர்களிடமிருந்து பெறலாம் என்ற நம்பிக்கையும் எமக்குள்ளது.

# அடிக்கத் தொடங்கிவிட்டது தேர்தல் காற்று

## வெல்லப்போவது யார்

அடுத்தமாதம் 25 ஆம் திகதி இலங்கையின் பாராளுமன்றத் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. சந்தை என்பது கொடுக்கல்-வாங்கல்கள் நடைபெறும் இடம். அங்கு பொருட்களுக்குப் பணப்பரிமாற்றம் இடம்பெறும். இங்கு வாக்குறுதிகளுக்கு வாக்குகள் பரிமாற்றப்படும். அதனால் தான் தேர்தல் சந்தை எனக் குறிப்பிட்டேன். இம் முறை தேர்தலும் பத்தோடு பதினொன்று தான். தமிழர் தரப்பைப் பொறுத்தளவில் பழைய மொந்தையில் புதிய கள்ளு அவ்வளவே.

முன்னைய தேர்தல்களைப் போலவே இம்முறையும் வாக்குறுதிகள் வானை முட்டும். எவையும் நிறைவேற்றப்படப் போவதில்லை. தலைவர் பிரபாகரனை வைத்து வியாபாரம் நல்ல களைகட்டும். தமிழ் தேசியத்தில் அதிகம் பற்றுள்ளவர் யார்? என்ற கோதாவில் சுயேட்சைக்குழுக்கள் முதல் கட்சிகள் வரை முனைப்புக் காட்டும். சேறு பூசல்களுக்குப் பஞ்சமே ஏற்படாது. ஆனால் வாக்காளர் கதி? சேதுபட விக்ரம் போல "எங்கே செல்லும் இந்தப் பாதை. யாரோ யாரோ அறிவாரோ ?" போல அதே கதிதான்.



**தமிழ் தேசியத்தில் அதிகம் பற்றுள்ளவர் யார்? என்ற கோதாவில் சுயேட்சைக் குழுக்கள் முதல் கட் சிகள் வரை முனைப்புக் காட்டும். சேறு பூசல்களுக்குப் பஞ்சமே ஏற்படாது. ஆனால் வாக்காளர்கதி? சேதுபட விக்ரம் போல "எங்கே செல்லும் இந்தப் பாதை. யாரோ யாரோ அறிவாரோ?"**

### தென்னிலங்கைக்கட்சிகளின் நிலை

பொதுஜன அபிப்பிராயம் என்பது பொது மக்களில் பெரும்பாலானோர் கொண்டுள்ள எண்ணத்தை அல்லது விருப்பத்தைக் குறிக்கும் சொற்பதமாகும். அது காலத்திற்கு காலம் மாறக் கூடியது. அவ்வாறு மாறாதது எனில் 2015 இல் தோல்வியடைந்த ராஜபக்ஷக்கள் 2019 இல் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியிருக்க முடியாது. அதேபோல 2005 இல் மகிந்தவிடம் தோல்வியடைந்த ரணில் 2015 இல் மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்க முடியாது. ஆக, பொதுஜன அபிப்பிராயம் என்பது காலத்துடன் மாறுபடக்கூடியது. ஆனால் அது குறுகிய காலத்துக்குள் மாறும் எனக்கூற முடியாது. எனவே தென்னிலங்கையின் பொதுஜன அபிப்பிராயத்தைப் பொறுத்தவரையில் மூன்று மாதங்களுக்கு முன் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நிலவிய கோட்டாபய ஆதரவு நிலையே இன்றும் தொடர்கிறது என்றே சொல்ல வேண்டும். எதிர்க்கட்சியான UNP தாம் ஆட்சிக்கு வந்து 100நாள் திட்டத்தில் பலவேலைத் திட்டங்களைச் செய்தோம். ஆனால் ஜனாதிபதி கோட்டபாயவின் 100நாட்கள் ஆட்சியில் என்ன அபிவிருத்தியை நாடு கண்டது என்று தேர்தல் பரப்புரை செய்தாலும் கூட அது எவ்வளவு தூரம் தென்னிலங்கை சிங்கள மக்களிடம் எடுபடும் என்பது கேள்விக்குறியே. பொருட்களின் விலை அதிகரிப்பு என்ற கோஷமும் பெரியளவு மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

### சஜித் -ரணில் முறுகல்

ஆளும் கட்சிக்கு இன்னுமொருபலம் எதிர்க்கட்சியின் இழுபறி முரண்பாடுகள். சஜித்-ரணில் பிடுங்குப்பாடு ஆளும் கட்சிக்கொரு வரப்பிரசாதம். இன்னுமொரு புறம் ரவி கருணாநாயக்க ரணிலுக்கெதிராக மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தை ஆளும் கட்சி ஊதிப் பெருப்பிக்க முனைகின்றது. அதன் அடிப்படைதான் தற்போதைய ரவி கருணாநாயக்க கைது முஸ்தீபு விவகாரம். இந்த விவகாரம் ரணில் - சஜித்தின் பக்கம் சாய்வதைத் தடுப்பதற்கான ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றதா? என்ற ஐயம் பலரிடமும் எழாமல் இல்லை.

சஜித் கூட்டணியைப் பொறுத்தமட்டில் சஜித் தலைமையிலான கூட்டணி என்பது சஜித் ஆதரவாளர்களிடையே புதிய உத்வேகத்தைப் பாய்ச்சியுள்ள போதிலும் தற்போதைய சூழ்நிலையில் வெற்றிக் கனியைச் சுவைப்பதற்கு அதுமட்டுமே போதுமானதல்ல. புதிய தலைமைத்துவத்தில் எதிர்காலத்தில் வெற்றிகளைப் பெறுவதற்குரிய அடித்தளம் இடப்பட்டுள்ளது என்று வேண்டுமானால் கூறலாம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தம்பக்கம் இழுப்பதற்கு முடியாமற் போனமை சஜித் கூட்டணிக்கு கிடைத்த ஒரு பின்னடைவேயாகும். எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் முன்னாள் அமைச்சர் குமாரவெல்கம போன்றோரின் ஆதரவு சஜித் அணிக்குக் கிடைத்துள்ளது. ஆனால் சந்திரிகா அம்மையாரின் ஆதரவு பெரியளவு மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. அவ்வாறு ஏற்படுத்துமாக இருந்தால் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அது எதிரொலித்திருக்க வேண்டும். அதேபோல குமாரவெல்கமவும் பெரியளவு வாக்கு வங்கியைக் கொண்ட ஒருவரல்ல.

மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தமட்டில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெருமளவு சோபிக்காது விடினும் பாராளுமன்ற தேர்தலிலே விகிதாசார தேர்தல் முறையின் உதவியுடன் கணிசமான ஆசனங்களைப் பெறவாய்ப்புள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் மற்றைய கட்சிகளோடு அது இணைந்து செயற்பட்டது. இப்போது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் JVPயின் வாக்கு வங்கியை சற்று உயர்வடையச் செய்யலாம். மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்த மட்டில் பிரதான கட்சிகளைபோல அது அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் செயற்பட முடியாது. ஏனெனில் அக்கட்சிக்கு அந்தளவுக்கு வாக்கு வங்கி இல்லை. எனவே இருக்கின்ற ஆசனங்களை அதிகரித்துக்கொள்ள அல்லது தக்கவைத்துக் கொள்ளவே அது முயற்சிக்கும். ஆனாலும் JVP ஐப் பொறுத்தளவில் அது கூட்டணி அமைப்பதில் அதிக நம்பிக்கையற்ற ஒருகட்சியாக இருந்து வந்திருப்பதை கடந்த காலங்கள் புலப்படுத்தும். தனித்துக் களமிறங்குவதையே அது விரும்புகின்றது. தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் போல அதன் அரசியல் செயற்பாடுகளில் ஊக்க சக்தி குறைந்துவிடாத வகையில் செயற்படுவது அதன் பாணியாகக் காணப்படுகின்றது. என்றோ ஒருநாள் இந்த நாட்டின் அரசியல் அதிகாரம் தன் கையில் வரும் என்ற ஒரு வித எதிர்பார்ப்புடன் செயற்படுகின்றது.

### 2/3 பெரும்பான்மை சாத்திய மாகுமா?

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளின்றி வெற்றி பெறமுடியாது என்ற நம்பிக்கை தகர்க்கப்பட்டது. ஆனால் பாரளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையின வாக்குக்கள் மட்டும் 2/3 பெரும்பான்மை பெறப் போதுமா? என்பது கேள்விக்குறியே. ஏனெனில் இந்த தேர்தலும் பழைய முறைப்படி விகிதாசார தேர்தல் முறையிலேயே நடைபெறப்போகின்றது. விகிதாசாரத் தேர்தல் முறையிலே 2/3 பெரும்பான்மை பெறுவதென்பது ஒரு முயற்கொம்பே. அதனால் தான் 1978 ஆம் ஆண்டின் அரசியற் திட்டத்தை உருவாக்கும் போது அப்போதைய ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தனவால் தந்திரோபாயமாக தீர்க்க தரிசனத்துடன் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அவ் அரசியற் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட கால அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவே உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த வகையில் இன்றும்கூட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலே 2/3 சாத்தியமில்லை. இருந்தபோதிலும் ஆளும் கட்சிக்கு 2/3 பெரும்பான்மை தேவைப்படுகின்றது.

ஏனெனில் 19 ஆவது அரசியல் திட்ட சீர்திருத்தம் என்பது பொதுஜன பெரமுன தரப்பைப் பொறுத்தவரையில் நீண்ட காலத் தலையிடிக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. 19 ஆம் சீர்திருத்தத்தின் மூலமே தகவலறியும் உரிமை மற்றும் ஜனாதிபதியானவர் தேர்தலின் பின்னர் பாராறுமன்றம் முதல் கூட்டத்திற்கு நியமித்த திகதியிலிருந்து நான்கரையாண்டுகளுக்குள் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது போன்ற ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டன. 18 ஆம் சீர்திருத்தத்தில் காணப்பட்ட ஜனாதிபதியானவர் எத்தனை தடவைகளும் ஜனாதி பதியாக தெரிவு செய்யப்படலாம் என்ற விடயம் 19 ஆம் திருத்தத்தில் இல்லாமல் செய்யப்பட்டு ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஆள் எவரும் அதன்பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தெரிவு செய்யப்பட தகைமையுடையவராகமாட்டார் என்று மாற்றப்பட்டது. இதைத் தவிர 19ஆம் சீர்திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புப் பேரவையானது சில உயர் பதவிகளுக்கு ஜனாதிபதியானவர் தான்தோன்றித்தனமாக ஆட்களை நியமிப்பதை மட்டுப்படுத்துகின்றது.

அச் சீர்திருத்தத்தில் காணப்படும் பல விடயங்களை மாற்றுவதற்கு அல்லது அச்சீர்சிருத்தத்தை கைவிடுவதற்கு ஆளும் தரப்பு எண்ணங்கொண்டுள்ளது, அதற்கு 2/3 பெரும்பான்மை தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் இதனை சாத்தியமாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### முஸ்லிம் கட்சிகளின் நிலை

தேசியவாதம் என்பது தான் பிறந்த நாட்டின் மீதான பற்றுணர்வாகும். இது தவிரதான் பிறந்த இனத்தின் மீது மதத்தின் மீதான பற்றுணர்வு உப தேசிய வாதமாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஒன்றுபட்டு வாக்களித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பெருவெற்றி பெறச் செய்தமை தேசியவாத உணர்வினாலாகும். 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பின் பின் முஸ்லிம் மக்கள் தாம் அதிகளவில் புறக்கணிக்கப்படுவதாக உணரத் தொடங்கினர். ஏற்கனவே முஸ்லிம் மக்களிடம் குடிகொண்டிருக்கும் உப தேசியவாத உணர்வு இன்னும் கூர்மையடைவதற்கு இக்குண்டு வெடிப்பு மேலும் வழிசெய்தது. இம்முறை முஸ்லிம் மக்கள் தமது வாக்குகளை கடந்த முறைகளை விட அதிகளவில் முஸ்லிம் தேசியவாதக் கட்சிகளுக்கு வழங்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.

### தமிழ்க் கட்சிகளின் நிலை

தமிழ்க் கட்சிகளை பொறுத்தளவில் பழைய குருடி கதவைத் திறவடி நிலை தான். தமிழர் அரசியல் வரலாற்றிலே தேசியவாத ஒற்றுமை என்பது ஒரு கானல் நீராகவே இருந்து வந்துள்ளமையை வரலாறு சுட்டி நிற்கின்றது. சிங்கள முஸ்லிம் மக்கள் தமது இனத்துவ உணர்வால் ஒன்றுபடுவது போல தமிழர் தரப்பால் முடியாமை என்பது தமிழ் இனத்தின் சாபக்கேடாகும். இந்தத் தேர்தலும் அதற்கு விதிவிலக்கல்ல. தமிழர் தரப்பைப் பொறுத்தளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணி தமிழ்த் தேசிய முன்னணி போன்ற தேசியவாதக் கட்சிகளுக்குள் கடுமையான போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது தமிழ்த் தேசிய வாக்குகள் பிரிக்கப்படும்.

### கொரோனாவும் தேர்தலும்

உலகம் முழுவதையும் கிலி கொள்ள வைத்துள்ள கொரோனாவின் தாக்கம் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. இந்தக் கொரோனா இலங்கையை தாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்தின் அசமந்தப் போக்கே காரணம் என சஜித் தலைமையிலான கூட்டணி பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டது.

ஜனாதிபதி தேர்தலின் போது எப்படி ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலுக்கு முன்னைய அரசாங்கத்தின் அசமந்தபோக்கே காரணம் என்று மகிந்த, கோட்டா தரப்பினர் பிரசாரம் செய்து வெற்றிக் கனியைப் பறித்தனரோ அதே தந்திரோபாயத்தை இம்முறை சஜித் கூட்டணி கையிலெடுத்துள்ளது. இது ஒருபுறமிருக்க இந்தக் கொரோனாவை அரச தரப்பும் தமது தேர்தல் வெற்றியை உறுதி செய்யப் பயன்படுத்துவதாக ஒருசாரார் கருத்துத் தெரிவிக்கின்றனர். உதாரணமாக கொரோனாவை கட்டுப்படுத்தும் முகமாகவே ஏப்ரல் 26ஆம் திகதி வரை பாடசாலைகள் மூடப்பட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் ஆசிரிய சங்கங்கள் அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை சீராக்குவதை வலியுறுத்தி மார்ச் 16,17,18 இல் நடத்தவிருந்த தொழிற்சங்கப் போராட்டத்தை முடக்கவே அவ்வாறு செய்யப்பட்டதாகவும் ஒரு கருத்துண்டு. தேர்தல் நெருங்குகின்ற காலத்தில் இவ்வாறான தொழிற்சங்கப் போராட்டங்கள் தேர்தல் வெற்றியில் பின்னடைவை ஏற்படுத்தலாம் என ஆளும் தரப்பு கருத இடமுண்டு. மேலும் மக்கள் அதிகம் சேரும் இடங்களைக் கட்டுப்படுத்துமாறும் அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. அவ்வாறானெனில் தேர்தல் காலத்தின் போது வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களில் அதிகசன நெருக்கடி ஏற்படும். அவ்வாறெனில் தேர்தலையன்றோ ஒத்தி வைத்திருக்க வேண்டும் என்பது ஒருசாராரின் கருத்து. மறுபுறம் கொரோனா வைரசின் தாக்கத்தை இலங்கை அரசாங்கம் இயன்ற விரைவில் வெற்றிகரமாக ஒருகட்டுக்குள் கொண்டு வருமாயின் அது ஆளும் தரப்பிற்கு சாதகமான ஒரு தேர்தல் பிரசாரமாக அமைந்து விடும். போதாக்குறைக்கு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல "புலிகளை அழித்த எமக்கு கொரோனா எல்லாம் ஒரு பொரு ட்டே இல்லை" என்று சாரப்பட இப்போதே கருத்து தெரிவிக்க ஆரம்பித்துவிட்டார். ஆக மொத்தத்தில் கொரோனா என்பது தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒருவிடயமாகி விட்டது.

# வடபகுதி மக்களின் நலன்களுக்கு உதவுகிறதா யாழ்.விமான நிலையம்?

வடபகுதி மக்களின் நலன்களுக்காக என்ற பெயரில், திறக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், யாருடைய நலன்களை முதன்மைப்படுத்துகிறது என்ற கேள்வி இப்போது மக்கள் மத்தியில் எழுந்திருக்கிறது.

பலாலி விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா, 300 மில்லியன் டொலரை வழங்க முன்வந்திருக்கிறது.

அவசர அவசரமாக முன்னைய அரசாங்கத்தினால் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை. எனவே அவற்றை மேம்படுத்துவதற்காகவே இந்தியா இந்த நிதியுதவியை வழங்கவிருக்கிறது.

கடந்த நவம்பர் மாதத்திலிருந்து, வாரத்தில் மூன்று பயணிகள் விமானங்களை சென்னைக்கு இயக்க ஆரம்பித்த எயார் இந்தியாவின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயார் நிறுவனம், கடந்த பெப்ரவரி 27ஆம் திகதியில் இருந்து தினமும் சேவையை நடத்தி வருகிறது.

சேவை ஆரம்பிக்கப்பட்ட மூன்று மாதங்களிலேயே நாளாந்த சேவையாக மாற்றப்பட்டிருப்பது முக்கியமான ஒரு விடயமாகும். இது விமான நிறுவனத்துக்கு போதிய வருமானம் கிடைக்கிறது என்பதைக் குறிக்கிறது.

இல்லாவிட்டால், தொடங்கிய சேவையை, நிறுத்தாவிட்டாலும், தொடர்ந்து வாரத்தில் மூன்று சேவைகளை நடத்தும் முடிவை மாத்திரமே அலையன்ஸ் எயார் எடுத்திருக்கும். மேலதிக சேவைகளை ஆரம்பித்திருக்காது.

யாழ்ப்பாணம்-சென்னை இடையே நாளாந்த விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் வடபகுதி பயணிகளுக்கு பொருளாதார ரீதியாக நன்மை தரும் ஒன்றாக இருக்கவில்லை என்பதே உண்மை.

இதனால், வடக்கிலுள்ள மக்கள் யாழ்ப்பாணம் விமான நிலையத்தை பயன்படுத்துவதை தமது முதல் தெரிவாக வைத்துக் கொள்ளவில்லை.


முன்னைய அரசாங்கத்தினால், தொடங்கப்பட்ட இந்த விமான சேவைக்கு இரட்டை வரி விதிக்கப்படுவதாகவும், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணைபோய் இருப்பதாகவும் குற்றம்சாட்டியிருந்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

இரட்டை வரி விதிக்கப்படுவதான குற்றச்சாட்டை தற்போதைய அரசாங்கமும் நிராகரித்திருக்கிறது. சேவையில் ஈடுபடும் அலையன்ஸ் எயார் நிறுவனமும் மறுத்திருக்கிறது.

ஆனால், கொழும்பு - சென்னை பயணத்துக்கான கட்டணத்தை விட, அதிக கட்டணத்தை யாழ்ப்பாணம்-சென்னைக்கான பயணத்துக்கு செலுத்த வேண்டியிருக்கிறது என்பது உண்மை.

அதைவிட, குறைந்தளவான மொத்தம் 23 கிலோ பொதிகளை, மாத்திரமே கட்டணமின்றி, எடுத்துச் செல்ல முடிகிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் அதிகாரிகள் வணிகர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து விட்டு, விளக்கமளித்திருந்தனர்.



யாழ்ப்பாணத்துக்கு சிறிய விமானங்களையே இயக்க முடிகிறது என்றும், பெரிய விமானங்களை இயக்கினால் கட்டணத்தைக் குறைக்க முடியும் என்பதே, கொழும்பை விட யாழ்ப்பாணத்துக்கு அதிகமாக விமான கட்டணம், அறவிடப்படுவதற்கு அவர்கள் கூறிய காரணம்.

72 ஆசனங்களைக் கொண்ட விமானமே, பலாலிக்கு இயக்கப்படுகின்ற நிலையில், சராசரியாக 55 பயணிகளே அதில் பயணிக்கின்றனர் என்றும், பயண நாளை அண்டி பயணச்சீட்டை கொள்வனவு செய்யும் போதே அதிக விலை கொடுக்க நேரிடும் என்றும், மூன்று வாரங்களுக்கு முன்னரே முன்பதிவு செய்தால் குறைந்த கட்டணத்தில் அதனை பெறலாம் என்றும் அவர்கள் ஆலோசனை கூறியிருந்தனர்.

72 ஆசனங்களைக் கொண்ட விமானங்களில், 55 ஆசனங்கள் நிரம்புவது என்பது, மிகவும் சாதகமான ஒரு விடயம். அதிக இலாபமீட்டும் நிறுவனங்கள்கூட மூன்றில் இரண்டுக்கும் குறைவான ஆசனங்கள் நிரம்பிய படியே பயணிக்கின்றன.

ஆனால் யாழ்ப்பாணம் -சென்னை விமானம், மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்கள் நிரம்பிய நிலையில் பயணிப்பது என்பது பெரிய விடயம்.

அடுத்து, மூன்று வாரங்களுக்கு முன்னரே, பயணச்சீட்டை கொள்வனவு செய்தால், குறைந்த விலைக்குப் பெறலாம் என்பதிலும் கூட உண்மை இருப்பதாக தெரியவில்லை.

அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் இணையத்தளத்தில் பெறப்பட்ட, மார்ச் 15ஆம் திகதி புறப்பட்டு, 22 ஆம் திகதி திரும்புவதற்கான ஒரு மாதிரி பயணச்சீட்டில், இருவழிப் பயணத்துக்கான முழுமையான கட்டணம், 31,037 ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளது.

17,500 ரூபாய் விமானக் கட்டணம். 11,002 ரூபாய் பயணிக்கான மொத்த வரிகள். ஏனைய மொத்த கட்டணங்கள் 2,535 ரூபாய் ஆகியவற்றை உள்ளடக்கியே இந்த கட்டணம் அறவிடப்படுகிறது.

அதேவேளை, நிறுவன அதிகாரிகள் குறிப்பிட்டது போல முன்கூட்டியே பயணச்சீட்டை முன்பதிவு செய்யும் வகையில், ஏப்ரல் 15 ஆம் திகதி புறப்பட்டு 20 ஆம் திகதி திரும்புவ தற்கான ஒரு மாதிரி பயணச்சீட்டு விமான நிறுவனத்தில் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் பெறப்பட்டது.

அதில், முழுமையான விமானக் கட்டணமாக, 32,837 ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், பயணிகளுக்கான வரிகளாக 11,002 ரூபாய் என்பதிலோ, ஏனைய கட்டணங்களான 2535 ரூபாயிலோ எந்த மாற்றமும் இல்லை. விமானக் கட்டணம், 17,500 ரூபாயில் இருந்து 19,300 ரூபாயாக அதிகரித்துக் காணப்படுகிறது.

ஆக, விமான நிறுவன அதிகாரிகளின் அறிவுரைப்படி, மூன்று வாரங்களோ அதற்கு முன்னரோ, பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்வதால், குறைந்த கட்டணத்தில் பயணிக்கலாம் என்பது கூட மாயைதான். இது ஒரு வியாபார தந்திரமாகவே தெரிகிறது.

இதே, ஏப்ரல் 15ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்டு, 20ஆம் திகதி சென்னையிலிருந்து திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டை, 31,153 ரூபாய்க்கு அதே நிறுவனத்தின் இணையத்தளத்தில் பெற முடிகிறது.

சிறிய விமானம், குறைந்தளவு பயணிகள் என்ற காரணிகளை வைத்து அதிக விலைக்கு விமான பயணச்சீட்டுகள் விற்கப்படுவது உறுதியாகிறது.

அடுத்து, யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்தில், இரட்டிப்பு வரி அறவிடப்படுகிறது என்பதும் பொய். கட்டுநாயக்க விமான நிலையத்தில் அறவிடப்படும், அதே 60 டொலர் வரி தான், பலாலிக்கும் அறவிடப்படுகிறது.

பலாலி - சென்னை மற்றும், கொழும்பு - சென்னை இடையே எலையன்ஸ் எயார் அல்லது எயார் இந்திய நிறுவனம் அறவிடும் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 11,002 ரூபாயே அந்த வரிகளாகும்.

ஆனால், பலாலி விமான் நிலையத்தின் ஊடாக சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்துக்கு ஒரு வருட வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதாகவும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் அறவிடப்படுவதைப் போன்ற வரிகள், கட்டண்ணங்கள் பலாலியில் அறவிடப்படுவதில்லை என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியிருக்கிறார்.இந்த இரண்டுமே பொய்யான தரவு களாகும்.

பலாலி வழியாகப் பயணிக்கின்ற பயணிகளிடம் 60 டொலர் அல்லது 11,002 ரூபாய் வரி அறவிடப்படுகிறது.

அடுத்து, கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏனைய கட்டணங்கள், வரிகளாக 1,751 ரூபாய் மாத்திரமே அறவிடப்படும் நிலையில், பலாலியில் 2,535 ரூபாய் அறவிடப்படுகிறது. மேலதிகமாக 784 ரூபாய் பலாலியில் கட்டணங்களாக அறவிடப்படுகின்றது.

கட்டுநாயக்கவுக்கு இணையான கட்டணங்கள், வரிகள் பலாலி விமான நிலையத்துக்கு விதிக்கப்படவில்லை, சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது போல அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியிருந்தாலும், பலாலிக்கான பயணிகளிடம் கட்டணங்கள், வரிகளாக கூடுதல் தொகை அறவிடப்படுகிறது என்பதே உண்மை.

பயணிகள் விமான சேவையே நடக்காத மத்தள விமான நிலையத்தின் ஊடாக பயணிக்கும் பயணிகளிடம், 60 டொலர் வரியை பாதியாக குறைக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, இரண்டு ஆண்டுகள் வரியே அறவிடப்படாது என்று அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய விமான நிலைய கட்டணங்கள், சலுகைகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பலாலி விமான நிலையத்தில், பயணிகளிடம் அறவிடப்படும் வரியை பாதியாகக் குறைப்பதற்குக்கூட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

பலாலி விமான நிலையம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் குறைந்த கட்டணமும், கூடுதல் பயணப் பொதிகளும் அனுமதிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்க எந்த தரப்பும் முன்வரவில்லை. இலங்கை அரசாங்கமும் இந்திய விமான நிறுவனமும் ஒருவரை ஒருவர் காரணம் காட்டி, வடபகுதி மக்களின் நலன்களின் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கின்றன.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மங்கையர் திலகம்
இயற்றியவர் : மருதகாசி
இசை : தட்ஷிணாமூர்த்தி
பாடியவர் : ஆர்.பாலசரஸ்வதி



நீல வண்ண கண்ணா வாடா
நீ ஒரு முத்தம் தாடா (2)
நிலையான இன்பம் தந்து
விளையாடும் செல்வா வாடா
நீல வண்ண கண்ணா வாடா

பிள்ளையில்லா கலியும் தீர
வள்ளல் உந்தன் வடிவில் வந்தான்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

பிள்ளையில்லா கலியும் தீர
வள்ளல் உந்தன் வடிவில் வந்தான்
எல்லை இல்லா கருணை தன்னை
என்னவென்று சொல்வேனப்பா (2)
நீல வண்ண கண்ணா வாடா
வானம்பாடி கானம் கேட்டு
வசந்த கால தென்றல் காற்றில் (2)
தேன் மலர்கள் சிரிக்கும் ஆட்சி
செல்வன் துயில் நீங்கும் காட்சி (2)
நீல வண்ண கண்ணா வாடா

தங்க நிறம் உந்தன் அங்கம்
அன்பு முகம் சந்திர பிம்பம்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
தங்க நிறம் உந்தன் அங்கம்
அன்பு முகம் சந்திர பிம்பம்

கண்ணால் உன்னை கண்டால் போதும்
கவலை எல்லாம் பறந்தே போகும் (2)

சின்னஞ்சிறு திலகம் வைத்து
சிங்காரமாய் புருவம் தீட்டி (2)

பொன்னாலான நகையும் பூட்ட
கண்ணா கொஞ்சம் பொறுமை காட்டு
நீல வண்ண கண்ணா வாட

நடுங்க செய்யும் வாடை காற்றே
ஞாயமில்லை உந்தன் செய்கை
தடை செய்வேன் தாளை போட்டு
முடிந்தால் உன் திறமை காட்டு

விண்ணில் நான் இருக்கும் போது
மண்ணில் ஒரு சந்திரன் ஏது
அம்மா என்ன புதுமை என்றே
கேட்கும் மதியை பாரு

இன்ப வாழ்வின் பிம்பம் நீயே
இணையில்லா செல்வம் நீயே
பொங்கும் அன்பின் ஜோதி நீயே
புகழ் மேவி வாழ்வாய் நீயே
நீல வண்ண கண்ணா வாடா

# வசந்த முல்லை மேலே மொய்த்த வண்டு

மருதகாசி, எழுத்துகளின் வழியே இன்றைக்கும் மக்கள் மத்தியில் தன் இருப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறார். அவர் மரபிலக்கியச் சாயல்களையும் தமிழ் மண்ணின் கலாசாரப் பெருமிதங்களையும் திரைப்படப் பாடல்களில் கொண்டு வந்தவர்.

அருணாசலக் கவிராயரின் படைப்புக்களில் உந்தப்பட்டு எழுதத் தொடங்கிய மருதகாசி, கல்லூரிக் காலத்திலேயே நாடகங்களுக்குப் பாட்டெழுதிப் பழகியிருக்கிறார்.

"சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமானது சிரிப்பு" எனத் தொடங்கும் 'ராஜாராணி' படப்பாடல் மருதகாசி எழுதியது. ஒருவாரகாலத்திற்கும் மேலாக உடுமலை நாராயணகவி எழுதியும் சரியாக வரவில்லையென்று மருதகாசியிடம் அப்பாடலைக் கலைவாணர் ஒப்படைத்திருக்கிறார். ஒப்படைத்த மறுநாளே பாடல் முழுவதையும் எழுதிப் பாராட்டுப் பெற்ற கதையையெல்லாம் மருதகாசி தமது 'திரைப்படப்பாடல்கள்' நூலில் தெரிவித்திருக்கிறார்.

"இன்னொருவர் தயவெதற்கு இந்நாட்டில் வாழ்வதற்கு இல்லையென்ற குறையும் இங்கே இனிமேல் ஏன் நமக்கு" என்று 'தங்கரத்தினம்' படத்தில் எஸ்.எஸ். ராஜேந்திரனுக்காக மருதகாசி எழுதிய வரிகளைப் புகழ்ந்து. அண்ணா ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறார்.

1963 முதல் 1967 வரை திரைத்துறைத் தொடர்பே இல்லாத மருந்தகாசிக்கு அப்போது ஆறுதல் வழங்கி ஆற்றுப்படுத்தியவர் உடுமலை நாராயணகவி.

விட்ட இடத்தைப் பிடிக்க வேண்டுமென மருதகாசி நினைக்கவில்லை. தனக்கு இடமோ படமோ வேண்டாமென்றுதான் ஒதுங்கியிருக்கிறார். ஆற்றல் மிக்க ஒருவர் அப்படி இருப்பதை யார்தான் பொறுத்துக்கொள்வர். விடாப்பிடியாக அவரை அழைத்து வந்து. தேவர் தாம் தயாரித்த மறு பிறவியில் எழுத வைத்திருக்கிறார்.

அதன்பிறகு "தேர்த் திருவிழா, விவசாயி" முதலிய படங்களுக்கு மருதகாசி எழுதிய பாடல்கள், அவரை மீண்டும் பழைய இடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றன. "நினைத்ததை முடிப்பவன்" திரைப்படத்தில் இரண்டு பாடல்கள் முடிந்திருந்த நிலையில், அந்தப் பாடல்களில் முழுத் திருப்தியடையாத எம்.ஜி.ஆர்., மருதகாசியை அழைத்திருக்கிறார்.

"நான் பொறந்த சீமையிலே நாலுகோடி பேருங்க அந்த நாலு கோடி பேரிலே நானும் ஒரு ஆளுங்க" என எழுதியிருந்த கண்ணதாசனின் வரிகளில் அவருக்குப் பிடித்தமில்லை. "எனக்காக தனித்துவமாக அப்பாடல் எழுதப்படவில்லையே" என்றிருக்கிறார். மருதகாசியோ "வரிகள் இயல்பாகவும் அழகாகவும் தானே இருக்கிறது" என்று எம்.ஜி.ஆரிடம் கண்ணதாசனுக்காக வாதிட்டிருக்கிறார்.

மருதகாசிக்கும் எம்.ஜி.ஆர். எண்ணுவதிலுள்ள நியாயத்தைப் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது. அதன்பின் அமைக்கப்பட்ட மெட்டிற்கேற்ப "கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும்" பாடலை எழுதிக்கொடுத்திருக்கிறார். அப்பாடலில் இரண்டாவது சரணத்தை "பொன் பொருளைக் கண்டவுடன் வந்தவழி மறந்துவிட்டு தன்வழியே போகட்டுமே" என்று மருதகாசி எழுதியிருக்கிறார். எழுதப்பட்ட சரணத்தை வாசித்த எம்.ஜி.ஆர். "பொன் பொருளைக் கண்டவுடன் வந்த வழி போவதில் தப்பில்லையே" எனக் கேட்டிருக்கிறார். தவிர, "தன்வழி, நல்வழி என்று நினைப்பவர்கள் அப்படித்தானே போவார்கள்" என்றும் கேட்டிருக்கிறார். அப்படியொரு கேள்வியை எம்.ஜி.ஆர். கேட்டதும் "பொன் பொருளைக் கண்டவுடன் வந்த வழி மறந்துவிட்டு கண்மூடிப் போகிறவர் போகட்டுமே" எனத் திருத்தித் தந்திருக்கிறார்.

நன்றாகக் கவனித்தால் ஒரு விடயம் தெளிவாகப் பிடிபடுகிறது.



கண்ணதாசனை விடவும் எம்.ஜி.ஆர்.தனது ஏற்றமான பாடல்களுக்குப் பட்டுக்கோட்டையையும் மருதகாசியையுமே நாடியிருக்கிறார்.

மருதகாசியையே அழைத்து. "விவசாயி" திரைப்படத்தில் "கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய் கருதாமல் எல்லோரும் ஒற்றுமையாய் பொறுப்புள்ள பெரியோர்கள் சொன்னபடி உழைத்தால் பெருகாதோ சாகுபடி" என்று எழுத வைத்திருக்கிறார். "கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய்" என்னும் வரிகள் போகிற போக்கில் எழுதப்பட்ட வரி அல்ல.

மருதகாசியின் வரிகளை பட்டுக்கோட்டையின் வரிகளாகவும் கண்ணதாசனின் வரிகளாகவும் நம்மில் பலபேர் எண்ணியிருக்கிறோம். குறிப்பாக "மனுசன மனுசன் சாப்புடுறாண்டா தம்பிப் பயலே" என்றதும் யோசிக்காமல் பட்டுக்கோட்டையாரே அப்பாடலை எழுதியதாகக் கருதுகிறோம். ஆனால், அப்பாடல் 1956 இல் வெளிவந்த "தாய்க்குப் பின் தாரம்" படத்திற்காக மருதகாசியினால் எழுதப்பட்டது. எம்.ஜி.ஆர். தன்னை ஒரு புரட்சிக்காரராகத் திரைப்படத்தில் நிறுவிக்கொண்ட முதல் பாடலாக அப்பாடலைக் கருதலாம். அதேபோல, "வசந்த முல்லை போலே வந்து அசைந்து ஆடும் பெண் புறாவே" என்னும் பாடல் கண்ணதாசன் எழுதியதாகப் பல குறிப்புகள் தெரிவிக்கின்றன. உண்மையில், அப்பாடலைஎழுதியவரும்மருதகாசிதான்.

1955 இல் வெளிவந்த "மங்கையர் திலகம்" திரைப்படத்தில் "நீலவண்ணக் கண்ணா வாடா" என்றொரு பாடல். எப்போது அந்தப் பாடலைக் கேட்டாலும், என்னையுமறியாமல் ஒருவித மனத் தூண்டுதலுக்கு ஆளாவேன். வரிகளின் இடையே மருதகாசி செய்திருக்கும் கற்பனைகள் அப்படிப்பட்டவை. குழந்தைக்குத் தாலாட்டு பாடும் நாயகி, அக்குழந்தைக்காக இயற்கையிடம் உரையாடுவதுபோல மருதகாசி எழுதியிருப்பார். "நடுங்கச் செய்யும் வாடைக் காற்றே நியாயமல்ல உந்தன் செய்கை தடை செய்வேன் தாளைப் போட்டு முடிந்தால் உன் திறமை காட்டு" என்ற வரிகளை அவர் எங்கிருந்து பெற்றிருப்பார் என யோசித்துக்கொண்டே இருக்கிறேன். மரபிலக்கியச் செழுமையை அதைவிடவும் அழகாக ஒரு திரைப்படப் பாடலில் கொண்டுவர முடியுமா என்பது சந்தேகமே.

மருதகாசியின் குறிப்பிடத்தக்க பாடல்களின் வரிசையைக் கவனித்தாலே அவர், எத்தகைய தமிழாய்ந்த பாடலாசிரியர் என்பதை உணர்ந்துவிடலாம். 'சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா, முல்லை மலர்மேலே, சமரசம் உலாவும் இடமே, வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே, ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை, காவியமா நெஞ்சின் ஓவியமா, கோடி கோடி இன்பம் பெறவே, உலவும் தென்றல் காற்றினிலே, நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே, மணப்பாற மாடுகட்டி, மாட்டுக்கார வேலா, ஆடாத மனமும் உண்டோ' என்பன போல முதல் வரியிலேயே தன்னைக் கவனிக்க வைத்துவிடும் பேராற்றல் அவருக்கு இருந்திருக்கிறது.

அவருடைய பதிப்பில் வெளிவந்த பாடல்களைப் பற்றித் தனிப் பட்டியலே என்னிடமிருக்கிறது. "தென்றல் உறங்கிய போதும் திங்கள் உறங்கியபோதும் கண்கள் உறங்கிடுமா காதல் கண்கள் உறங்கிடுமா?" என்று அவர் எழுதிய வரிகள், எத்தனை பாடலாசிரியர்களின் வரிகளில் தென்படுகின்றன என்பதை நீங்களே யூகிக்கலாம்.

இன்றுவரை "சமரசம் உலாவும் இடமே" பாடலுக்கு இணையான ஒரு பாடல் திரைப்படத்தில் வரவில்லை. சித்தர்களின் சொற்களை உள்வாங்கி, மரணத்தின் வலி நிறைந்த சூழலைக் கொண்டாடும்படி எழுதியிருக்கிறார். அவரே "மனமுள்ள மறுதாரம்" என்ற திரைப்படத்தில் "தூங்கையிலே வாங்குற மூச்சு இது, சுழி மாறிப் போனாலும் போச்சு" என்றும் கூறியிருக்கிறார். அதையெல்லாம்விட, "ஏர்முனைக்கு நேர் இங்கே" என்னும் பாடலில், விளைந்து நிற்கும் கதிருக்கு ஓர் உவமை சொல்லியிருக்கிறார். அதற்கு நிகரான ஒரு கற்பனையை இதுவரை யாருமே சிந்திக்கவில்லை. "வளர்ந்துவிட்ட பருவப் பெண்போல் உனக்கு வெட்கமா தலை வளைஞ்சு சும்மா பாக்குறியே தரையின் பக்கமா?" என்று ஒரு திரைப்படப்பாடலைக் காவியப் பண்பு நிறைந்ததாக அவரால் மட்டுமே எழுத முடிந்திருக்கிறது. சொல்லாட்சிகளே திரைப்படப்பாடல்களைப் புதிதாகக் காட்டுகின்றன. மருதகாசியை முந்தைய தலைமுறைப் பாடலாசிரியராக நான் கருதியதில்லை.

ஏனெனில், அவர் பாடல்களை ஊன்றி வாசிக்கையில் காலம் கடந்தும் நிற்கக்கூடியவை மட்டு மல்ல, காலத்தை ஒட்டியும் நிற்கக் கூடிய பாடல்களை எழுதியிருப்பவரே மருதகாசி. "விந்தை மிகு மகுடி முன்னாலே நாகத்தைப் போலே" என்று அவரே ஒரு பாடலில் எழுதியிருக்கிறார். மகுடி இசைக்கு நாகமே மயங்குமெனில், மருதகாசியின் பாடல் மகுடிக்கு முன்னால் நாம் எம்மாத்திரம்?




# பிக்பாஸ் சீசன் 4 எப்போது தெரியுமா?




பிக்பாஸ் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரையும் நிகழ்ச்சியை பார்க்க ஆர்வத்தை தூண்டி விட்டது என்றே சொல்லலாம். ஹிந்தியில் சல்மான் கான் அண்மையில் தான் சீசன் 13 முடிவு பெற்றது.

கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி மொழிகளில் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சி இளம் தலைமுறையினரிடம் ஒரு மோகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே சொல்லலாம்.

தமிழில் இதுவரை கமல்ஹாசன் தான் 3 வருடங்களாக தொகுத்து வழங்கி வருகிறார். ஆனால் தெலுங்கில் ஜீனியர் எண்டிஆர், நானி, நாகார்ஜுனா என அடுத் தடுத்த சீசன்களை தொகுத்து வழங்கி வந்தனர்.

இந்நிலையில் 4 வது சீசன் ஜுன் மாதம் தொடங்கவுள்ளதாகவும் இதை தெலுங்கு சினிமா சுப்பர் ஸ்டார் மகேஷ் பாபு தொகுத்து வழங்குவார் என சொல்லப்பட்டு வருகிறது.

மேலும் பிக்பாஸ் தமிழ் வெர்சன் செப்டெம்பர் மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விவேக் கூலிங்கிளாஸ் போடுவது இதனால் தானாம்

நடிகர் விவேக் ரசிகர்களால் இன்றும் கொண்டாடப்படும் நடிகர். இவர் நடிப்பில் இந்த வாரம் தாராள பிரபு படம் திரைக்கு வந்துள்ளது.

இப்படம் ரசிகர் களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது, இதை தொடர்ந்து படக் குழு மகிழ்ச்சியில் உள்ளது.

இந்நிலையில் நடிகர் விவேக் பழைய படங்கள் பலவற்றிலும் கண்ணாடி அதுவும் கூலிங் க்ளாஸ் அணிந்தே நடித்திருப்பார்.

அது ஏன் என்று சமீபத்தில் ஒரு பேட்டியில் அவரே கூறியுள்ளார். -விவேக்கிற்கு இரவு நேரங்களில் எப்படியான காட்சியிலும் நடித்துவிடுவாராம்.

ஆனால், பகல் நேரத்தில் கண்கள் வெளிச்சத்தில் கொஞ்சம் சரியாக தெரியாமல் போகுமாம், இதனால், ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமப்பட்டுள்ளார். பிறகு தன் பவர் க்ளாஸையே கூலிங் க்ளாஸாக மாற்ற, இதன் பிறகு தான் படங்களில் எப்போதும் விவேக் கண்ணாடி அணிந்தே நடித்தாராம்.






# மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்

## இந்தியாவின் தோல்வியும் அவுஸ்திரேலியாவின் தொடர் வெற்றியும்

இந்த முறை மிஸ் செய்திருப்பது மகளிர் அணி. இதன்மூலம் ஐ.சி.சியின் நொக் அவுட் போட்டிகளுக்கும் இந்திய கிரிக்கெட்டுக்குமான பந்தம் நீடிக்கிறது. ஐந்தாவது முறையாக உலகக்கோப்பையைக் கையில் ஏந்தியிருக்கிறது அவுஸ்திரேலியா. இந்தியாவின் தோல்விக்கும் அவுஸ்திரேலியாவின் தொடர் வெற்றிகளுக்கும் கிரிக்கெட்டைத் தாண்டிப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலில் அவுஸ்திரேலியாவில் நடந்தது என்ன எனப் பார்ப்போம்.

**"இது போதும் எங்களுக்கு" ஆட்டிட்யூட்!**

இந்த உலகக்கோப்பை முழுக்கவே "இதுபோதும் எங்களுக்கு" என்கிற மனநிலையில் இந்திய அணி விளையாடியதுதான் இறுதிப்போட்டியின் மிகப்பெரிய தோல்விக்கான முதல் காரணம். உலகக்கோப்பை தொடங்குவதற்கு முன்பாக அவுஸ்திரேலியாவில் முத்தரப்பு இருபது-20 போட்டிகளில் விளையாடியது இந்திய அணி. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுடன் ஒரு வெற்றி, ஒரு தோல்வியைப் பெற்று இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் வீழ்ந்தது. இந்தத் தொடரிலேயே இந்தியாவின் பட்டிங் சுமார் என்பது தெரிந்துவிட்டது.

ஷெஃபாலி சில சிக்ஸர்கள் அடிக்க, ஸ்மிருதி மட்டுமே கொஞ்சம் பெரிய இன்னிங்ஸ் ஆடினார். கப்டன் ஹர்மன்ப்ரீத் ஒரு போட்டியில் மட்டும் 40 ஓட்டங்களைத் தாண்டியிருந்தார். மற்றப் பட்ஸ்மேன்கள் எல்லாம் அவரேஜ். அப்போதே இந்தியாவின் பயிற்சியாளரும் கப்டனும் உஷார் ஆகியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் பெரிதாகக் கண்டுகொண்டதுபோல் தெரியவில்லை. அந்த அலட்சியம் உலகக்கோப்பையில் பளிச்செனத் தெரிந்தது.

ஃபார்மில் இருந்த ஸ்மிருதி ஃபார்ம் அவுட் ஆக, ஷெஃபாலி மட்டுமே இந்தியாவின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம். ஷெஃபாலி கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம்தான் இந்திய அணிக்குள் வந்தவர், 16 வயதேயான ஷெஃபாலி. உலகக்கோப்பைக்கு முன்புவரை 15 போட்டிகளில் மட்டுமே விளையாடிய அனுபவம் கொண்டவர். ஆனால், அவர் மேல்தான் முழுப் பாரத்தையும் இறக்கியிருந்தது இந்தியாவின் டாப் ஆர்டர். இதனால் ஷெஃபாலியை மட்டும் வீழ்த்தினால்போதும், இந்தியாவின் பட்டிங்கைக் குலைத்துவிடலாம் என்ற ஒற்றை டார்கெட்டுடன் வியூகம் அமைத்தது அவுஸ்திரேலியா. முதல் ஓவரிலேயே ஷெஃபாலியைத் தூக்க, டாப் ஆர்டர் நிலை குலைந்தது. பவர்ப்ளே முடிவதற்குள்ளாகவே 4 விக்கெட்டுகள் இழந்து தோல்வியை நோக்கிப் போனது இந்தியா.

**வியூகம் இல்லா பௌலிங்!**

பட்ஸ்மேன்கள் தடவித் தடவி 140 ஓட்டங்களுக்குள் அடித்தால்போதும் பௌலிங்கில் சமாளித்துவிடலாம் என்கிற நினைப்போடுதான் உலகக் கோப்பைக்குள் வந்தார் கப்டன் ஹர்மன் ப்ரீத். அதற்கேற்றது போல லீக் போட்டிகளில் பூனம் யாதவ், ராதா யாதவ், தீப்தி ஷர்மா என ஸ்பின்னர்கள் விக்கெட்டுகள் எடுக்க, எளிதில் வெற்றிகளைப் பெற்றது இந்தியா. அதனால் ஸ்பின்னர்களைச் சமாளித்தால்போதும் என ஷார்ட்கட்டில் காரியத்தை முடித்தார்கள் அவுஸ்திரேலியாவின் ஓப்பனர்கள் ஹீலியும் மூனியும்.

இந்திய அணியில் திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லை. ஸ்பின்னர்களின் கான்ஃபிடன்ஸை உடைத்துவிட்டால்போதும் என முடிவெடுத்து தீப்தி ஷர்மாவின் முதல் ஓவரிலேயே பவுண்டரிகளைப்பறக்க விட்டார் அலீஸாஹீலி. பூனம் யாதவ், ராதா யாதவ் என யாருடைய பௌலிங்குக்கும் அங்கே மதிப்பில்லை. ஹீலிக்கும் மூனிக்கும் சர்ப்ரைஸ் கொடுக்கும் எந்த டெலிவரியும் பூனமின் விரல்களுக்குள் இருந்து வெளிப்படவில்லை.




பட்டிங் மோசம்... பௌலிங்கிலும் வேரியேஷன் இல்லாமல்போனதோடு ஃபீல்டிங்கிலும் கோட்டைவிட்டதுதான் இன்னும் சோகம். இன்னிங்ஸ் முடிவில் அவுஸ்திரேலியாவின் ஓப்பனர்கள் இருவரும் தலா 75, 78 ஓட்டங்கள் அடித்திருந்தனர். இவர்கள் சிங்கிள் டிஜிட்டில் இருக்கும்போதே இருவரின் கட்சுகளையும் கோட்டைவிட்டனர் இந்தியாவின் ஃபீல்டர்கள். போதாததுக்கு ஹர்மன்ப்ரீத் கவர் ஃபீல்டிங் செட் அப்பிலும் சொதப்ப, பவுண்டரிகள் தாறுமாறாக எகிற ஆரம்பித்தன. சிங்கிள் எல்லாம் டபுள் போகப்போக நம்பிக்கையை இழந்து, லைன் அண்ட் லெங்த்தை மறந்து ஸ்பின்னர்கள் ஃபுல்டாஸ்களாகப் பந்துகளைப் போட சிக்ஸர்கள் நிற்கவில்லை.

**ஏன் இந்தத் தோல்வி?!**

அவுஸ்திரேலியாவுடனான இறுதிப் போட்டிக்கு முன்பாக இந்திய அணி தயார் ஆவதற்கு ஒரு வார இடைவெளி இருந்தது. அவுஸ்திரேலியாவை வீழ்த்த வேண்டும் என்றால் பட்ஸ்மேன்கள் சிறப்பாக ஆட வேண்டும், பட்டிங் சிறப்பாக இருக்கவேண்டும் என்றால் பட்டிங் ஆர்டரில் ஏதும் மாற்றங்கள் செய்யலாமா, பட்டிங் லைன்அப்பை இன்னும் பலப் படுத்தலாமா? என எந்தச் சிந்தனையும் இல்லாமல் அதே லைன் அப்போடு இந்தியா களமிறங்கியது சாதாரண கிரிக்கெட் ரசிகர்களுக்கே அதிர்ச்சி. அவுஸ்திரேலிய அணிக்கு ஒரு கட்டத்தில்கூட இந்தியாவின் பௌலிங்கோ பட்டிங்கோ சவால் விடவில்லை.

**அவுஸ்திரேலியாவின் தொடர் வெற்றி எப்படி?!**


ஐந்தாவது முறையாக அவுஸ்திரேலியா உலகக் கோப்பையை வெல்வது சாதாரணமாக நடந்து விட்டதல்ல. 2007 இல் இருந்தே மகளிருக்கான இருபது-20 போட்டிகளை நடத்தி வருகிறது அவுஸ்திரேலியா. 2015 முதல் சர்வதேச வீராங்கனைகள் பங்கேற்கும் வகையில் பிக்பேஷ் இருபது-20 லீக் போட்டிகளை நடத்தி வருகிறது. இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, மேற்கு இந்தியத்தீவு என எல்லா நாட்டு வீராங்கனைகளும் அவுஸ்திரேலியாவில் விளையாடி வருகின்றனர்.


மிகப்பெரிய பயிற்சியையும் நம்பிக்கையையும் இந்த பிக்பேஷ் லீக் போட்டிகள் கொடுக்கின்றன. அலீஸா ஹீலி, பெத் மூனியெல்லாம் பிக்பேஷ் லீகிலேயே பல சாதனைகள் படைத்தவர்கள். அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகமும் ரசிகர்களும் ஆண்கள் கிரிக்கெட்டுக்கு நிகராகப் பெண்கள் கிரிக்கெட்டையும் மதிக்கிறார்கள். அதனால்தான் அவுஸ்திரேலியா தொடர்ந்து உலகக் கோப்பைகளை வெல்கிறது.

ஆனால், இந்தியாவில் நிலைமை அப்படியில்லை. உலகக்கோப்பைப் போட்டிகள் நடக்கும் போதுதான் இந்தியாவில் மகளிர் கிரிக்கெட் அணி இருப்பதே நம் கவனத்துக்கு வரும். பிக்பேஷ் லீக் போன்று மகளிர் ஐ.பி.எல். போட்டிகளை நடத்தாமல் இருக்க பி.சி.சி.ஐ. சொல்லும் காரணம் ரசிகர்களிடையே பெரிய ஆர்வம் இல்லை என்பதுதான். ஆனால், அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் முதலில் ரசிகர்களிடையே ஆர்வம் இல்லையென்றாலும் போட்டிகளை நடத்தியது. மகளிர் கிரிக்கெட்டை மிகப்பெரிய அளவில் விளம்பரப்படுத்தி, கூட்டத்தை ஸ்டேடியத்துக்குள் வர வைத்தது. உலகின் பணக்கார கிரிக்கெட் போர்டான பி.சி.சி.ஐக்கு இது செய்ய முடியாத காரியம் அல்ல. அவர்களுக்குப் பணமும் தடையாக இருக்க முடியாது. நிர்வாகத்தில் இருப்பவர்களின் மனம் தான்தடையாக இருக்கிறது போலும். ஆண்கள் அணிக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை, அதே பயிற்சிகளை, அதே வாய்ப்புகளைபெண்கள் அணிக்கும் கொடுத்தால் இந்திய மகளிர் அணி 5 முறையல்ல 50 முறைகூட உலகக் கோப்பையை வெல்லும்.



கணவன்:
உன்னைக்
கட்டினதுக்குப் பதிலா
ஒரு எருமை மாடைக்
கட்டியிருக்கலாம்.
மனைவி:
ஆனா அதுக்கு
எருமை மாடு
சம்மதிக்கணுமே?






அப்பா:
"ரேங் கார்ட் எங்கடா?"
மகன்: "இந்தாங்கப்பா
ரேங் கார்ட்"
அப்பா: " அடப்பாவி
அஞ்சு சப்ஜெக்ட்லேயுமா
பெயில்? இனிமே என்னை
அப்பானு கூப்பிடாதடா"
மகன்: "சரிடா மச்சான்
கையெழுத்துப் போடு"





கணவன்: சினிமாவுக்கு போக டிக்கெட்
வாங்கிட்டு வந்திருக்கிறேன்!
மனைவி: சரிங்க, நான் போய் ட்ரெஸ்
பண்ணிட்டு வந்திடுறேன்! கொஞ்சம் லேட்
ஆயிடிச்சின்னா என்னங்க பண்றது
கணவன்: ஒண்ணும் பிரச்சினை இல்ல.
டிக்கெட் நாளைக்குத்தான் வாங்கி
வந்திருக்கிறேன்.



# படித்ததில் பிடித்தது

ஒவ்வொரு நிமிடமும் யாரோ ஒருவர் இந்த உலகத்தை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் அனைவரும் நமக்கே தெரியாமல் அந்த "வரிசையில்" நின்றுகொண்டிருக்கிறோம். நமக்கு முன் எத்தனை பேர் இருக் கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது.

நாம் வரிசையில் , எந்த இடத்தில் பொருத்தப்படுகிறோமோ அந்த இடம் மாறப்போவதில்லை.

நாம் வரிசையின் பின்புறம் செல்ல முடியாது. நாம் வரிசை யிலிருந்து வெளியேறவும் முடியாது. நாம் வரிசையைத் தவிர்க்க முடியாது.

எனவே நாம் வரிசையில் காத்திருக்கும்போது - நம்முடைய தருணம் வரும் என்று உணர்ந்து வாழுங்கள்.

தேவையானவற்றிற்கு முன்னுரிமைகள் செய்யுங்கள்.

பிரியமானவர்களுக்காக நேரம் ஒதுக்குங்கள்.

நியாயமானவற்றிற்காக குரல் கொடுங்கள்.உங்கள் முன்னால் எவரையும் பசியில் இருக்க விடாதீர்கள்.

சின்ன சின்ன தருணங்களையும் அழகாக்குங்கள்.

சுற்றியுள்ளவர்களை சிரிக்க வையுங்கள். புன்னகை செய்யுங் கள். அன்பை உருவாக்குங்கள். சமாதானம் செய்யுங்கள்.

நீங்கள் நேசிப்பவர்களிடம் நேசத்தை சொல்லுங்கள்.மகிழ்ச்சி யாயிருங்கள், எந்த கவலையும் எதையும் மாற்றப்போவதில்லை...

உன்னை சிலர் விரும்புவார்கள் பலர் வெறுப்பார்கள் உன்னை பற்றி தெரியாதவர்கள் வெறுப்பார்கள்.அவர்களை கணக்கில் எடுத்துக்கொள்ளாதே உன் மீது நம்பிக்கை வை.

ஒன்றை புரிந்து கொள் நம் குடும்பத்தினர் மட்டுமே நம் மீது எல்லையில்லா அன்பை வெளிப்படுத்துவார்கள் அவர்களை நீயும் விரும்பு மரியாதை கொடு.

உன் வழியில் வரும் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ள நீ தயாராக இரு.உனக்கு கிடைக்கும் எதையும் அலட்சியமாக எண்ணாதே எல்லோரையும் போல நீயும் தோல்வியடைவாய் ஒவ்வொரு தோல்வியிலிருந்தும் எழுவேன் என உறுதி கொள்.முதல் முறை முடியாமல் போனாலும் தொடர்ந்து முயற்சி செய்

உன் மனம் என்ன சொல்கிறதோ அதற்கேற்ற படி உன் கனவை நோக்கி செல்.அன்பாக இரு. பெரிதாக கனவு காண்பது எத்தகைய மாற்றங்களை உருவாக்கும் என்பதை உலகுக்கு தெரியப்படுத்து.




## சுவேத்தா



போன வருசம் முகத்தை மூடினா பிரச்சினை...
இந்த வருசம் முகத்தை மூடாட்டி பிரச்சினை
வாழ்க்கை ஒரு வட்டம் பார்த்தேலா

## சங்கீதா

காலைல பாங்குக்கு போயிருந்தபோது
நாலைஞ்சு பேர் மாஸ்க் போட்டுட்டு
வந்திருந்ததைப் பார்த்து அப்படியே
நடுநடுங்கிப் போயிட்டேன்
அப்புறம் அவங்க வந்து எங்களுக்கு
கொரோனா வைரஸ் எல்லாம் இல்லை.
பாங்கைக் கொள்ளையடிக்கத்தான்
வந்திருக்கோம்னு சொன்ன
அப்புறம்தான் அப்பாடான்னு
நிம்மதியா மூச்சை விட்டேன்

## மோகன்

அன்பே இருவரும் கொடிநடையாக
அமெரிக்காவை வலம் வருவோம்



கொரோனா வந்து செத்துருவ மூதேவி




## கஜலக்சன்



டேய் இவன் இருமுறான். கண்டிப்பாக கொரோனா
வைரஸாதான் இருக்கும். ஹொஸ்பிட்டலுக்கு
தூக்குங்கப்பா. அட பரதேசிங்களா எனக்கு
ட்ரெஸ் அலர்ஜிடா என்ன விடுங்கடா

## மஞ்சு



## அபிதன்



ராமு, மணி இருவரும் ரயிலில் சந்தித்துக்
கொண்டனர், அவ்வளவு கூட்டம் அசையக்கூட
முடியவில்லை. மணி சத்தமாக ராமுவைப் பார்த்து
கேட்டான். எப்படா சீனாவில் இருந்து வந்தே.
அடுத்த நொடி ரயில் காலியானது இருவரும்
ஜாலியாகப் பயணித்தனர்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 215

# உணவே இறைவன் (Food is God)

**கடந்தவாரத் தொடர்சி....**

ஆரோக்கியமான உணவு விதிகளோடு உணவைத் தயாரிப்பதிலும் சுத்தம் பேணுதல் அவசியம். ஒரு முதுமொழி கூறுவார்கள் **"பாக சுத்தி, பாத்திர சுத்தி, பரிமாறல் சுத்தி"** உணவை சுத்தமாக சமைத்தல், தூய பாத்திரங்களில் பேணுதல், உணவு பரிமாறும் போதும் உண்ணும் போதும் தூய்மையாக சுத்தமாக இருத்தல் எல்லாமே சுக வாழ்வுக்கு



அவசியமாகும். இதைக் கவனியாத நிலையில் பல தொற்று நோய்கள் உதாரணமாக நெருப்புக்காய்ச்சல், பேதிநோய், வயிற்றோட்டம் போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு.

சுருங்கக் கூறின் உணவு எல்லாவிதமான கூறுகளையும் கொண்ட சீர் அல்லது சம உணவாக **(Balanced Diet)** இருத்தல், உணவை ருசிக்காக அன்றி காலம் அறிந்து உண்ணல், அளவோடு உண்ணல், உண்ணும் பொழுது அமைதியாக ஆறுதலாக மன ஒழுக்கத்துடன் (அதாவது ஏனைய வேலைகளை ஒதுக்கி படபடப்பின்றி உண்ணுதல், **TV** பார்த்துக் கொண்டோ, கோபம் படபடப்புடன் கனத்துக் கொண்டோ உண்ணுதல் தவிர்த்தல்) இவை எல்லாம் நாங்கள் நோய் இன்றி பூரண ஆயுளுடன் வாழ வழிவகுக்கும்.

தூய உணவு என்பதில் தாவர உணவே மிக மிக உயர்ந்தது. சிறந்தது. ஆரோக்கியம் தருவது, அன்பைப் பெருக்குவது, அமிர்தம் போன்றது. தாவர உணவில் இல்லாத சக்தியே இல்லை என்பது உறுதி ஆராய்ச்சி தந்துள்ள உண்மை. எங்கள் ஆரோக்கியத்துக்கு அவசியமான மாப்பொருள் **(Starch)**, புரதச்சத்து **(Protein)**, கொழுப்புச் சத்து **(Fat)**, இரும்புச் சத்து **(Iron)**, உயிர்ச்சத்து **(Vitamin)**, உலோக கூறுகள் **(Minerals)** எல்லாம் காய், பழ வகைகள், கீரை வகைகள், தானிய வகைகள், பால், நல்லெண்ணெய், சுத்தமான பசு நெய் போன்றவற்றில் தேவையான அளவு உண்டு. உணவு வல்லுநர்கள் மூலம் **(Dietician)** இவற்றை நாம் நன்கு அறிந்து கொண்டு எமக்குத் தேவையான உணவைப் பயன்படுத்தி எமது உடல் உள நலத்தை சீராகப் பேணலாம்.

இயற்கை எமக்குக் காட்டுவதும் தாவர உணவின் உயர்வை எமக்கு விளக்குகிறது. நீண்ட ஆயுளுடன் தேக ஆரோக்கியத்துடன் நாங்கள் வாழலாம். யானை, பசு, எருது, மான், குதிரை, ஒட்டகம் போன்ற ஆக்க வேலைகள் செய்கின்ற விலங்குகள் எல்லாம் தாவரங்களையே உண்கின்றன. நீண்ட காலம் வாழ்கின்றன. யானை 100 வருடங்கள் வரை வாழ்கின்றது. குதிரை சக்தி அளப்பரியது. மானின் வேகம், எருதின் உழைப்பும் பசுவின் புனிதம் இவை பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்.

மாறாக மாமிசங்களை உண்ணும் மிருகங்கள் 10-15 வருடங்களே உயிர் வாழ்கின்றன. உண்பது, உறங்குவது தவிர அவை வேறு என்ன செய்கின்றன? மாமிச உணவு பல வகையான ஆரோக்கியக் குறைவுகள், அமிலம், குடல்புண், வாதநோய்கள், தோல் வியாதிகள் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைகிறது. விஞ்ஞான பூர்வமான நவீன மருத்துவர்கள் கண்ட உண்மை பொருளாதார வகையிலும் ஒரு மிருகத்துக்கு 10-15 கிலோ தாவர உணவு அளிப்பதன் மூலம் இருவர் உண்ணக்கூடிய ஒரு கிலோ இறைச்சியைத் தான் பெற முடியும் என அறிய முடிகிறது.

சுருங்கக்கூறின் கிருமி நோய்கள், குடற்புண் **(Ulcer)** வாத நோய்கள், தோல் நோய்கள், ஆஸ்துமா, உளநோய், இருதய நோய், இரத்த அழுத்தம், புற்றுநோய், சிறுநீரக கோளாறுகள் இவை எல்லாம் உணவிலிருந்து அசைவ உணவு நீக்கப்படுமிடத்து எங்களை அணுகுவதில்லை என்பதை மருத்துவ நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

எனவே நாங்கள் நீடுவாழ்வதற்கு, ஆற்றல் மிக்கவர்களாக அறிவு, அமைதி, நற்குணம் கூடி வாழ்வதற்கு உதவும் தாவர உணவுகளை உண்ணுதல் சிறந்ததாகும். தாவர உணவு உண்பவர்களும் நோயின்றி வாழ்வதற்கு அளவோடு தேவை அறிந்து வகை தெரிந்து உண்ண வேண்டும். போதியளவு கொதிக்க வைத்து ஆறிய நீர், இயற்கையான பழச்சாறுகள், (போத்தல்களில் அடைத்தவை அல்ல) அருந்த வேண்டும். இனிப்பு பலகாரங்கள், **Chocolate , Ice Cream** போன்ற இனிப்பு வகைகள், புளிப்புப் பண்டங்கள் இவற்றை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.





நிறைவாக நாம் உண்ணும் உணவு நமக்கு உடல் வளத்தைத் தருவதோடு அமையாமல் நம் உள்ளத்தையும் ஓங்குவிக்கிறது. எனவே நாம் உணவு உட்கொள்ளும் போது அமைதியாக மனமகிழ்வோடு உண்ண வேண்டும். இயன்றளவு குடும்பத்தினருடன் அன்பர்களுடன் சேர்ந்து உண்ணுதல் நன்று. தொலைக்காட்சி பார்த்துக் கொண்டோ வீண் உணர்ச்சிகளை தீண்ட்க்கூடிய பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டோ ஒருபோதும் உணவு உட்கொள்ளலாகாது. படபடப்பாக, அவசரமாக உண்ணக்கூடாது.

உணவு அருந்த முன்னரும் பின்னரும் பிரார்த்தனை செய்து இறைவனுக்கு நாங்கள் நன்றி சொல்வதோடு நாம் உண்ணும் உணவை நாம் பெறுவதற்கு எத்தனை பேர் உழைக்கிறார்கள் என்று நினைவுகூர்ந்து அவர்கள் எல்லோருக்காகவும் பிரார்த்தித்து உண்ண வேண்டும். இது எங்களுக்கு மன நிறைவு, மனமகிழ்வு தரும். அதனால் எமது உடல் சீராக இயங்கும். மனதுக்கும் எண்ணங்களுக்கும் உடலுக்கும் நெருங்கிய உறவு உண்டு என்பதை நாம் அறிந்துகொள்ள, விளங்கிக் கொள்ள வேண்டும்.

இறுதியாக வெளிவந்த **New England Journel of Medicine (NEJM)** என்னும் மருத்துவ நூலில் உணவு உண்ணும் முறையில் நாம் **"விரதம் இருப்பது"** எமது உடல் நலத்தை பேணுவதோடு பல நோய்களில் இருந்து எமது உடலை பாதுகாக்கின்றது. பல காலம் வாழ முடியும் என்ற ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தி கூறியுள்ளார்கள். எனவே நாம் எமது வாழ்க்கையில் கோயில் தரிசனம். விரதம், சைவ உணவு, தியானம் என்பவற்றை கடைப்பிடித்து வாழ்வோமாயின் நோய் இன்றி மனமகிழ்வுடன் பலகாலம் இளமையாக வாழலாம்.

**அளவோடு உண்போம்.**
**அமைதியாக உண்போம்**
**தூய உணவை உண்போம்**
**தூய்மையான உடல் சிந்தனையுடன்**
**உண்போம்**
**குடும்பத்தினருடன் உண்போம்**
**நன்றி உணர்வுடன் உண்போம்**
**நலம் என்றும் பெறுவோம்**

**முற்றும்**

தம்பிப்பிள்ளை பேரானந்தராசா,
பொது வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை.